www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூலை 2008
ரூ. 7.00



## எகிறும் விலைவாசி: காங்கிரசு–பா.ஜ.க. அரசுகளின் வில்லத்தனங்களும் முதலைக் கண்ணீரும்

படிப்பகம்

www.padippakam.com

# சமூக விரோதிகளின் கூடாரமாகும் சி.பி.எம்.

## விழுப்புரம் மாவட்டம் – காரப்பட்டு கிராமத்தில் சி.பி.எம். குண்டர்கள் நடத்திய கொலைவெறியாட்டம், அக்கட்சியின் மக்கள் விரோதத் தன்மையை நிரூபிக்கிறது.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்டது காரப்பட்டு கிராமம். இந்தக் கிராமம் தமிழகத்திற்கு முன்னுதாரணமான கிராமம். நிலம் கிரயம் செய்வதும், குத்தகைக்கு விடுவதும் வாய்மொழி மூலம் நம்பிக்கையாக நடைபெற்ற கிராமம். கொடுக்கல்-வாங்கல் எதுவாக இருந்தாலும் வாய்மொழி நம்பிக்கை மூலமே சண்டை-சச்சரவு இன்றி நடைபெற்று வந்த கிராமம். ஊர்-சேரி என்று சாதியப் பிரிவினை பார்க்காத கிராமம். கள்ளச்சாராயம், கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் இக்கிராம மக்களாலேயே தடை செய்யப்பட்டுள்ளன. இக்கிராம மக்களிடம் வர்க்க உணர்வூட்டி, கம்யூனிச அரசியலில் பயிற்றுவித்து, பலரும் அதிசயிக்கும் வகையில் இக்கிராமத்தை மாற்றியமைத்தவர்தான், கம்யூனிசப் புரட்சியாளரும் விவசாயிகள் விடுதலை முன்னணியின் அமைப்பாளருமான மறைந்த தோழர் ரெங்கநாதன். அவரது புரட்சிகர அரசியலையும் வழிகாட்டுதலையும் நெஞ்சிலேந்தி இக்கிராமத்தில் வி.வி.மு. ஊக்கமுடன் செயல்பட்டு வருகிறது. கிராமத்தின் பொது ஒழுங்கு-கட்டுப்பாட்டை விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்புதான் பேணிப் பாதுகாத்து வருகிறது. ஊரில் பல்வேறு கட்சிகள் இருந்தபோதும், கிராம மக்கள் இந்த ஒழுங்கு கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டே வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஊர் பொதுச் சொத்தை திருடித் தின்பது, அக்கம்பக்கம் கிராமங்களில் சென்று கள்ளச் சாராயம் குடித்து விட்டு ஊரில் கலாட்டா செய்வது; தட்டிக் கேட்டால், விழுப்புரம், சென்னை போன்ற ஊர்களுக்கு ஓடிவிடுவது, அவ்வப்போது கிராமத்தில் நுழைந்து கலாட்டா செய்வது, கொடுக்கல் - வாங்கலில் கிராம மக்களை ஏமாற்றுவது, நிலப் பட்டா வாங்கித் தருவதாக ஏமாற்றுவது - நகரத்தில் வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றுவது போன்ற மக்கள் விரோதச் செயல்களில் ஒரு சிலர் ஈடுபட்டனர். இவர்களை அரவணைத்துப் பாதுகாப்பதன் மூலம் கட்சியை வளர்ப்பது என்ற முறையில்தான் இப்பகுதியில் வேரோ விழுதோ இல்லாத சி.பி.எம். கட்சி, காரப்பட்டு கிராமத்திற்குள் நுழைந்தது.

காரப்பட்டு கிராமத்தில் எம்.ராசுக்கண்ணு என்பவர் இது போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வந்தவர். வெங்கடேசன் என்பவன் காரப்பட்டு கிராமத்தில் அவ்வப்போது கள்ளச்சாராயம் விற்பதும், மக்கள் தட்டிக் கேட்கும்போது ஓடிவிடுவதுமாக இருந்தவன். இவர்கள் இருவரும் சேர்ந்து சி.பி.எம். கட்சியின் மாவட்ட நிர்வாகிகளின் துணையோடு கள்ளச்சாராய வியாபாரம், கட்டப்பஞ்சாயத்து நடத்துவது போன்ற செயல்களில் ஈடுபடத் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர்.

காரப்பட்டு கிராம மயானத்திலுள்ள கருமாதி கொட்டகையின் இரும்புக் குழாயைத் திருடி விற்று, கிராம மக்களால் காறிஉமிழப்பட்டவன்தான் வெங்கடேசன். இவனும் இவனது கூட்டாளிகளும் மின்சாரக் கம்பிகளைத் திருடியதற்கான வழக்கு நடந்து வருகிறது. கிராமத்தில் கள்ளச் சாராயம் விற்க முயற்சித்து கிராம மக்களால் அடித்து விரட்டப்பட்ட கழிசடைகள்தான் இவர்கள். இப்பகுதியில் இவர்கள்தான் சி.பி.எம். கட்சியின் தளபதிகள்!

கிராமத் தலைவர் பதவியும், அதிகாரமும் கிடைத்து விட்டால், ஊர் கட்டுப்பாட்டை உடைத்து மேற்கண்ட சமூக விரோதச் செயல்களை தங்கு தடையின்றிச் செயல்படுத்த முடியும் என்ற நோக்கில், கடந்த 2006-ஆம் ஆண்டு கிராம பஞ்சாயத்து தேர்தலில் இத்'தளபதி'களின் ஆதரவோடு போட்டியிட்டது சி.பி.எம். கட்சி. ஆனால் கிராம மக்கள் இவர்களைப் புறக்கணித்தனர். தங்களின் தோல்விக்குக் காரணம் கிராம ஒழுக்கக் கட்டுப்பாடும் அதைப் பாதுகாக்கும் விவசாயிகள் விடுதலை முன்னணியும்தான் என்பதைப் புரிந்து கொண்டு வி.வி.மு.வை தாக்க திட்டமிட்டனர்.



சி.பி.எம். கட்சியின் சாராய குண்டர்களால் வெட்டிக் கொல்லப்பட்ட ராஜேந்திரன்.

கடந்த 14.06.08 அன்று காரப்பட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் எம்.ராசுக்கண்ணு இதனை தனது பேச்சின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். "மக்களுக்கு ஜனநாயகத்தை நாங்கள் வழங்குவோம்; அதற்கு வி.வி.மு. தடையாக உள்ளது. வி.வி.மு. செயலர் ஏழுமலையை தீர்த்துக் கட்டிவிட்டால், வி.வி.மு. இல்லாமல் போய்விடும்" என்று அறைகூவல் விட்டுள்ளார். இப்பொதுக் கூட்டத்தின் தொடர்ச்சியாக, ஏழுமலையைக் கொலை செய்யத் திட்டமிட்டுச் செயல்பட்டுள்ளார்.

20.06.08 அன்று மாலை ராசுகண்ணுவால் ஏவி விடப்பட்ட வெங்கடேசன் என்பவன் தலைமையில் 10-க்கும் மேற்பட்ட சி.பி.எம். குண்டர்கள் வீச்சரிவாள், இரும்புக் கம்பிகள்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 9**

ஜூலை 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## விலைவாசி உயர்வு:
# காங்.-பா.ஜ.க.வின் வில்லத்தனங்கள்

கடந்த 13 ஆண்டுகளில் இல்லாதவாறு இந்த ஆண்டு ஜூன் இரண்டாவது வாரம் நாட்டின் பணவீக்கம் 11.05 சதவிகிதத்தை எட்டிவிட்டது. உணவு தானியம் உட்பட விவசாய விளைப்பொருட்கள், இடு பொருட்கள், இரும்பு, சிமெண்ட் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் கிடுகிடுவென ஏறிக் கொண்டே போகின்றன. இவ்வாறு பணப்புழக்கம் அதிகமாகி அதாவது, பொருட்களின் தேவை-கேட்பு மிகமிக அதிகமாகி, அத்தேவைக்கேற்ப உற்பத்தியும், பொருட்களின் வரத்தும் இல்லாமல் பற்றாக்குறை ஏற்பட்டு நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து விடவில்லை. அதாவது, இப்போது மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு தானியங்கள், பருப்பு வகைகள், உணவு எண்ணெய், காய்கறிகள் மற்றும் சர்க்கரை, சிமெண்ட், கட்டுமான இரும்புக் கம்பிகள் போன்றவற்றின் உற்பத்தி குறைந்து, சந்தையில் தட்டுப்பாடும் பற்றாக்குறையும் ஏற்பட்டு அவற்றின் விலைவாசி தாறுமாறாக எகிறிப் போய் விடவில்லை.

நமது நாட்டின் பொருளாதாரத்தை உலகச் சந்தைக்குத் திறந்து விடுவதன் மூலம் நமது நாட்டிலேயே அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தி குறைந்து, பற்றாக்குறை - தட்டுப்பாடு ஏற்பட்டால் கூட, நமக்குத் தேவையான, தரமான, மலிவான பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள முடியும் என்பதாகத்தான் உலக வங்கி, ஐ.எம்.எஃப், உலக வர்த்தகக் கழகம் ஆகியவற்றின் பரிந்துரைகளை ஏற்று, தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்டது.

கொழுத்த வருமானம் பெறக்கூடிய நடுத்தர, மேட்டுக்குடியினர் வாங்கிக் குவிக்கும்-பன்னாட்டுத் தொழில் கழகங்கள் ஏகபோகமாகக் கொண்டு வந்து குவிக்கும் ஆடம்பர நுகர்வுப் பொருட்களின் விலை மிகப் பெரிய அளவில் ஏறிவிடவில்லை. ஆனால், நமது நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் அடிப்படை அத்தியாவசியப் பொருட்கள் அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்களின் சதிமுயற்சிகளுக்கு மாறாக, உற்பத்தியில் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளபோதும், அவற்றின் விலைவாசி மட்டும் ஏறிக் கொண்டே போகிறது. அதாவது, நாட்டின் தரகு முதலாளிகளின் தொழிற்துறை வளர்ச்சி கடந்த நான்காண்டுகளில் 8 சதவீதத்திற்கும் மேலாக உள்ளது; அதேகாலத்தில் நிகர உள்நாட்டு உற்பத்தி 9 சதவீதத்திற்கும் மேலாக உள்ளது என்று இந்த அரசு பீற்றிக் கொள்கிறது; நாட்டு மக்களில் மூன்றில் இரண்டு பங்கினரை அதாவது 70 கோடிப்பேரைக் கொண்ட விவசாயத் துறையின் வளர்ச்சி விகிதம் 2006-07 ஆம் ஆண்டில் 3.8 சதவீதத்திலிருந்து 2007-08 ஆண்டில் 2.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்து விட்டது; ஆனாலும், உணவு தானியங்கள், பருப்பு வகைகள், உணவு எண்ணெய் மற்றும் சர்க்கரைக்கான கரும்பு உற்பத்தி குறைந்து விடவில்லை, அதிகரித்துத்தான் இருக்கிறது. இவ்வாறே உற்பத்தி அதிகரித்துள்ளபோதும் பிற அடிப்படை தேவைக்கான அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறிக் கொண்டேபோனது ஏன்?

உலகப் பொருளதார நெருக்கடிகள், குறிப்பாக அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னேற்றம், அமெரிக்க டாலர் சரிவு, பங்குச் சந்தை வீழ்ச்சி ஆகியவற்றால் பன்னாட்டு நிதிக் கழகங்கள் பலவும் திவாலாகிப் போய்விட்டன. அவை தொழில் உற்பத்தியில் ஈடுபடுவதைவிட கொழுத்த இலாபம் தரும் உணவுப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களின் பண்டமாற்று ஊக வர்த்தகச் சூதாட்டத்தில் குதித்து விட்டன. இந்த முன்நோக்கு-முன்பேர வர்த்தகம் தான், உணவு தானியங்கள் முதல் காய்கறிகள் வரை அத்தியாவசியப் பொருட்களின் விலையை பெரும் அளவிலான ஊக வணிகத்தின் மூலம் எகிறச் செய்துவிடுகிறது.

முன்நோக்கு-முன்பேர வர்த்தகம் என்பது உண்மையில் கையிருப்பில் வைத்துள்ள பொருட்களை வைத்துக் கொண்டு பேரங்கள் பேசி வாணிபம் செய்வதில்லை. ஒரு மாயையான கையிருப்பைக் காட்டி (கையிருப்பில் உள்ள சரக்கு மற்றும் எதிர்காலத்தில் சந்தைக்கு வருமென எதிர்பார்க்கப்படும் சரக்கு மட்டுமல்ல, அவற்றின் மதிப்புகள் - தேவைகள் பற்றிய ஊகங்கள் அடிப்படையில்) நடத்தப்படும் சூதாட்டம் - Virtual trade on the basis of virtual stock. சான்றாக 2005-06-ஆம் ஆண்டில் கௌர் தானிய உற்பத்தி 6 இலட்சம் டன்கள்தாம். ஆனால், பண்டப்பரிவர்த்தனையில் 1,692.6 இலட்சம் டன்கள் கையிருப்பில் இருப்பதாக ஊகம் செய்து கொண்டு முன்நோக்கு வர்த்தகம் நடத்தப்பட்டது. 10 இலட்சம் டன் உள்நாட்டு

www.padippakam.com

உற்பத்தியும் 5 இலட்சம் டன் இறக்குமதியுமாக மொத்தம் 15 இலட்சம் டன் அர்கர் பருப்பை வைத்துக் கொண்டு 137.39 இலட்சம் டன் இருப்பதாக ஊக வணிகம் நடத்தப்பட்டது. இதிலிருந்து ஊக வணிகம் எவ்வாறு விலைவாசியைத் தாறுமாறாக எகிறச் செய்யும் என்பது புரியும். ஊகவணிகத்தால்தான் சர்வதேச பெட்ரோலிய விலை எகிறியிருக்கிறது. உண்மையில் பெட்ரோலியப் பற்றாக்குறையால் அல்ல என்று இப்போது சிதம்பரம் உட்பட ஆட்சியாளர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

இவ்வாறு அந்நிய, உள்நாட்டு தரகு ஏகபோக முதலாளிகள் முன்நோக்கு-முன்பேர வணிகம் மூலம் கொள்ளை இலாபம் அடிப்பதற்காக ''உணவு தானியங்கள் போன்ற அடிப்படைப் பொருட்களைக் கூட அரசு பெருமளவு கொள்முதல் செய்து கொள்ளவும், இருப்பு வைத்துக் கொள்ளவும் கூடாது; அப்படிச் செய்து பொது விநியோகத்தில் ஈடுபடவும் கூடாது; தனியார் பெருமளவில் கொள்முதல் செய்து இருப்பு வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்'' என்று இந்திய அரசை ஏகாதிபத்தியங்கள் நிர்பந்தித்து சாதித்துக் கொண்டுள்ளன. இந்தியாவில் நடக்கும் இவ்வாறான ஊகவணிகத்தின் மதிப்பு நாளொன்றுக்கு 300 கோடி டாலர் (அதாவது 12,000 கோடி ரூபாய்) ஆகும் என்று இலண்டன் எகனாமிஸ்டு மதிப்பிடுகிறது.

2003-ஆம் ஆண்டு வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. அரசுதான் முன்பேர இணையதள வர்த்தகத்திற்கு முழுமையான ஒப்புதல் அளித்து அமலாக்கியது. அந்தக் கொள்கையைத்தான் இப்போது மன்மோகன் - சிதம்பரம் - மான்டேக் சிங் கும்பல் அப்படியே பின்பற்றுகிறது. இப்போது, சர்வதேச ஊக வணிகத்திலிருந்து நமது நாடு தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால், பண்டமாற்று வணிகத்தில் செய்யப்பட்டுள்ள தாராளமயப் போக்கை எதிர்திசையில் திருப்பி விட வேண்டும்; அத்தியாவசியப் பொருட்களில் முன்நோக்கு - முன்பேர வணிகத்தைத் தடை செய்ய வேண்டும்; அரசே பெருமளவில் கொள்முதல் செய்து, பொது விநியோகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கூறிப் போராடும் இடதுசாரிகள், இவ்வளவு காலமும் கண்ணை மூடிக் கொண்டிருந்து விட்டு, விலைவாசி உயர்வால் ஏழை மக்கள் கொதித்துப் போயிருக்கும் போது மட்டும் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

# அணுசக்தி ஒப்பந்தம்: அமெரிக்கத் தாசர்கள் அடம் பிடிப்பது ஏன்?

## பொருளாதார வளர்ச்சிக்கு அணுசக்தி ஒப்பந்தம் அவசியம் என்ற காரணம் மோசடித்தனமானது.

''கிடப்பதெல்லாம் கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மணமேடையில் வை'' என்பதைப் போல நடந்து கொள்கிறது, அமெரிக்க மேலாதிக்க ஏகாதிபத்தியத்தின் அடிமையான மன்மோகன் சிங் தலைமையிலான மைய அரசு. நாடு மீளமுடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. கடந்த 13 ஆண்டுகளில் இல்லாதவாறு ஜூன் மூன்றாம் வாரம் பணவீக்கம் பதினொரு சதவீதத்துக்கும் மேலே எகிறி விட்டது. இதனால் அடிப்படைத் தேவைகளான உணவு தானியங்கள், விவசாய இடுபொருட்கள் முதல் இரும்பு, சிமெண்ட் மற்றும் பெட்ரோலிய எரிசக்திப் பொருட்கள் வரை அனைத்தின் விலையும் நாளும் எகிறிக் கொண்டே போகிறது. விவசாயப் பொருளாதார நெருக்கடியும் உணவு நெருக்கடியும் முற்றி, அவற்றின் விளைவாக விவசாயிகளின் எழுச்சியும் உணவுக் கலகங்களும் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அடுத்தடுத்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் நாடாளுமன்ற இடைத் தேர்தல்களிலும் படுதோல்விகளைக் கண்டு வருகிறது. இன்னும் பத்து மாதங்களில் கிரமமான கால முறைப்படியே தேர்தல்கள் வந்தால் கூட, மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கான வாய்ப்பும் அருகிப் போய்விட்டது.

அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை அமலாக்குவதை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் கூட, மன்மோகன் சிங் தலைமையிலான மைய அரசுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்வோம்; ஆட்சி கவிழ்ந்து விடும் என்று 'இடதுசாரி'க் கூட்டணிக் கட்சிகள் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளன. இருந்தபோதும், ''என்ன ஆனாலும் சரிதான்; பிரதமர் பதவியிலிருந்து விலக நேர்ந்தாலும், ஆட்சியே கவிழும் நிலை ஏற்பட்டாலும் அமெரிக்காவுடனான அணுசக்தி உடன்பாட்டை அமலாக்கியே தீர வேண்டும்'' என்பதில் உறுதியாக இருக்கிறார், மன்மோகன் சிங். முதுகெலும்பே இல்லாத இந்த மண் புழுவுக்கு எங்கிருந்து வந்தது இவ்வளவு துணிச்சல்? உலகையே கட்டி ஆளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் திமிர் - ஆணவத்தோடு அது கொடுக்கும் நிர்பந்தம், அதனிடம் இந்த அடிமை காட்டும் விசுவாசம் - இவற்றின் வெளிப்பாடுதான் அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்றியே தீருவோம் என்று மன்மோகன் சிங் - சோனியா கும்பல் அடம் பிடிப்பதன் இரகசியம். இதற்காக அந்தக் கும்பல் அடைந்த ஆதாயம் பற்றிய உண்மை பின்னொரு காலத்தில் அம்பலமாகும். அல்லது அணுசக்தி ஒப்பந்தத்தினால் போர்வெறி பிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பீரங்கி வண்டிச் சக்கரத்தில் பிணைக்கப்பட்டு இந்த நாடு இழுபடும்போது பல உண்மைகள் தெரிய வரும்.

அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நலன்களுக்கு மிகமிக இன்றியமையாதது என்றும், இந்த ஒப்பந்தம் உடனடியாக அமலாக்கப்படாவிட்டால் இந்தியா ஒரு உலகப் பொருளாதார வல்லரசாக பாய்ந்து முன்னேறுவது தடைப்பட்டுப் போகும் என்றும் மன்மோகன் - சோனியா கும்பல் மட்டுமல்ல, அதற்கு எதிர்த்தரப்பில் நிற்கும் அரசியல் எதிரிகளான அத்வானி - மோடி கும்பல் கூட வாதிடுகிறது. ஆனால் உண்மையோ வேறுவிதமாக உள்ளது. ''இந்தியா தற்போது மொத்தம் 1,27,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு நிகர உற்பத்தி வளர்ச்சி விகிதப்படி 2016-17 ஆம் ஆண்டு 3,37,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையை எட்டிவிட வேண்டும். இந்த அளவு மின் உற்பத்தி அதிகரிக்கப் படவில்லை என்றால் நாட்டின்



படிப்பகம்

www.padippakam.com

பொருளாதார வளர்ச்சி (யாருடைய நலனுக்கான பொருளாதார வளர்ச்சி என்பது ஒருபுறம் இருந்த போதிலும்) கடுமையாக பாதிக்கப்படும். கடுமையான எரிசக்தி (மின்சார) பற்றாக்குறை - நெருக்கடி ஏற்படும்; அந்த நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, அதாவது நாட்டின் எதிர்கால எரிசக்தித் தேவையை நிறைவேற்றுவதற்கான அவசியத்துக்காகத்தான் அமெரிக்காவுடனான இந்த அணுசக்தி ஒப்பந்தம். இது முழுக்க முழுக்க பொருளாதார ரீதியிலான சிவிலியன் தேவைக்கான ஒப்பந்தம்தான். இராணுவ ரீதியிலானதோ, அரசு தந்திர ரீதியிலானதோ பிற பொருளாதார ரீதியிலானதோ இல்லை. அணுஆயுதத் தயாரிப்புக்கான சோதனை உட்பட இந்தியாவின் உள்நாட்டு-வெளிநாட்டுக் கொள்கைகளைக் கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடியதோ அல்ல'' என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.



சர்வதேச அணுசக்தி முகமையின் தலைவர் முகம்மது எல்பராதேய்க்கும், வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் இடையே புதுதில்லியில் கடந்த ஆண்டு நடந்த அதிகாரப்பூர்வ சந்திப்பு.
(கோப்புப் படம்)

இவர்கள் வாதிடுவதைப் போல அமெரிக்காவுடனான இந்திய அணுசக்தி ஒப்பந்தம் இந்திய நாட்டு நலன்களுக்கானது தான் என்றால், அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்போ, பின்போ நாட்டு மக்கள் முன் பகிரங்கமாக வைத்து, நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியேயும் திறந்த, விரிவான வாதங்கள் நடத்துவதற்கு பதில் முற்றிலும் இரகசியமாக - சதித்தனமாக ஒப்பந்தம் போட்டுக் கொண்டது ஏன்? ஜூன் 25-க்குள் சர்வதேச அணுசக்தி முகமையின் இயக்குநர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு, பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டே தீரவேண்டும் என்று துடித்த மன்மோகன் - சோனியா கும்பல், அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை அரசை ஆதரிக்கும் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்குக் கூட காட்ட மறுப்பது ஏன்? அந்நிய ஏகாதிபத்திய நாடுகளின் அரசியல் தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெரியும் அந்த இரகசிய ஒப்பந்த விவரம் இவர்களுக்கு தெரியக் கூடாதா? ''தேசிய நலன்களுக்கான இரகசிய உடன்பாடுகள் நிறைந்த'' தாகக் கூறப்படும் அந்த ஒப்பந்தம், உண்மையில் ஒரு தேசத் துரோக ஒப்பந்தம் தான். அதனால் மன்மோகன் - சோனியா கும்பல் அதை இரகசியமாக வைப்பதிலும் அமலாக்குவதிலும் இவ்வளவு அக்கறை காட்டுகிறது.

இந்த உண்மை இந்து மத வெறி பாசிச ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணிக்கும் தெரியும். ஆனால், ''இந்திய தேசிய நலன்களுக்கான'' தென்று ஏகபோக உரிமை கொண்டாடும் இந்த கும்பல், உண்மையில் இந்த அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்க்கவில்லை. இதைப் பகிரங்கமாகவே ஒப்புக் கொள்ளும் அக்கும்பல் அந்த ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கும் ஆதாயத்தில் தனக்கும் ஒரு பங்கு வேண்டும் என்பதில்தான் குறியாக இருக்கிறது. ஒப்பந்தத்துக்குத் தாங்கள் எதிரானவர்கள் அல்ல; தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அணுஆயுதப் பரிசோதனைக்கான இந்தியாவின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் மறுபரிசீலனைக்குப் பிறகு ஒப்பந்தத்தை முடிப்போம் என்கிறது.

**பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பராமரிப்பதற்கு அணு மின்சாரம்தான் ஒரே வழி என்பதும், அதையும் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டுதான் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதும் உண்மையல்ல.**

இதைப் போலத்தான், நாட்டின் மின் உற்பத்தித் தேவைக்கு மிகவும் இன்றியமையாதது என்று கூறி அமெரிக்காவின் ''என்ரான்'' நிறுவனத்துடன் (ஜனநாயக முற்போக்கு சக்திகளின்) கடும் எதிர்ப்பையும் மீறி ஒரு துரோகத்தனமான ஒப்பந்தம் போட்டுக் கொண்டது, மகாராட்டிராவிலும் மத்தியிலும் ஆட்சியில் இருந்த காங்கிரசு அரசு. அந்த ஒப்பந்தம் இலஞ்ச-ஊழல் நிறைந்த தேச துரோகமென்று பிரச்சாரம் செய்து ஆட்சிக்கு வந்த ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல் என்ரானுடன் மறுபேரம் பேசி - மறுஒப்பந்தம் போட்டுக் கொண்டது. பின்னர் அந்தத் திட்டமே, இந்திய நாட்டை அமெரிக்க மின்நிறுவனம் பகற்கொள்ளையடிப்பது என்று நிரூபணமாகியது. இதைப் போன்றே துரோகமிழைத்து அமெரிக்காவுடனான மறுபேரம், மறுஒப்பந்தம் போட்டு ஆதாயம் அடையவே இந்து பாசிச ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல் துடிக்கிறது. அதனால், தற்போதைய ஒப்பந்தத்தை எதிர்ப்பதாக நாடகமாடிக் கொண்டே, ஒப்பந்தத்தை அமலாக்காமல் போனால் மன்மோகன் சிங்கின் நம்பகத்தன்மையும் அதிகாரமும் ஆளுமையும் பறிபோய் விடும் என்று உசுப்பேற்றி வருகிறது.

நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பராமரிப்பதற்கு மின் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்க வேண்டும் என்பது உண்மை தான் என்றபோதும், அதற்கு அணுசக்தி மின்உற்பத்திதான் ஒரே வழி, சிறந்த வழி என்பதும், அதையும் அமெரிக்காவுடனான ஒப்பந்தம் போட்டுக் கொண்டு அந்நாட்டிலிருந்து அணு உலைகளையும் அணுசக்திக்கான மூலப் பொருட்களை இறக்குமதி செய்துதான் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதும் உண்மையல்ல.

2006-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி நாட்டின் மொத்த மின்உற்பத்தியில் 3 சதவீதம். அதாவது 3,900 மெகாவாட் மட்டுமே அணு மின்சக்தி ஆகும். இந்திய-அமெரிக்க அணுமின் சக்தி ஒப்பந்தம் முழுமையாகவும் சரியாகவும் அமலானால் கூட, 2016-ஆம் ஆண்டில் மொத்த மின் உற்பத்தியான


படிப்பகம்

www.padippakam.com

3,36,000 மெகாவாட் என்ற அளவில் 6 சதவீதம் மட்டுமே — அதாவது 20,000 மெகாவாட் தான் அணு மின்சக்தியாக இருக்கும். இதுதான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாகவும் இன்றியமையாததாகவும் இருக்கும் என்று அமெரிக்க தாசர்கள் புளுகித் தள்ளுகிறார்கள். இந்த ஒப்பந்தத்தின் மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய அணு உலைகள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும். இதனால் அமெரிக்க ஏகபோக முதலாளிகளும் அவர்களின் கூட்டாளிகளான இந்தியத் தரகு முதலாளிகளும் கொழுப்பதற்கான வழிவகை செய்யப்படும்.



இந்தியா - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசாமல் ஆதரிப்பவர் இந்த அமெரிக்க தாசர் கருணாநிதி! அதனால்தான் மன்மோகன் - சோனியாவுடன் சமரசம் பேசப் பொருத்தமானவர் என்று இந்த அரசியல் தரகரைப் போலி கம்யூனிசத் தலைவர்களான பிரகாஷ் காரத்தும், டி.ராஜாவும் அழைக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அணு மின் உற்பத்தி அமெரிக்காவிலேயே இலாபகரமானதாயில்லை என்பதால், கடந்த 30 ஆண்டுகளில் புதிய அணுமின் திட்டங்கள் எதுவும் அங்கு நிறுவப்படவேயில்லை. அங்கேயே காலாவதியாகிப் போன தொழில்நுட்ப அடிப்படையிலான கழித்துக் கட்டப்பட்ட அணுமின் உலைகளை நமது நாட்டின் தலையில் கட்டுவதற்கு அமெரிக்கா எத்தணிக்கிறது. அதோடு, இந்தியாவின் அணுமின் உற்பத்தி, மற்றும் அணுஆயுதச் சோதனை மற்றும் தயாரிப்புக்கான மூலப்பொருளான செறிவூட்டப்பட்ட யுரேனியம் உற்பத்தி ஆகிய அனைத்தையும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வைப்பது, உலகப் போர் வெறியனான அமெரிக்காவின் உலக மேலாதிக்க யுத்ததந்திரத்தின் சேவகனாக இந்தியாவை மாற்றிக் கொள்வது ஆகிய உள்நோக்கங்களுக்காகவும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஈடேற்றிக் கொள்ள முயலுகிறது.

இதற்கு நேர்மாறாக ஒப்பீட்டு ரீதியில் மலிவான செலவில், நாட்டின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானவாறு நீர்மின் சக்தி, அனல் மின்சக்தி மற்றும் சொந்த தொழில்நுட்ப அடிப்படையிலான அணு மின்சக்தி ஆகியவற்றை நமது நாடு சுயசார்பாகவே வளர்த்துக் கொள்ள முடியும் என்று ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அனல்மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி ஆதாரம் நமது நாட்டிலேயே இருக்கும் அதேசமயம், மொத்தம் 1,50,000 மெகாவாட் அளவு நீர்மின் உற்பத்திக்கான வாய்ப்பிருந்த போதும் 33,000 மெகாவாட் அளவே நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. நேபாளம், பூட்டானுடன் தகுந்த ஒப்பந்தங்கள் அடிப்படையில் 55,000 மெகாவாட் நீர்மின் சக்தியை இறக்குமதி செய்து கொள்ளவும் முடியும். ஈரானுடனான குழாய் வழி பெட்ரோலிய எரிவாயு இறக்குமதி திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் நாட்டின் எரிசக்தித் தேவையை முற்றிலுமாகச் சமாளித்துவிட முடியும்.

இவ்வளவு இருந்தபோதும், அமெரிக்காவுடனான அடிமைத்தனமான அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவது என்று மன்மோகன் - சோனியா மட்டுமல்ல. அத்வானி - மோடி முதலிய துரோகிகளும் உறுதியாக இருக்கின்றனர். யார் அமெரிக்க எஜமானனுடன் விசுவாசமாக நடந்து கொண்டு பேரங்கள் பேசி அதிக ஆதாயம் அடைவது என்பதில்தான் இவ்விரு கும்பல்களுக்கிடையில் வேறுபாடு உள்ளது. ஆனால் மதவாத சக்திகளை எதிர்ப்பதுதான் முதன்மையானது என்று கூறிக் கொண்டு போலி சோசலிச, போலி கம்யூனிச, போலி மார்க்சிச - இடதுசாரிக் கூட்டணி, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுடன் ஊடலும் கூடலுமான உறவு வைத்துக் கொண்டு, அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்க்கும் அதேசமயம், இந்த அரசு கவிழ்ந்து போகவும் விடமாட்டோம் என்று சந்தர்ப்பவாத நாடகமாடுகிறது. ஆரம்பத்தில் அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகத் தொடங்கிய இடதுசாரி கூட்டணி, பிறகு அதன் அமலாக்கத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், ஒப்பந்தம் குறித்த தமது கவலைகளை - சந்தேகங்களைப் போக்க வேண்டும் என்றும் இறங்கி, இதற்காக ஒப்பந்தத்தையும், அமெரிக்காவின் ''ஹைட்'' சட்டத்தையும் ஆராய்வதற்கான கூட்டுக் கமிட்டி அமைப்பது என்பதை ஏற்றுக் கொண்டது. சர்வதேச அணுசக்தி முகமையின் இயக்குநர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர்களின் நிபந்தனைகளை ஏற்கும் ஒப்பந்த நகல் தயாரிப்பதையும் ஏற்றுக் கொண்டது. இப்போது இந்த நகலை இறுதியாக்கி இந்தியா கையொப்பமிட்டு விட்டால் போதும்; அமெரிக்க நாடாளுமன்றம் இந்தியாவுடனான தனது அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றி விடும். அப்புறம் அது அமலுக்கு வந்துவிடும். இப்போது இந்த இறுதி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தவிடத்தான் இடதுசாரிக் கூட்டணி எத்தணிக்கிறது.

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் எரிசக்தித் தேவையை எப்படி உத்தரவாதப்படுத்துவது என்ற அமெரிக்கத் தாசர்களின் வாதத்துக்குள் அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக சிக்கிக் கொண்டு விட்ட இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளுக்கு இந்த விவகாரத்திலும் சமசர-சரணடைவு தவிர வேறு வழி கிடையாது. ஆனால், நாட்டுக்குத் தேவையானது எரிசக்தித் தேவையை உத்தரவாதப்படுத்துவதல்ல; எரிசக்தித் துறையின் சுயசார்பும் இறையாண்மையும், மறுகாலனியாதிக்கத்திலிருந்து விடுதலையும்தான்.

● ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

## "பெட்ரோல்–டீசல் விலை உயர்வு:

# கொள்ளையடிப்பவர்கள் யார்?"

### – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தோடு இதுவரை காணாத வகையில் பெட்ரோல்-டீசல் விலைகள் கடுமையாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்து கொண்டே போவதால், இந்த விலையேற்றம் தவிர்க்கவியலாதது என்று கூறி நியாயப்படுத்துகிறது அரசு. தேவையைக் காட்டிலும் 10% உற்பத்தி குறைந்துள்ளது; இப்பற்றாக்குறையின் காரணமாகவே பெட்ரோல்-டீசலின் விலை 4 மடங்கு உயர்ந்துவிட்டது என்று கூறுவது கடைந்தெடுத்த பொய். எண்ணெய் வர்த்தகத்தில் தலைவிரித்தாடும் ஆன்லைன் சூதாட்டமே எண்ணெய் விலை உயர்வுக்குக் காரணம்.

பன்னாட்டு நிதி நிறுவனங்களும் வங்கிகளும் சுமார் 504 லட்சம் கோடி ரூபாய்களை ஆன்லைன் வர்த்தகம் எனும் சூதாட்டத்தில் இறக்கியிருக்கின்றன. இந்த நிதிநிறுவனங்கள் எவையும் உண்மையில் கச்சா எண்ணெயை வாங்குபவையோ விற்பவையோ அல்ல. அதை வாங்குவதற்கும் விற்பதற்கும் இவை செய்து கொண்ட ஒப்பந்தங்களைக் கைமாற்றி விற்று, எண்ணெய் விலையை இந்த அளவிற்கு உயர்த்தியுள்ளன.






இவையனைத்தையும் விட அநீதியான இன்னொரு பகற்கொள்ளையும் இந்தியாவில் நடந்து வருகிறது. நாட்டின் எண்ணெய்-எரிவாயுத் தேவையில் 25 முதல் 30 சதவீதம் வரை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்திச் செலவு, சுத்திகரிப்புச் செலவு, அவசியமான இலாபம் ஆகியவற்றைக் கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்வதன் மூலம் எண்ணெய் விலையைக் கட்டுக்குள் வைக்க முடியும். ஆனால் உலகமயக் கொள்கைப்படி, உள்நாட்டில் உற்பத்தியாகும் இந்த எண்ணெய்-எரிவாயுவும் சர்வதேச விலையில்தான் இங்கு விற்கப்படுகிறது. மேலும், அரசுக்குச் சொந்தமான அரபிக் கடலிலுள்ள பன்னா-முக்தா எண்ணெய் வயல், கிழக்கே கோதாவரி எரிவாயுக் கிணறுகள் ஆகியன தனியார்மயக் கொள்கைப்படி தரகுப் பெருமுதலாளி அம்பானிக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளன. நம்முடைய பொதுச் சொத்தான எண்ணெய்-எரிவாயுவை எடுத்து, உலகச் சந்தையின் விலைக்கு நமக்கே விற்று, பல்லாயிரம் கோடி ரூபாய் கணக்கில் ரிலையன்ஸ் அம்பானி கொள்ளையடித்துக் கொள்ள தாராள அனுமதி தரப்பட்டுள்ளது. இதுவும் போதாதென கலால் வரி, வாட் வரி, விற்பனை வரி, நுழைவு வரி என மத்திய-மாநில அரசுகள் வரியாகக் கொள்ளையடிக்கின்றன.

இருட்டடிப்பு செய்யப்பட்ட இந்த உண்மைகளை விளக்கி, ''பெட்ரோல் விலை உயர்வு - கொள்ளையடிப்பவர்கள் யார்?'' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் வெளியிட்டு தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் வீச்சான பிரச்சாரத்தை நடத்தி வருகின்றன. ''ரிலையன்ஸ் மற்றும் தனியார் எண்ணெய் நிறுவனங்களை அரசுடைமையாக்கு! ஆன்லைன் வர்த்தகச் சூதாட்டத்தைத் தடைசெய்! பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மீதான அனைத்து வரிகளையும் ரத்து செய்! கார் உற்பத்தியை நிறுத்து! முதலாளிகள் ஓட்டும் சொகுசுக் காருக்கு பெட்ரோல் விலையைக் கூட்டு! தொழிலாளி ஓட்டும் இரு சக்கர வாகனத்துக்கு பெட்ரோல் விலையைக் குறை! அரசுப் பேருந்து போக்குவரத்தை அதிகமாக்கு!'' எனும் எடுப்பான முழக்கங்களுடன் விலையேற்றத்துக்குக் காரணமான தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தை வீழ்த்த அறைகூவி, பெட்ரோல் விற்பனை நிலையங்களிலும் தெருமுனைகளிலும் இவ்வமைப்புகள் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

9.6.08 அன்று காரைக்குடியிலும், 22.6.08 அன்று சேலம் - தாதாப்பட்டியிலும் திரளான மக்கள் பங்கேற்புடன் இவ்வமைப்புகள் பொதுக் கூட்டங்களை நடத்தின. சென்னையில் 23.6.08 அன்று பல்லாரம், பொன்னேரி, சேத்துப்பட்டு, மதுரவாயில் ஆகிய இடங்களில் தெருமுனைக் கூட்டங்களை நடத்தின. திருச்சியில் ஜூன் 25,26 தேதிகளில் துவாக்குடி, ''பெல்'' ஆலைவாயில், திருவரம்பூர், காட்டூர் ஆகிய இடங்களில் தொடர் தெருமுனைக் கூட்டங்களை மக்களின் உற்சாகமான வரவேற்புடன் நடத்தின. இதர பகுதிகளில் தெருமுனைக் கூட்ட - பொதுக்கூட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

— பு.ஜ. செய்தியாளர்கள்.

www.padippakam.com

# விலைவாசி உயர்வு: பட்டினிக்குள் தள்ளப்படும் தமிழகம்

## உணவுத் தேவைகளைச் சுருக்கிக் கொண்டு, விலைவாசி உயர்வைச் சமாளிக்கும் தமிழக மக்களின் அவல வாழ்க்கை.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வசித்து வரும்; பல்வேறுவிதமான பொருளாதாரப் பின்னணி கொண்ட உழைக்கும் மக்களைத் தற்பொழுது அச்சுறுத்தி வரும் பிரச்சினை, விலைவாசி உயர்வு. நாட்டை அச்சுறுத்துவதாகச் சொல்லப்படும் முசுலீம் தீவிரவாதம், நக்சல் பயங்கரவாதம் போன்ற ''பூதங்களை''விட, விலைவாசி உயர்வைத்தான், பொது மக்கள் அபாயகரமானதாகப் பார்க்கிறார்கள்.

அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்து வருவதை எதிர்த்துப் பல நாடுகளில் கலகங்கள் நடைபெறுகின்றன. ஆனால், தமிழகமோ ''அமைதிப் பூங்கா''வாக இருக்கிறது. இந்த அமைதி, தமிழக மக்கள் ''விதிப் பயன்'' என்ற மதக் கோட்பாட்டிற்கு ஏற்ப வாழ்கிறார்களோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது. உணவு, உடை போன்ற அத்தியாவசிய செலவுகளைச் சுருக்கிக் கொண்டு, விலைவாசி உயர்வு என்ற இந்த ''ஏழரை நாட்டுச் சனியனை''ச் சமாளித்துவிட முயலுகிறார்கள், தமிழக மக்கள்.

மதுரை - அண்ணாநகர் காலனியில் வசித்துவரும் கூலித் தொழிலாளி ரவிக்கு, மாதத்தில் 10 நாட்களுக்கு வேலை கிடைத்தாலே அதிருஷ்டம்தான். வேலை கிடைக்கிறதோ இல்லையோ, ஒவ்வொரு நாளும் வேலை தேடிச் செய்வதற்காக, அவர் தனது போக்குவரத்துச் செலவிற்கு இருபது ரூபாயை ஒதுக்கி வைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். ரவியின் மனைவி ராமத்தாய் பூ வியாபாரம் செய்வதன் மூலம், நான்கு பேர் கொண்ட குடும்பத்தை இழுத்துப் பிடித்து ஓட்டுகிறார்.

அரிசிச் சோறும், பருப்பில்லாத புளிக் குழம்பும்தான் அவர்களது அன்றாட உணவு. பால், பருப்பு, எண்ணெய் விலைகள் உயர்ந்துவிட்டதால், அவற்றையெல்லாம் ஒதுக்கி விட்டதாகக் கூறுகிறார் ராமத்தாய்.

அதே பகுதியில் வசித்துவரும் தனியார் பேருந்து நடத்துனரான கிருஷ்ணனின் தினக்கூலி எழுபத்தைந்து ரூபாய்தான். ''மாதாந்திர செலவுகளைச் சமாளிக்கப் பல நேரங்களில் தனது மனைவியின் நகைகளை அடகு வைப்பதாக''க் கூறுகிறார், அவர்.

தேனி மாவட்டம், கருநாகமுத்தன் பட்டியைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளியான பாண்டியனுக்கு மாதத்தில் இருபது நாட்கள்தான் வேலை கிடைக்கும்; அதன் மூலம் ரூ. 2,000/- வருமானம் கிடைத்தாலும், மூன்று பேரப் பிள்ளைகள் கொண்ட பெரிய குடும்பத்தைப் பராமரிக்க வேண்டியிருப்பதால், பல நேரங்களில் குடும்பச் செலவைச் சமாளிக்க கந்து வட்டிக்குக் கடன் வாங்க வேண்டியிருப்பதாகக் கூறுகிறார், அவர்.

மற்ற உணவுப் பொருட்களின் விலைகள் எல்லாம் உயர்ந்துவிட்டதால், ரேஷனில் போடப்படும் மலிவு விலை அரிசித் திட்டத்தால் பெரிய பயனேதும் இல்லை என்கிறார், பாண்டியனின் மனைவி புஷ்பம். ரேஷனில் போடப்படும் 20 கிலோ அரிசியைக் கொண்டு மாதத்தில் பாதி நாட்களை ஓட்டும் பாண்டியனின் குடும்பம், மேலும் 20 கிலோ அரிசியை வெளிச் சந்தையில் வாங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. பேரக் குழந்தைகளுக்காக மிகவும் மலிவான காய்கறிகளை வாங்குவதாகக் கூறும் பாண்டியன், குடும்பச் செலவைக் குறைக்க பால், புதுத் துணிமணிகள் வாங்குவதை ஒதுக்கி வைத்து விட்டார்.

அதே கிராமத்தைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளி மணி, கட்டிடத் தொழிலாளி இளங்கோவன் ஆகிய இருவரின் வாழ்க்கையும், பாண்டியனின் நிலைமை போலவே இருக்கிறது. தனது குடும்பத்தின் பால் தேவையை 200 மில்லி லிட்டருக்கு குறைத்து விட்டதாகக் கூறும் இளங்கோவன், ''காய்கறி போட்டு குழம்பு வைப்பதற்குப் பதிலாக, வெறும் ரசத்தோடு தங்களின் உணவை முடித்துக் கொள்வதாக''க் குறிப்பிடுகிறார்.



சென்னையில் கட்டிடத் தொழிலாளர்களாக வேலை பார்க்கும் சுனதர்-கேசரி தம்பதியினர். ''முகவரி அற்ற'' இவர்களுக்குக் குடும்ப அட்டையும், இரண்டு ரூபாய் அரிசியும் மறுக்கப்படுகிறது.

''தாழ்த்தப்பட்ட குடும்பங்களைப் பொறுத்தவரை, இரவு உணவு மட்டும்தான் வயிறாறப் பசியைப் போக்குவதாக இருக்கும். இந்த விலைவாசி உயர்வினால், அந்த இரவு உணவைக் கூடக் குறைத்துக் கொள்ள வேண்டிய மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக''க் குறிப்பிடுகிறார், தஞ்சாவூர் மாவட்டம் கரம்பை கிராமத்தைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளி முத்தரசன்.


படிப்பகம்

www.padippakam.com



புதுத் துணிமணிகள் வாங்குவதோ, சினிமாவிற்குச் செல்வதோ எங்கள் பட்ஜெட்டில் கிடையாது; தேவைகளைச் சுருக்கிக் கொள்வதன் மூலம் செலவைக் குறைப்பதாகக் கூறும் சலவைத் தொழிலாளி செல்வராஜ் குடும்பத்தினர்.

நான்கைந்து பேர் கொண்ட சிறிய குடும்பம் கூட, ரேசனில் போடப்படும் 20 கிலோ அரிசியை மட்டுமே வைத்துக் கொண்டு மாதம் முழுவதையும் ஓட்டிவிட முடியாது. தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களைப் பொறுத்த வரை மாதம் முழுவதும் உணவு என்பதே பெரும் போராட்டமாகி விட்டதால், பல குடும்பங்கள் உணவுத் தேவையைச் சமாளிக்கவே கந்து வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய நிலைமை காவேரிப் பாசனப் பகுதிகளில் ஏற்பட்டு வருவதாகவும் முத்தரசன் குறிப்பிடுகிறார்.

ரேசனில் போடப்படும் மலிவு விலை அரிசியும் அடித்தட்டு மக்கள் அனைவருக்கும் கிடைப்பதில்லை. குறிப்பாக, கிராமத்தை விட்டு வெளியேறி வேலை தேடி நகரத்திற்கு வரும் கூலித் தொழிலாளர்கள்; தெருவோரங்களில் வசிக்கும் உதிரித் தொழிலாளர்களுக்கு இந்தச் ''சலுகை''க் கிடைப்பதேயில்லை. ''முகவரி அற்றவர்கள்'' என்ற காரணத்தை முகத்தில் அடித்தாற்போலக் கூறி, பல இலட்சம் தொழிலாளர்களுக்கு இந்த உரிமையை மறுத்து வருகிறது, அதிகார வர்க்கம்.

சட்டீஸ்கர் மாநிலத்தில் இருந்து வெளியேறி, சென்னையில் மேம்பாலம் கட்டும் ''வளர்ச்சி''ப் பணியில் ஈடுபட்டுள்ள சுனதர்-கேசரி தம்பதியினர், ''அரிசி இரண்டு ரூபாயா?'' என ஆச்சரியத்தோடு கேட்கிறார்கள். ''முகவரி அற்ற'' வெளி மாநிலத் தொழிலாளர்கள், தனித்தனியாகச் சமைப்பதை ஒதுக்கிவிட்டு, கூட்டாகச் சமைத்துச் சாப்பிடுவதன் மூலம் விலைவாசி உயர்வைச் சமாளிக்கிறார்கள்.

இந்தத் தொழிலாளர்கள், கிடைக்கும் கூலியில் தங்களின் உணவுத் தேவையைச் சமாளிப்பதோடு, ஊரில் இருக்கும் குடும்பத்திற்கும் பணம் அனுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். தனது அம்மாவின் பராமரிப்பில், தனது மகளையும், மகனையும் விட்டுவிட்டு, சென்னையில் கட்டிடத் தொழிலாளர்களாக வேலை பார்க்கும் நடராஜன்-தங்கம்மா தம்பதியினர், ''விலைவாசி உயர்வுக்கு ஏற்பத் தங்களின் கூலியை உயர்த்திக் கொடுக்க வேண்டும்'' எனக் கோருகிறார்கள். ஆனால், ரியல் எஸ்டேட் முதலாளிகளோ, சிமெண்ட் விலை உயர்வைக் காரணமாகக் காட்டி, தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கிறார்கள்.

''தெருவோரம் உள்ள தட்டு வண்டிக் கடைகளில் கூட, இட்லி வாங்கிச் சாப்பிட முடியாத அளவிற்கு விலைவாசி உயர்ந்து வருவதாக'' சென்னையில் நகர்ப்புற சேரிகளில் வசிக்கும் உதிரித் தொழிலாளர்கள் கூறுகிறார்கள்.

வரவுக்கும் செலவுக்குமான இடைவெளி அதிகரித்துக் கொண்டே போவதால், வீட்டில் ஒரு குந்துமணி நகையைக் கூட சேமிப்பாக வைத்திருக்க முடிவதில்லை. தனது நகையை அடமானம் வைத்துத் தான் இந்த மாத வீட்டு வாடகையைக் கட்டியதாகக் குறிப்பிடுகிறார், சென்னை - சைதாப்பேட்டையைச் சேர்ந்த சரசுவதி.

வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை செய்து வரும் பொன்னி, ''உணவுச் செலவைச் சமாளிக்க, கழித்துக் கட்டப்படும் காய்கறிகளை மட்டுமே வாங்குவதாகவும்; குழந்தைகளுக்குப் போதிய உணவு கிடைக்க வேண்டும் என்பதற்காக, தான் அரை வயிறு மட்டுமே சாப்பிடுவதாக''வும் கூறுகிறார்.

''மாதாந்திர அத்தியாவசிய செலவுகளைச் சமாளிக்கத் தனது வேலை நேரத்தைக் கூட்டிக் கொண்டதாக''க் கூறுகிறார், சென்னை பாண்டிபஜாரில் தரைக் கடை நடத்தும் முகம்மது இப்ராகிம். காலையில் 8 மணிக்குக் கடையைத் திறந்து இரவு 11 மணி வரை வியாபாரம் பார்த்தாலும், கிடைக்கும் வருமானம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட குறைவாகவே இருப்பதாகவும்; பெரிய கடைகளின் போட்டி, கொள்முதல் விலை உயர்வினால், தரைக்கடை வியாபாரிகளுக்குக் கிடைக்கும் இலாபம் குறைந்து கொண்டே போவதாகவும் முகம்மது இப்ராகிம் சுட்டிக் காட்டுகிறார்.

மதுரை - அண்ணாநகரில் உள்ள தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் வசிக்கும் மாரியம்மா (அருகில் அவரது பேரப் பிள்ளைகள்), ''சமையல் எண்ணெய் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொண்டதாக''க் கூறுகிறார். வீட்டு வேலைக்கோ, குப்பை பொறுக்கவோ செல்லும் இவரின் ஒருநாள் வருமானம் ரூ. 40/- தான்.



www.padippakam.com

உணவுப் பொருட்களின் விலை உயர்வோடு, கல்விச் செலவும் சேர்ந்து பெரும் சுமையாக மாறி நிற்கிறது. ''நாங்கள் குடும்ப நகைகள் அனைத்தையும் அடகு வைத்து விட்டோம்; கல்விக் கட்டணத்தை எப்படிக் கட்டப் போகிறோம் என்பது தெரியாமல் முழி பிதுங்கி நிற்கிறோம். பள்ளிக்கூட நிர்வாகமோ, இந்த ஆண்டு கல்விக் கட்டணத்தில் இரண்டாயிரம் ரூபாய் கூட்டி விட்டது. குழந்தைகளை வேறு பள்ளிக்கு மாற்றுவதும் முடியாத காரியம்'' எனப் புலம்புகிறார், மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த பிரமிளா.

உணவு விடுதிகளில் சாப்பிட்டுக் கொண்டு, வேலைக்குப் போய்வரும் இளைஞர்கள், தங்களின் மாதாந்திர உணவுக் கட்டணம் ஆயிரம் ரூபாய் அளவிற்கு அதிகரித்து விட்டதால், குடும்பத்திற்குப் பணம் அனுப்ப முடியாமல் திணறுவதாகக் கூறுகிறார்கள்.



தேனி மாவட்டம் - கருநாகமுத்தன்பட்டியைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளி பாண்டியன்-புஷ்பம் தம்பதியினர், குடும்பச் செலவைச் சமாளிக்கப் பல நேரங்களில் கந்துவட்டிக்குக் கடன் வாங்க வேண்டியிருப்பதாகக் கூறுகிறார்கள்.

•••

விலைவாசி உயர்வைச் சமாளிக்கும் தமிழக மக்களின் குறுக்கு வெட்டுத் தோற்றம் இது. ஆனால், உழைக்கும் மக்கள் தங்களை வருத்திக் கொள்வதன் மூலம், இந்தப் பாரதூரமான நிலைமையை எத்தனை நாளைக்குச் சமாளிக்க முடியும் என்பதுதான் கேள்வி. ஏனென்றால் ''மலிவாக உணவுப் பொருட்கள் கிடைத்து வந்த காலம் மலையேறி விட்டதாக''ப் பொருளாதார வல்லுநர்கள் பயமுறுத்துகிறார்கள். ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை அடுத்த ஓரிரு மாதங்களில் இருநூறு அமெரிக்க டாலரைத் தொட்டுவிடும் என அச்சமூட்டும் விதத்தில் செய்திகள் வெளிவருகின்றன.

உழைக்கும் மக்கள் விலைவாசி உயர்வைச் சமாளிக்க முடியாமல் திணறுவதை விடப் பரிதாபகரமானது, விலைவாசி உயர்வைச் சகித்துக் கொண்டு வாழும் மனோபாவம்தான். ஏனென்றால், இந்தச் சகிப்புத் தன்மை, அவர்களைச் சுய அழிவை நோக்கி அல்லவா தள்ளிச் செல்கிறது.

சென்னை - பாண்டிபஜாரில் தரைக்கடை நடத்தும் முகம்மது இப்ராகிம், தினந்தோறும் 15 மணிநேரம் கடையில் நின்று வியாபாரம் பார்த்தாலும், கிடைக்கும் வருமானம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிடக் குறைவாக இருப்பதாகக் கூறுகிறார்.



கடந்த ஓரிரு ஆண்டுகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் விலை, ஏறத்தாழ 300 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இதனால் தீராத நோய்க்கு ஆட்பட்டுள்ள பல நோயாளிகள் மருந்து உட்கொள்வதையே நிறுத்தி விட்டதாகக் கூறுகிறார், சென்னையைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் வீ.எஸ். நடராசன். விலைவாசி உயர்வைச் சமாளிக்க இன்று தங்களின் உணவுத் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளும் மக்கள், நாளை பட்டினி கிடந்து நிலைமையைச் சமாளிப்பார்களா?

உழைக்கும் மக்களிடம் காணப்படும் இந்தச் சகிப்புத் தன்மைதான், பெட்ரோல் விலை உயர்வு என்ற இடியை மக்களின் தலையில் இறக்கும் தைரியத்தை ஆளும் வர்க்கத்திற்கு வழங்கியிருக்கிறது. இந்தச் சகிப்புத் தன்மைதான், ''பெட்ரோல் விலையை முன்னரே உயர்த்தியிருக்க வேண்டும்'', ''விலையை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று பகிரங்கமாக அறிக்கை விடும் தைரியத்தை ப.சிதம்பரத்திற்கு வழங்கியிருக்கிறது. இந்தச் சகிப்புத் தன்மைதான், ''பொருளாதார வளர்ச்சி இருந்தால் விலைவாசி உயரத்தான் செய்யும்'' என மன்மோகன் சிங் திமிராகப் பேசுவதற்கு இடம் கொடுத்திருக்கிறது.

இந்தப் பொருளாதார வளர்ச்சி உழைக்கும் மக்களின் வாழ்க்கையைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கி வருகிறது. அதேசமயம், கச்சா எண்ணெயைச் சுத்திகரித்து விற்கும் அம்பானிக்கு, 2005-06-இல் கிடைத்த 5,195 கோடி ரூபாய் இலாபத்தை 2006-07-இல் ரூ. 10,372 கோடியாக வாரி வழங்கியிருக்கிறது. விலைவாசி உயர்வினால் நடுத்தர வர்க்கம் கூட வீட்டு வாடகை கொடுக்க முடியாமல் திண்டாடும் பொழுது, முகேஷ் அம்பானியோ 4,000 கோடி ரூபாய் செலவில் ஆடம்பர அரண்மனையைக் கட்டி வருகிறார்.

இப்படிப்பட்ட மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு கொண்ட பொருளாதார வளர்ச்சி அருவெறுக்கத்தக்கது. இதனை எதிர்த்துப் போராடினால், இருக்கின்ற வாழ்க்கையும் அழிந்து போய் விடுமோ என்ற அச்சம் உழைக்கும் மக்களை ஆட்டிப் படைக்கலாம். ஆனால், போராடாமல் சகித்துக் கொண்டு வாழ்ந்தால், இன்று இருப்பதைவிட மோசமான வாழ்க்கையை அல்லவா நாளை நாம் வாழ வேண்டியிருக்கும்?

● செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# கல்விக் கொள்ளையர்களுக்கு எதிராக...

## - பு.மா.இ.மு.வின் முற்றுகைப் போராட்டம்-ஆர்ப்பாட்டம்

கடந்த ஜூன் 4-ஆம் தேதி பள்ளி கல்வித் துறையின் மூலம், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு ஆணை வெளியிட்டது. இருப்பினும், கட்டடம் கட்ட, நாற்காலி வாங்க, புதிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க, துப்புரவுப் பணிக்காக, 11-ஆம் வகுப்பு மாணவர்களின் கல்வி குரூப் மாற்றித்தர - எனப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலம் அரசுப் பள்ளிகளில் 2 ஆயிரம், 3 ஆயிரம் என்று ஏழை எளிய மாணவர்களிடம் கட்டாயக் கட்டணக் கொள்ளை தொடர்கின்றது.

சென்னை-குரோம்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர்-ஆசிரியர் கழகம் மூலம் 7-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை ரூ. 1,500, 11-ஆம் வகுப்புக்கு ரூ. 2,500, அரசு இலவசமாகத் தரும் பாடப்புத்தகங்களுக்கு ரூ.100 என கடந்த ஆண்டில் பல லட்ச ரூபாயை மாணவர்களிடம் கொள்ளையடித்த நிர்வாகம், இவ்வாண்டு வசூல் வேட்டையை நடத்தியது. இதனையறிந்த புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியினர், ''பெற்றோர்-ஆசிரியர் கழகம் எனும் கொள்ளைக் கூட்டத்தை விரட்டியடிப்போம்! சட்டவிரோத கட்டாய நன்கொடைக்கு முடிவு கட்டுவோம்!'' எனும் முழக்கத்துடன் துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் இப்பகுதியில் விரிவாகப் பிரச்சாரம் செய்து, அதன் தொடர்ச்சியாக பெற்றோர்களையும் மாணவர்களையும் அணிதிரட்டி 17.6.08 அன்று காலை 11 மணியளவில் பள்ளித் தலைமையாசிரியரை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பெருந்திரளாகப் பெற்றோர்களும் மாணவர்களும் சூழ, விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த முற்றுகைப் போராட்டத்தால் அரண்டு போன பள்ளி நிர்வாகமும் பெற்றோர்-ஆசிரியர் கழகப் புள்ளிகளும் இனி நன்கொடை ஏதும் வாங்கமாட்டோம்; வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறோம் என்று உறுதியளித்தனர். மாவட்டக் கல்வி அதிகாரிகள் இப்போராட்டச் செய்தியை அறிந்ததும், மறுநாளே அப்பள்ளியில் சோதனை நடத்தி, மாணவர்களிடம் கட்டாயமாகப் பறித்த தொகையை திருப்பிக் கொடுக்க உத்தரவிட்டு நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர். நன்கொடை எதுவும் மாணவர்களிடம் வாங்கக் கூடாது என்று அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரமணா அறிவித்துள்ளார்.

●●●



அறந்தாங்கியில்...


சென்னையில்...

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியிலுள்ள வெஸ்ட்லி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களிடம் ரூ. 20 ஆயிரம் கொடுத்தால் தான் மதிப்பெண் சான்றிதழ் தரப்படும் என்று அடாவடித்தனமாகக் கொள்ளையடித்து வந்தது அப்பள்ளி நிர்வாகம். இச்சட்டவிரோதப் பகற்கொள்ளைக்கு எதிராக வையாபுரி என்ற ஒரு மாணவியின் தந்தை, தன்னந்தனியே உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் மூலம் இப்பகற்கொள்ளையை அறிந்த தஞ்சை பு.மா.இ..மு.வினர், ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு கனகராஜின் சட்டவிரோதக் கல்விக் கொள்ளையை மக்களிடம் அம்பலப்படுத்தி பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதனால் இப்பயிற்சிப் பள்ளியில் இவ்வாண்டு மாணவர்களே சேரவில்லை. அரண்டுபோன இக்கல்வி வியாபாரி, 10.6.08 அன்று வட்டாட்சியர் முன்னிலையில், பு.மா.இ.மு. மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் பரமானந்தம் மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களிடம் பேச்சுவார்த்தைக்கு வந்து, வசூலித்த பணத்தை மாணவர்களிடம் திருப்பித் தருவது உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டார். என்னை யாரும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது' என்று கொக்கரித்த இக்கல்வி வியாபாரியின் கொட்டத்தை ஒடுக்கிய பு.மா.இ.மு., பாதிக்கப்பட்ட மாணவர்களைத் திரட்டித் தனியார் கல்வி நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கு எதிராகவும் இலவசக் கல்வி உரிமைக்காகவும் 20.6.08 அன்று அறந்தாங்கியில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

**தகவல்: புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி.**


படிப்பகம்

www.padippakam.com

# நேபாளம்:
# வர்க்கப் போராட்டத்தில் புதிய உத்திகள்

அண்டை நாடான நேபாளத்தில் மாவோயிஸ்டுகளின் தலைமையில் மன்னராட்சி வீழ்த்தப்பட்டு, அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் முடிந்து, புதிய இடைக்கால அரசை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஜனநாயகக் குடியரசை நிறுவுவதற்கான திசையில் அந்நாடு அமைதியான முறையில் பயணிப்பதாகத் தோன்றினாலும், அந்நாட்டில் கொந்தளிப்பான அரசியல் போராட்டங்கள் தொடர்கின்றன.

நேபாளப் புரட்சியைத் தலைமையேற்று வழிநடத்திய மாவோயிஸ்டுகள், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் வெற்றியோடு சுயதிருப்தி அடைந்து முடங்கிவிடவில்லை. இடைக்கால அரசில் பங்கேற்று முற்போக்கான சட்டங்களை இயற்றுவதன் மூலம் மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவி விட முடியும் என்று அவர்கள் கனவு காணவுமில்லை. ஒருபுறம், இடைக்கால அரசில் பங்கேற்று ஜனநாயகக் குடியரசை நிறுவ மேலிருந்து போராடி வரும் மாவோயிஸ்டுகள், மறுபுறம் மக்கள்திரள் போராட்டங்களைக் கட்டியமைத்து கீழிருந்தும் நிர்பந்தம் கொடுத்து புரட்சியைத் தொடர்கிறார்கள்.

நேபாளத்தில் மன்னராட்சி வீழ்த்தப்பட்டு, மன்னர் குடும்பம் அரண்மனையிலிருந்து வெளியேறி சாதாரணக் குடிமகனாக வாழவேண்டும் என்று மேலிருந்து சட்டம் இயற்றப்பட்ட போதிலும், அவர் தானாக வெளியேறிவிடவில்லை. கீழிருந்து மக்கள்திரள் போராட்டங்கள் தொடர்ந்த பின்னரே, மன்னர் குடும்பம் மூட்டை முடிச்சுகளோடு அரண்மனையை விட்டு வெளியேறியது. மேலிருந்து சட்டங்கள் இயற்றினால் மட்டும் போதாது; கீழிருந்து மக்கள்திரள் போராட்டங்களும் நிர்பந்தங்களும் எவ்வளவு அவசியம் என்பதை இது எடுப்பாக உணர்த்துகிறது.

தற்போது, இடைக்கால அரசை நிறுவுவதிலும் அமைச்சர் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதிலும் அரசியல் கட்சிகளுக்கிடையே முரண்பாடுகளும் இழுபறியும் நீடிக்கின்றன; மாவோயிஸ்டுகளுக்கு இதர அரசியல் கட்சிகள் பல்வேறு முட்டுக்கட்டைகள் போட்டு முடக்கத் துடிக்கின்றன; முந்தைய அரசின் பிரதமரான கொய்ராலா, பதவி விலக மறுக்கிறார். இவற்றையும், புதிய முற்போக்கான சட்டங்கள் இயற்றுவதையும் மேல்மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் - உடன்பாடுகள் மூலம் மட்டும் தீர்வு காண முடியாது. கீழிருந்து மக்கள் திரள் போராட்டங்கள் - நிர்பந்தங்கள் மூலமே பிற்போக்கு சக்திகளை வீழ்த்தி ஜனநாயகக் குடியரசை நிறுவ முடியும் என்பதையே நேபாள நிலைமைகள் படிப்பினையாக உணர்த்துகின்றன.

புரட்சியின் வளர்ச்சிப் போக்கில், இடைக்கால அரசில் பங்கேற்று மேலிருந்து போராடுவது என்ற மார்க்சிய-லெனினிய போர்த்தந்திர உத்தியை நேபாளத்தின் பருண்மையான நிலைமைக்கேற்ப செயல்படுத்தி வெற்றியைச் சாதித்துள்ள மாவோயிஸ்டுகள், அப்போர்த்தந்திர உத்தியின் வழியில் கீழிருந்தும் மக்கள்திரள் போராட்டங்களைத் தொடர்கின்றனர். நேபாள மாவோயிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினரும் முக்கிய தலைவர்களில் ஒருவருமான தோழர் பாபுராம் பட்டாரய், அமெரிக்காவின் மேடிசன் குடிமக்கள் குழும வானொலிக்கு (WORT-FM) கடந்த மே 3-ஆம் தேதியன்று அளித்த பேட்டியில், கீழிருந்து மக்கள்திரள் போராட்டங்களைத் தொடர வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். மனித இன வரலாற்று ஆய்வாளர்களான ஸ்டீபன் மைக்செல், மேரி டெஸ் செனே ஆகியோருக்கு அவர் அளித்த பேட்டி, இவ்வானொலியில் மே 4-ஆம் தேதியன்று ஒலிபரப்பானது. இப்பேட்டி ''எக்னாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி'' என்ற ஆங்கில வார இதழிலும் (மே 10-16, 2008) வெளிவந்துள்ளது. மிக விரிவான இந்தப் பேட்டியைச் சுருக்கி சாரத்தை மட்டும் இங்கே தொகுத்தளித்துள்ளோம்.

— ஆசிரியர் குழு

**★ இம் மே நாளில் தொழிலாளர்களுக்கு உங்கள் கட்சி விடுத்துள்ள செய்தி என்ன?**

நேபாளத்தில் நாங்கள் முற்றிலும் சொந்தக் காலில் நின்று போராடி புரட்சியின் வெற்றியைச் சாதித்துள்ளோம். அதே சமயம், நாங்கள் எதிர் கொண்டுள்ள சவால்கள் ஏராளம். நேபாள பிற்போக்குவாதிகள் வரலாற்று அரங்கிலிருந்து வெகு எளிதில் விலகவிட மாட்டார்கள். அவர்கள் கடும் எதிர்த்தாக்குதலைத் தொடுக்கவே செய்வர். எனவே இந்தச் சவாலை நாங்கள் பாரதூரமானதாகக் கருதிச் செயல்பட வேண்டியுள்ளது. தூக்கியெறியப்பட்ட நிலப்பிரபுத்துவ பிற்போக்கு சக்திகளின் எதிர்த் தாக்குதலை முறியடிக்க தொழிலாளர்களும் உழைக்கும் வர்க்கத்தினரும் தேவையான தயாரிப்புகளைச் செய்ய வேண்டியுள்ளது.

அடுத்து, நாங்கள் ஒரு புதிய நேபாளத்தை உருவாக்க வேண்டும். சமாதானம், ஐக்கியம், முன்னேற்றத்தைக் கொண்ட ஒரு புதிய தேசிய ஒருமைப்பாட்டை நிறுவுவதில் நாங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளை வீழ்த்தி, தொழிற்துறை உறவுகளை



படிப்பகம்

www.padippakam.com

வளர்த்து சோசலிசத்தை நோக்கி முன்னேற தொழிலாளி வர்க்கம் தலைமையேற்க வேண்டும். இதுதான் தொழிலாளி வர்க்கத்தின் நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்யும்.

தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் மக்களுக்கும் இவ்விரு கடமைகளையே மே நாள் நிகழ்ச்சிகளில் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம்.

***★ இந்தத் திசையில் செயல்பட நீங்கள் என்ன நடைமுறைப் பணிகளை மேற்கொள்ளப் போகிறீர்கள்?***

நாங்கள் தேர்தலில் வெற்றியைச் சாதித்துள்ள போதிலும், பிற்போக்கு சக்திகள் - குறிப்பாக, ஏகாதிபத்தியவாதிகள் பல்வேறு இரகசிய சதிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். மாவோயிஸ்டுகளிடம் அதிகாரத்தைக் கையளிக்கக் கூடாது என்று அவர்கள் முடியாட்சி சக்திகளையும் அதிகார வர்க்க முதலாளித்துவ கும்பலையும் தூண்டிவிட்டு, மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்து வருகிறார்கள். நேபாள மக்கள் இவற்றுக்கெதிராக ஏற்கெனவே பல போராட்டங்களை நடத்தி வந்துள்ள போதிலும், தொழிலாளி வர்க்கமும் ஒடுக்கப்பட்ட மக்களும் இச்சதிகளை முறியடிக்க போராட்டத்துக்குத் தயாராக வேண்டும். அவசியமானால், வீதிகளில் இறங்கி போராடி இப்பிற்போக்கு சக்திகளை வீழ்த்த வேண்டும். நடைமுறையில் இதைச் சாதிக்க மக்கள் தயாராக வேண்டும்.

இரண்டாவதாக, எமது தலைமையில் புதிய அரசை நிறுவிய பிறகு, சில உடனடி நிவாரணங்களை உழைக்கும் வர்க்கத்துக்கும் ஏழை மக்களுக்கும் செய்ய வேண்டியுள்ளது. வறுமை, வேலையின்மை, புறக்கணிப்பு ஆகியவற்றால் நீண்டகாலமாக எமது மக்கள் வேதனைப்படுகிறார்கள். இதனைக் களைய, கூட்டுறவுச் சங்க கடைகள் எனும் வலைப்பின்னலின் மூலம் பொது விநியோக முறையை (ரேஷன்) விரிவாக்கி உறுதிப்படுத்த நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

அடுத்து, எமது கொள்கை அறிக்கையிலும், இடைக்கால சட்டத்திலும் குறிப்பிட்டுள்ளபடி கல்வி, மருத்துவம், சுகாதாரம் ஆகியன மக்களின் அடிப்படை உரிமைகள். புதிய அரசின் வரவு-செலவு திட்டத்தில் (பட்ஜெட்) இதற்கென முறையான நிதி ஒதுக்கீடு செய்து இதனைச் சாதிக்கவும் தீர்மானித்துள்ளோம். இவற்றைச் செயல்படுத்த, நடைமுறையில் மக்கள் பங்கேற்பும் ஈடுபாடும் மிக அவசியமாகும். அவர்கள் எமது கட்சிக்கும் எதிர்கால அரசாங்கத்துக்கும் ஆலோசனைகள் வழங்க வேண்டும்; எமது கட்சியும் அரசாங்கமும் சரியான திசையில் செயல்படுகிறதா என்பதை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும் என்று நாங்கள் மக்களிடம் தெரிவித்துள்ளோம். உழைக்கும் வர்க்கத்தினரும் ஏழை மக்களும் கீழிருந்து நிர்பந்தம் செய்யாவிடில், அரசாங்கம் சரியான திசையில் இயங்க முடியாது. இது தொடர்பாக, வரலாற்றில் ஏராளமான எதிர்மறை படிப்பினைகள் உள்ளன. எனவே, உழைக்கும் மக்கள் விழிப்புடன் கண்காணித்து, தங்கள் அதிகாரத்தைச் செயல்படுத்தி கீழிருந்து அரசைக் கட்டுப்படுத்தி இயக்காவிட்டால், அரசாங்கமானது திசை விலகிப் போய்விடும்; தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போய்விடும்.



நேபாள மாவோயிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் பாபுராம் பட்டாராய்.

**எங்கள் கட்சித் தலைமை முழுவதும்<br>இந்த அரசாங்கத்தில் பங்கேற்று விடவில்லை<br>ஒரு பிரிவினர் மட்டுமே<br>அரசாங்கத்தில் பங்கேற்றுள்ளோம்.<br>மற்றொரு பிரிவினர் அரசுக்கு வெளியே<br>மக்களைத் தொடர்ந்து அமைப்பாக்கி,<br>போராட்டத்துக்குத் தயார்படுத்தி வருகிறோம்.**

***★ கீழிருந்து நிர்பந்தம் கொடுத்து மக்கள் செயல்படுவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறீர்கள்?***

முதலாவதாக, நாங்கள் அரசாங்கத்தில் பங்கேற்றுள்ள போதிலும் இந்த அரசாங்கமானது முழுமையான புரட்சிகர அரசாங்கமல்ல; இடைக்கால அரசாங்கம்தான். எனவே, முதன்மை எதிரியை வீழ்த்த நாங்கள் இதர வர்க்கங்களுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டியுள்ளது. எனினும், இதர வர்க்கங்களைவிட நாங்கள் முன்னிலையில் நிற்க விழைகிறோம். அரசின் உள்ளிருந்தே செயல்பட்டு அதன் தன்மையை மாற்றியமைக்க விழைகிறோம். இதன் காரணமாகவே, அரசுக்கு வெளியே மக்களின் நிர்பந்தத்தை நாங்கள் கட்டியமைக்க வேண்டியுள்ளது. எங்கள் கட்சித் தலைமை முழுவதும் இந்த அரசாங்கத்தில் பங்கேற்று விடவில்லை. ஒரு பிரிவினர் மட்டுமே அரசாங்கத்தில் பங்கேற்றுள்ளோம். மற்றொரு பிரிவினர் அரசுக்கு வெளியே மக்களைத் தொடர்ந்து அமைப்பாக்கி, போராட்டத்துக்குத் தயார்படுத்தி வருகிறோம். இந்தத் திசை வழியிலேயே எமது கட்சி செயல்படுகிறது.

புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க அரசாங்கத்துக்கு உள்ளிருந்தே போராடுவது தற்போது முதன்மையான போராட்ட வடிவமாக உள்ளது. அதேசமயம், எமது கட்சி அரசாங்கத்துக்கு வெளியிலிருந்தும் போராடும். எனவேதான் எமது மையக் குழுவின் அனைத்து தோழர்களும் இத்தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்படாமல், ஒரு பிரிவினர் மட்டும் தேர்தலில் போட்டியிட்டோம். எமது கட்சியின் மற்றொரு பிரிவினர் அரசுக்கு வெளியே மக்கள் போராட்டங்களைக் கட்டியமைப்பார்கள். அதன் மூலம் அரசுக்கு நிர்பந்



படிப்பகம்

www.padippakam.com

தத்தை ஏற்படுத்தி, மக்களாட்சிக்கான அரசியல் சட்டத்தை உருவாக்க துணை செய்வார்கள்.

இதுதவிர, நாங்கள் சில மக்கள்திரள் அமைப்புகள் - நிறுவனங்களை உருவாக்க முயற்சித்து வருகிறோம். இதற்கான பருண்மையான வடிவங்களை இன்னும் தீர்மானிக்காத போதிலும், கொள்கையளவில் இது பற்றிய முடிவுகளை எடுத்துள்ளோம்.

**★ உங்களது பொருளாதாரக் கொள்கைப்படி, அனைத்துலக மூலதனத்தின் சவாலை எதிர்த்து நின்று, உள்நாட்டு மூலதனத்தைத் தக்க வைத்துக் கொண்டு முன்னேற என்ன வழிமுறைகளை மேற்கொள்ளப் போகிறீர்கள்?**

உள்நாட்டு தேசிய மூலதனத்தைத் திரட்டுவதற்கே நாங்கள் அழுத்தம் கொடுப்போம். எமது அடிப்படைத் தேவைகளுக்காக நாங்கள் உள்நாட்டு மூலாதாரங்களைத் திரட்டாவிட்டால், நாங்கள் அனைத்துலக மூலதனத்தால் உருட்டி மிரட்டப்படுவோம். எனவே, உள்நாட்டு மூலாதாரங்களைத் திரட்டுவதே எமது முதன்மையான பணி.

அதேசமயம், நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு - அடிக்கட்டுமான வளர்ச்சிக்கு எமக்கு அந்நிய முதலீடுகள் கொஞ்சம் தேவைப்படுகிறது. அதற்கான அந்நிய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். அவை நிர்பந்தம் கொடுக்கும் என்பது உண்மைதான். அதேசமயம், அந்நிறுவனங்களுக்கும் சில நிர்பந்தங்கள் உள்ளன. அவை எம்முடன் ஒத்துழைக்க மறுத்தால் அவை மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிடும்.

மேலும், அந்நிய மூலதனங்களுக்கு போர்த்தந்திர முக்கியத்துவமிக்க நீண்டகால நலன்களும் உள்ளன. அவை சீனா மற்றும் இந்தியாவின் பெரும் சந்தையைக் குறிவைத்துள்ளன. சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் போர்த்தந்திர முக்கியத்துவமுடைய இடத்தில் நேபாளம் அமைந்துள்ளது. நேபாளத்தில் அமைதியான நிலைமை இல்லாவிட்டால், அது இந்திய-சீன சந்தைகளையும் பாதிக்கும் என்பது அவற்றுக்குத் தெரியும். இந்த வழியில் நேபாளத்தில் அவையும் தமது சொந்த நலன்களைக் கொண்டுள்ளன.

உள்நாட்டு மூலாதாரங்களைச் சார்ந்து நிற்கும் அதேசமயம், அடிக்கட்டுமான வளர்ச்சிக்கான அந்நிய முதலீட்டைப் பெற நாங்கள் எச்சரிக்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். மக்கள் போராட்டங்கள் மூலம், அந்நிய நிறுவனங்களின் நிர்பந்தங்களிலிருந்து எமது பொருளாதாரம் விடுதலையடைய முடியும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

**★ உங்களது பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்த உழைக்கும் வர்க்கத்தை - குறிப்பாக உங்களது தொழிற்சங்கத்தை எவ்வாறு ஈடுபடுத்துவீர்கள்?**

நேபாளத்தில் எமது கட்சியின் தலைமையிலுள்ள தொழிற்சங்கங்கள் மிக வலுவானவை. அனைத்து ஆலைகள் - தொழிற்கூடங்களில் எமது தொழிற்சங்கங்களே தொழிலாளர்களை அமைப்பு ரீதியாகத் திரட்டி பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளன.

நேபாளத்தில் புல்லுருவித்தனமான மூலதனமே அதிகாரத்தில் உள்ளது. இதை தரகு-அதிகார வர்க்க முதலாளித்துவம் என்று நாங்கள் குறிப்பிடுகிறோம். இந்த வகையான முதலாளித்துவம் தொழிலுற்பத்தியையோ வேலை வாய்ப்பையோ பெருக்குவதில்லை. சிதைக்கப்பட்ட, ஏகாதிபத்திய சார்புத் தன்மை கொண்ட இத்தகைய முதலாளித்துவத்தை நாங்கள் எதிர்க்கிறோம். நேபாளத்திலுள்ள ஐந்து நட்சத்திர விடுதிகளில் எமது தொழிற்சங்கம் கூலி உயர்வு - வேலை நிலைமைகளுக்காகப் போராட்டங்களை நடத்தியபோது, சில விடுதி உரிமையாளர்கள் விடுதிகளை மூடிவிட்டு நாட்டை விட்டே வெளியேறி விட்டனர். சில பிற்போக்காளர்கள், நாங்கள் தொழில் முதலீட்டுக்கே எதிரானவர்கள் என்று எதிர்ப்பிரச்சாரம் செய்தனர். நாங்கள் இத்தகைய புல்லுருவித்தனமான முதலீடுகள் வெளியேறுவதைப் பற்றி கவலைப்படவில்லை. அதேசமயம், நாங்கள் உற்பத்தி சார்ந்த உள்நாட்டு முதலீடுகளை எதிர்ப்பதில்லை. உள்நாட்டு முதலாளிகள் - வர்த்தகர்களின் பல்வேறு போராட்டங்களுக்கு ஆதரவாக எமது தொழிற்சங்கங்கள் செயல்பட்டுள்ளன. தேசிய முதலாளித்துவத்தையும் சிறு தொழில்களையும் வர்த்தகத்தையும் வளர்த்தெடுப்பதையே நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.



''மன்னர் குடும்பமே, அரண்மனையை விட்டு வெளியேறு!'' - என அரண்மனையை முற்றுகையிட்டு நேபாள மக்கள் நடத்திய போராட்டத்தின் போது, முன்னாள் மன்னர் மகிந்திராவின் சிலை மீதேறி வெற்றியைப் பறைசாற்றும் இளைஞர். தலைநகர் காத்மாண்டுவில், மாவோயிஸ்டுகளின் தலைமையில் முடியாட்சி வீழ்த்தப்பட்ட வெற்றியைக் கொண்டாடும் நேபாள மக்கள். (கீழ்படம்).


படிப்பகம்

www.padippakam.com

**★ தற்போதைய அரசின் கொள்கைப்படி உங்களது தொழிற்சங்கங்கள் எவ்வாறு தகவமைத்துக் கொண்டு செயல்படும்?**

எமது தொழிற்சங்கங்கள் அரசியல்மயமானவை. அரசியல் அதிகாரம் தொழிலாளர்களிடமும் உழைக்கும் மக்களிடம் இல்லாதவரை போராடிப் பெற்ற உரிமைகளையும் பொருளாதார ஆதாயங்களையும் தக்க வைத்துக் கொள்ள முடியாது என்பதை அவர்கள் நன்குணர்ந்துள்ளனர். பொருளாதார கோரிக்கைகளுக்கான போராட்டங்களோடு அரசியல் போராட்டங்களையும் எமது சங்கங்கள் நடத்தி வந்துள்ளன.

இதுதவிர, தொழிற்சாலைகளில் எமது சங்கங்கள் வலுவாக இருப்பதால், ஆலை நிர்வாகங்கள் முக்கிய கொள்கை முடிவுகள் அனைத்தையும் தொழிலாளர்களின் ஒப்புதலைப் பெற்றால்தான் செயல்படுத்த முடியும். இதை ஏற்கெனவே நாங்கள் சாதித்துள்ளோம். "தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் அரசியல் அதிகாரம்" எனும் சோவியத் வடிவத்தை முழுமையாகக் கொண்டிராத போதிலும், அந்த திசையில் நாங்கள் தடம் பதித்துள்ளோம். நேபாள தொழிற்சாலைகளில் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளில் எமது தொழிலாளர்களே செல்வாக்கு செலுத்தி கட்டுப்படுத்தும் நிலையில் உள்ளனர்.

**★ விவசாயிகள் பற்றியும் நிலச்சீர்திருத்தம் பற்றியும் கட்சியிலும், அரசாங்கத்திலும் விவசாயிகளின் பங்கேற்பு குறித்தும் என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளீர்கள்?**

எமது நாடு விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எமது நாட்டின் மொத்த உழைப்பாளர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் விவசாயிகள், இவர்களில் பெரும்பாலோர் ஏழை விவசாயிகள். அவர்களிடம் அரை ஹெக்டேருக்கும் குறைவான நிலமே உள்ளது. உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற எமது புரட்சிகர திட்டத்தின் படி, நிலப்பிரபுக்களிடமிருந்து நிலங்களைப் பறித்து கூலி-ஏழை விவசாயிகளுக்கு மறுவிநியோகம் செய்யும் நிலச்சீர்திருத்த இயக்கத்தை ஏற்கெனவே நாங்கள் நடத்தி வருகிறோம். புதிய அரசின் கீழும் இது தொடரும்.

**மாவோயிஸ்டுகளிடம் அதிகாரத்தைக் கையளிக்கக் கூடாது என்பதற்காக ஏகாதிபத்தியவாதிகள் முடியாட்சி சக்திகளையும் அதிகாரவர்க்க முதலாளித்துவக் கும்பலையும் தூண்டிவிட்டு வருகிறார்கள்.**

மூன்று வழிமுறைகளின் மூலம் நிலச்சீர்திருத்தத்தையும் விவசாயத்தைச் சீரமைத்து முன்னேற்றவும் தீர்மானித்துள்ளோம். முதலாவதாக, உற்பத்தி உறவுகளை - அதாவது, நிலவுடைமை முறைகளை மாற்றியமைத்தல்; சமவெளிப் பகுதிகளில் பல ஹெக்டேர் நிலங்களை நிலப்பிரபுக்கள் குவித்து வைத்துள்ளனர். அவர்கள் விவசாயத்தில் ஈடுபடாமல் விவசாயிகளைச் சுரண்டி நகரங்களில் உல்லாசமாக வாழ்கின்றனர். நிலத்திலிருந்து விலகியுள்ள - விவசாயத்தில் ஈடுபடாத நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறித்து, உழுபவனுக்கே நிலம் சொந்தம் எனும் கொள்கைப்படி, கூலி-ஏழை விவசாயிகளுக்கு இந்நிலங்களைப் பகிர்ந்தளித்து, விவசாய உற்பத்தியைப் பெருக்குவோம்.

அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, "ஜனநாயகக் குடியரசுக்கெதிரான பிற்போக்கு சக்திகளின் எதிர்த்தாக்குதலை முறியடிப்போம்!" என்று சூளுரைக்கும் நேபாள மாவோயிஸ்டுகளின் மே நாள் பொதுக்கூட்டம்.



இரண்டாவதாக, சிறு விவசாயிகளை கூட்டுறவுச் சங்கங்களில் அணிதிரட்டுவோம். அரசு இச்சங்கங்களுக்கு சலுகைகளையும் உரிமைகளையும் அளிக்கும். விவசாயிகள் அரசாங்கத்தில் பங்கேற்கவும் கட்டுப்படுத்தவும் இத்தகைய கூட்டுறவு சங்கங்கள் மிக அவசியமாகும்.

மூன்றாவதாக, நவீன நீர்ப்பாசனம், உழுபடைக் கருவிகள், கூட்டுப் பண்ணைகள் மூலம் விவசாயத்தை மேம்படுத்தவும் தீர்மானித்துள்ளோம். விவசாயிகளின் ஊக்கமான பங்கேற்பு இல்லாமல் இவற்றைச் சாதிக்க முடியாது. ஏற்கெனவே இத்தகைய பணிகளில் எமது கட்சி ஈடுபட்டு வந்துள்ளது.

அடுத்து, உலக வங்கியும், உணவு மற்றும் விவசாய அமைப்பும் (FAO) தீர்மானித்து ஏழைநாடுகளில் திணித்துள்ளதைப் போல, ஏற்றுமதி அடிப்படையிலான பணப்பயிர்

www.padippakam.com

உற்பத்தியைப் பெருக்குவதாக எமது விவசாய கொள்கை இருக்காது. எமது விவசாயிகளின், மக்களின் உணவுப் பாது காப்பே முதன்மையானது. உள்நாட்டுத் தேவைக்கேற்ப உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதே எமது விவசா யக் கொள்கை. உற்பத்தி பெருகி உபரியாகக் கிடைத்தால் மட் டுமே நாங்கள் ஏழை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம். உணவு தானியங்களுக்காக ஏகாதிபத்தியங்களிடம் கையேந் துவதாக ஒருக்காலும் எமது விவசாயக் கொள்கை அமை யாது.

***★ இளம் கம்யூனிஸ்டு கழகங்களின் பங்கு என்ன?***

எமது இளம் கம்யூனிஸ்டு கழகங்கள் தற்போதைய புரட் சிப் போரில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. இவை அர்ப்பணிப்பும் கடமையுணர்வும் மிக்க அரசியல் சக்தியா கும். தேர்தலுக்கு முன்னும் பின்னும் மக்களை அணிதிரட்டி அரசியல் பிரச்சாரம் செய்வதிலும், பிற்போக்காளர்களின் சூழ்ச்சிகள் - சதிகளை முறியடித்து வெற்றியைச் சாதித்ததிலும் இவை முக்கிய பங்காற்றியுள்ளன. வருங்காலத்திலும் இக்கழ கங்கள் பிற்போக்கு - எதிர்ப்புரட்சி சக்திகளை முறியடித்து நாட்டையும் ,மக்களையும் காக்கும் கடமையில் ஈடுபடும். அடுத்து, இக்கழகங்கள் தம்மை அணிதிரட்டிக் கொண்டு உற் பத்திக்கான நடவடிக்கைகளிலும், மக்களுக்கு உடனடி நிவார ணமளிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடும். மக்களைத் திரட்டி ஆரம்பக் கல்வி அளித்தல், மருத்துவசேவை, கட்டு மானப் பணிகள் முதலானவற்றில் ஈடுபடுவதோடு, அரசியல் நிர்ணய சபை பற்றியும் சட்டங்களைப் பற்றியும் மக்களுக்கு விளக்கி, அரசு நடவடிக்கைகளில் ஈடுபடவும் கண்காணிக் கவும் துணை நிற்கும்.

***★ ''புதிய நேபாளத்தைக் கட்டியமைப்போம்!'' என்ற முழக்கத்தை தேர்தலின்போது உங்கள் கட்சி முன் வைத்துப் பிரச்சாரம் செய்தது. தற்போதும் இதே முழக்கத்தை எதிரொலிக்கிறது. புதிய நேபாளம் என்பதன் உண்மையான பொருள் என்ன?***

புதிய நேபாளம் என்பது அரசியல் ரீதியில் நிலப்பிரபுத் துவ அரசியல் - பொருளாதார - கலாச்சாரத்தை முற்றாக நிரா கரிப்பதாகும். புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் தலைமை யில் சமூக - பொருளாதார மாற்றத்தை நிறுவுவதாகும். பழைய ஒழுங்கமைவை அடித்து நொறுக்கிவிட்டு புதிய முற் போக்கான ஒழுங்கமைவைக் கட்டியமைப்பதாகும். நிலப்பிர புத்துவ உறவுகளைத் தூக்கியெறிந்துவிட்டு, விவசாயத்தைச் சீரமைத்து, உற்பத்தி சக்திகளை வளர்த்து, நவீன தொழிற்துறை உறவுகளை நிறுவி, சோசலிசத்தை நோக்கிய திசைவழியில் முன்னேறுவதே புதிய நேபாளம் என்ற முழக்கத்தின் பொருளாகும். இதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே தற்போதைய இடைக்கட்டத்தில் எமது மையக் கடமையாக உள்ளது.

***★ அரசியல் நிர்ணய சபையில் நீங்களும் பிற இடது சாரி சக்திகளும் சேர்ந்தாலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாத நிலையில், முற்போக்கான சட் டங்களை இயற்றுவதில் இழுபறி நீடிக்குமே! பிற்போக்கு சக்திகள் முட்டுக்கட்டை போடுமே! உங்கள் மீது வீண்பழி சுமத்துமே! இந்நிலையில் அரசியல் நிர்ணய சபையை எவ் வாறு இயக்கிச் செல்லப் போகிறீர்கள்?***

நீங்கள் கூறுவது உண்மைதான். இது சுலபமான பாதை அல்ல. பெரும் போராட்டங்களின் மூலம்தான் புதிய முற் போக்கான சட்டங்களை இயற்ற முடியும் என்பதை நாங்கள் நன்கறிந்துள்ளோம். அதேசமயம் அரசியல் நிர்ணய சபை யில் நாங்கள் 37% இடங்களைப் பெற்றுள்ளோம். இது மூன் றில் ஒரு பங்கை விட அதிகமானது. எனவே, எமக்கு வெட்டு அதிகாரம் (''வீட்டோ'') உள்ளது.

**நிலப்பிரபுத்துவ உறவுகளைத் தூக்கியெறிந்துவிட்டு, விவசாயத்தைச் சீரமைத்து, உற்பத்தி சக்திகளை வளர்த்து, நவீன தொழிற்துறை உறவுகளை நிறுவி, சோசலிசத்தை நோக்கிய திசைவழியில் முன்னேறுவதே புதிய நேபாளத்தின் நோக்கம்.**

எங்கள் ஆதரவு இல்லாமல் பிற்போக்கு சக்திகளால் மூன் றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற முடியாது. நாங்கள் முற்போக்குச் சட்டங்களை இயற்றுவதை இச்சக்தி கள் தடுக்குமானால், அவற்றின் பிற்போக்குச் சட்ட முன்மொ ழிதலையும் எங்களால் தடுக்க முடியும். இது அரசியல் நிர் ணய சபையில் பெரும் முட்டுக்கட்டையாகவே அமையும். நாங்கள் வெற்றி பெறுவது கடினமானதுதான் என்றாலும், நாங்கள் பின்வாங்கிவிட மாட்டோம்; தோற்றுவிடவும் மாட் டோம்.

அரசியல் நிர்ணய சபையில் மூன்று விதமான சக்திகளும் மும்முனைப் போட்டியும் முரண்பாடும் நீடிக்கின்றன. நிலப் பிரபுத்துவ - முடியாட்சி ஆதரவு சக்திகள் ஒருபுறம்; முதலா ளித்துவ நாடாளுமன்ற சக்திகள் மறுபுறம்; இடதுசாரி - பாட் டாளி வர்க்க சக்திகள் இன்னொருபுறம். நிலப்பிரபுத்துவ - முடியாட்சி ஆதரவு சக்திகளை வீழ்த்துவதே எமது முதன்மை யான குறிக்கோள். அதன்பிறகு, வருங்காலத்தில் முதலாளித் துவ சக்திகளுக்கும் பாட்டாளி வர்க்க சக்திகளுக்குமிடையி லான முரண்பாடும் மோதலும் நீடிக்கும். அதற்கும் தயாரா கவே உள்ளோம்.

ஒருக்கால் முற்போக்கான சட்டங்களை நிறைவேற்றுவ தில் பிற்போக்கு சக்திகள் தடையாக நின்றால், அதற்கெதிராக தொடர்ந்து நாங்கள் போராடுவோம். இது மேல்மட்டத்தில் - அரசாங்கத்தில் நடப்பதாக மட்டுமின்றி, பிரதானமாக மக்கள் திரள் போராட்டங்களாகக் கீழ்மட்டத்திலும் நடப்பதாக இருக்கும். இரண்டு வழிகளிலும் நாங்கள் போராடுவோம். ஒருபுறம் அரசில் பங்கேற்று, அதைத் தலைமையேற்று வழிந டத்தவும், முற்போக்கான சட்டங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றவும் அரசின் உள்ளிருந்தே போராடுவோம். மறு புறம், அரசுக்கு வெளியே மக்கள்திரள் போராட்டங்களைக் கட்டியமைப்போம். இரண்டு முனைகளிலும் தொடரும் இப் போராட்டங்கள் மூலம் புதிய நேபாளத்தைக் கட்டியமைக்க விழைகிறோம். •


படிப்பகம்

www.padippakam.com

## தொழிலாளர்களின் உரிமை பறிப்புக்கு எதிராக

# வேலை நிறுத்தம் - ஆர்ப்பாட்டம்

மறுகாலனியாக்கச் சூழலில், தொழிலாளர்களின் சட்ட பூர்வ உரிமைகள் எவ்வாறு நசுக்கப்பட்டு வருகின்றன என்பதை ஓசூரிலுள்ள அசோக் லேலண்டு ஆலையில் தொடரும் கொத்தடிமைத்தனமே நிரூபித்துக் காட்டுகிறது. ஓசூரிலுள்ள அசோக் லேலண்டு ஆலையில் நிரந்தரத் தொழிலாளர்கள் 460 பேரும், தற்காலிக - ஒப்பந்த - பயிற்சித் தொழிலாளர்கள் என ஏறத்தாழ 3000 பேரும் வேலை செய்கின்றனர். 240 நாட்கள் வேலை செய்தால் அத்தொழிலாளியை நிரந்தரம் செய்யவேண்டும் என்று சட்டம் இருந்தாலும், ஆலை நிர்வாகம் அதை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. எந்த உரிமையும் சலுகையுமின்றி மூன்றாண்டுகள் கொத்தடிமையாக வேலை செய்து நிர்வாகம் நற்சான்றிதழ் கொடுத்தால் மட்டுமே தற்காலிக - பயிற்சித் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்களோ, எவ்விதப் பாதுகாப்புச் சாதனங்களுமின்றி வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதோடு, காண்டிராக்டர்களின் கொடிய சுரண்டலுக்கும் ஆளாகி நிற்கிறார்கள்.

தற்காலிகத் தொழிலாளர்கள் காலை 7.30 மணிக்கு ஆலைக்குள் நுழைந்தால், பணிநேரப்படி 4.30 மணிக்கு அவர்களுக்கு வேலை முடிந்தாலும், மாலை 6-7 மணி வரை கட்டாயமாக வேலை வாங்கப்படுகின்றனர். இதுதவிர, "Com-off" என்ற பெயரில் ஒருசேர இரண்டு ஷிப்ட் (16 மணி நேரம்) வேலை வாங்கிக் கொண்டு, சட்டப்படி தரவேண்டிய இரட்டிப்பு ஊதியத்தைத் தராமல் ஏய்ப்பது, சீருடை-பாதுகாப்புச் சாதனங்கள் இன்றி வேலை செய்ய நிர்ப்பந்திப்பது, மருத்து ஈட்டுறுதிக்காகவும் சேமநல நிதிக்காகவும் சம்பளத்தில் பிடித்தம் செய்து கொண்டு அதற்கான அடையாள அட்டை வழங்காமல் ஏய்ப்பது, உணவகத்தில் தரமற்ற உணவைக் கொடுத்து புதிய வகை தீண்டாமையைப் பின்பற்றுவது, தொழிலாளர்களைக் கீழ்த்தரமாக ஏசுவதோடு, உற்பத்திப் பொருட்களை நாசமாக்கி விட்டதாக வீண்பழி சுமத்தி மிரட்டிப் பணம் பறிப்பது என நிர்வாகத்தின் அட்டூழியங்கள் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன. தற்காலிக-பயிற்சித் தொழிலாளர்கள் சங்கமாக அணிதிரண்டு போராடினால் மட்டுமே உரிமைகளை மீட்டெடுக்க முடியும் என்பதை உணர்த்தி, லேலண்டு ஆலையில் இயங்கும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு அமைப்பாக்கி வந்தது. இந்நிலையில், நிர்வாகத்தால் ஏவிவிடப்பட்ட ரௌடிகள் தற்காலிகத் தொழிலாளர்களைத் தாக்கியதை எதிர்த்து, பு.ஜ.தொ.மு. தலைமையில் தற்காலிகத் தொழிலாளர்கள் கடந்த டிசம்பர் 4-ஆம் தேதியன்று திடீர் வேலைநிறுத்தம் செய்தனர். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்று தொழிலாளர்களைச் சமரசப்படுத்திய சி.ஐ.டி.யு. சங்கம், பின்னர் இத்தொழிலாளர்களைக் கைகழுவியது. நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற சங்கங்களோ, கண்டும் காணாமல் அலட்சியப்படுத்தின.




தொழிலாளர்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு கடந்த ஜூன் 4-ஆம் தேதியன்று மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நாடகமாடிய நிர்வாகமும் போலீசும் தொழிலாளர்களை மிரட்டிப் பணிய வைக்க முயன்றன. இதை அம்பலப்படுத்தி மீண்டும் வேலை நிறுத்தத்துக்கான பிரச்சாரத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள், சங்கமாக அணிதிரளாமல் நிர்வாகத்தைப் பணிய வைக்க முடியாது என்பதை உணர்ந்து பு.ஜ.தொ.மு. தலைமையிலான ஒப்பந்த மற்றும் தற்காலிகத் தொழிலாளர் சங்கத்தில் அணிதிரளத் தொடங்கினர். ஜூன் 17-ஆம் தேதியன்று மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆலை வாயிலில் தொழிலாளர்கள் திரளும் முன்பே, பெருமளவில் போலீசைக் குவித்து போராட்டத்தை நடத்த விடாமல் கலைத்த நிர்வாகம், முன்னணித் தொழிலாளர்கள் 5 பேரை வேலை நீக்கம் செய்து பழிவாங்கியது. இந்த அடாவடித்தனத்தை எதிர்த்தும், தற்காலிகத் தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமைகளை வலியுறுத்தியும் பு.ஜ.தொ.மு. தலைமையில் ஆலைவாயில் முன்பாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் திரண்டு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

**தகவல்: புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, ஓசூர்.**

www.padippakam.com

# சி.பி.எம்: புரோக்கர்களின் புகலிடம்

## புரோக்கர் வேலை செய்து சம்பாதிப்பதே சி.பி.எம் உள்ளூர்த் தலைவர்களின் முழுநேரப் பணியாகி விட்டது.

**சி.**பி.எம். கட்சியின் திருப்பூர் எம்.எல்.ஏ.வான கோவிந்த சாமி, பின்னலாடை ஏற்றுமதி நிறுவனத்தின் முதலாளி. திருப் பூரில் முதலாளிகள் வசிக்கும் அமர்ஜோதி கார்டன் பகுதியில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வீட்டைக் கட்டியுள்ள கோடீசு வரர். ''பாட்டாளிகளின் தோழர்'' என்று இவரை சி.பி.எம். கட்சியினர் சித்தரித்தாலும், கோடீசுவர கோவிந்தசாமியின் வர்க்கப் பாசம் எப்போதுமே முதலாளிகள் பக்கம்தான்.

எட்டு மணி நேரத்துக்கு மேல் ஒரு தொழிலாளியை வேலை வாங்கக் கூடாது என்று சட்டம் இருந்தாலும், திருப்பூரில் இச்சட்டமெல்லாம் செல்லுபடியாகாது. இச்சட்ட விரோதக் கொத்தடிமைத்தனத்தைத் தடுப்பது என்ற பெயரில், தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் அவ்வப்போது தொழிற் கூடங்களில் திடீர் சோதனை நடத்திப் பீதியூட்டுவதும், உரிய 'கவனிப்பு'க்குப் பின் இச்சட்டவிரோதச் செயலைக் கண்டும் காணாமல் இருப்பதும் இங்கு வாடிக்கையாக நடக்கிறது.

தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் 'தொல்லை'யிலிருந்து முதலாளிகள் நிரந்தரமாக விடுபட, தொழிலாளர் நலத்துறை அமைச்சரான அன்பரசனிடம் பேசுவதாகவும், அமைச்சருக்கு ஒவ்வொரு கம்பெனியும் ஒரு லட்ச ரூபாய் வீதம் கொடுக்குமாறும் சி.பி.எம். எல்.எல்.ஏ. கோவிந்தசாமி திருப்பூர் பனியன் கம்பெனிமுத லாளிகளிடம் பேரம் பேசி வசூல் வேட்டை நடத் தியுள்ளார். முதலாளிகளில் சிலரை அழைத்துக் கொண்டு அமைச்சரிடமும் பேசியுள்ளார். அதன் பின்னரும் அதிகாரிகளின் ரெய்டுகளும் 'தொல்லை'களும் தொடரவே, முதலாளிகள் இது பற்றி தி.மு.க. பிரமுகர்களிடம் விசாரித்தபோது, வசூ லித்த பணம் அமைச்சருக்குப் போய்ச் சேரவில்லை என்பதையும், கோவிந்தசாமியே அதை அமுக்கி விட்டதையும் அறிந்து அதிர்ச்சியடைந்தனர். உடனே சி.பி.எம். கட்சித் தலைமையிடம் புகார் செய்தனர்.

கட்சித் தலைமை இது பற்றி விசாரித்ததில், கோவிந்த சாமியின் புரோக்கர் வேலை யும் கையாடலும் நிரூபணமா னதால், வேறு வழியின்றி சி.பி.எம். கட்சியின் சட்டமன்றப் பேரவைத் தலைவர் பொறுப்பிலிருந்து அவரை நீக் கிவிட்டு, திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினரான பாலபாரதியை அப்பதவிக்கு நியமித்துள்ளது. சி.பி.எம். கட்சியின் மாநிலக் குழுவிலிருந்தும் கோவிந்தசாமி நீக்கப்பட்டுள்ளார். இதற்கான கார ணத்தை கட்சி அணிகளிடமும் மக்களிடமும் விளக்காமல், கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டதால் கோவிந்த சாமி இப்பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சி.பி.எம். கட்சித் தலைமை பூசி மெழுகுகிறது.

இதுதவிர, கைத்தறி விற்பனைக்காக அரசு தரும் ஊக்கத் தொகையில் சுமார் 40 கோடிக்கு மேல் பொய்க்கணக்கு எழுதி தமிழக அமைச்சர் ராஜா சுருட்டியதாகவும், இதை வரு மான வரித்துறை அதிகாரிகள் கண்டுபிடித்து மாநில அரசிடம் கேள்வி எழுப்ப, தனக்குச் சாதகமான தணிக்கையாளரை நிய மிக்குமாறு முதல்வர் கருணாநிதியிடம் பேசுமாறு அமைச்சர் ராஜா, கோவிந்தசாமியைத் தூது அனுப்பியதாகவும், இந்த புரோக்கர் வேலைக்காக கோவிந்தசாமிக்கு உரிய கமிஷன் தரப்பட்டதாகவும் செய்திகள் மெதுவாகக் கசிந்துள்ளன.



கோவிந்தசாமி

திருப்பூரில் கொத்தடிமைகளாக உழலும் தொழிலாளி களின் அவலத்தைப் போக்க இந்த எம்.எல்.ஏ. அமைச்சரிடம் பேசவில்லை. எட்டுமணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கும் முதலாளிகளின் சட்டவிரோதச் செயல் களுக்கு எதிராகப் போராடவுமில்லை. மாறாக, தனது வர்க்கப் பாசத்தோடு முதலாளிகளின் கோரிக்கைகளுக்காக ''ரேட்'' வைத்து பேரம் - பேச்சு வார்த்தை நடத்துகிறார் இந்த 'காம் ரேடு'.

திருப்பூர் எம்.எல்.ஏ.வின் யோக்கியதை இப்படியிருக்க, கோவையில் நில மோசடி செய்து அம் பலப்பட்டு வழக்கு மன்றத்துக்கு நடந்து கொண்டிருக்கிறார் சி.பி.எம். கட்சியின் கவுன்சிலரான பத்மனா பன். இவர் நிலங்களை வாங்கி அவற்றை வீட்டு மனைகளாக்கி விற்கும் ரியல் எஸ்டேட் தொழிலைச் செய்து வரும் லட்சாதிபதி. கோவை வடக்கு மண்டலத் தலைவராக உள்ள இவர், மூன்று முறை கவுன்சிலராகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கும் முக்கியப் புள்ளி.


கோவை அருகே காளப்பட்டி யிலுள்ள மருதாசலம் என்பவரது நிலத்தை வீட்டுமனைகளாக்கி விற்றுத் தருவதாகக் கூறி, தன்



படிப்பகம்

www.padippakam.com

பெயருக்கு அதிகாரப் பத்திரம் எழுதிக் கொண்டு, சார் பதிவாளர் அலுவலகத்தில் நிலத்தின் மதிப்பைக் குறைத்துக் காட்டி தன் பெயரிலும் தனது மனைவி மற்றும் உறவினர்கள் பெயரிலும் கிரய சாசனம் செய்து கொண்டு, மனைகளைப் பல லட்சங்களுக்கு விற்று மருதாசலத்தை மோசடி செய்துள்ளார் பத்மநாமன். இதற்கெதிராக மருதாசலம் வழக்குத் தொடுக்க, பத்மனாபன் மற்றும் அவரது மனைவி உள்ளிட்டோர் வழக்கு மன்றத்துக்கு நடந்து கொண்டிருக்கின்றனர். கம்யூனிஸ்ட் கட்சிக்காரரே இப்படி மோசடியில் ஈடுபட்டதைக் கண்டு கோவை நகர மக்களே காறி உமிழ்கின்றனர். ஆனாலும், அவர் மீது நடவடிக்கை எடுக்காமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது, சி.பி.எம். கட்சித் தலைமை.



**கோவை மாநகர கவுன்சிலர் பத்மனாபன்**

சி.பி.எம். கட்சிக்குள் இன்னும் ஏராளமான கோவிந்தசாமிகளும் பத்மநாபன்களும் தலைவர்களாகவும், பிரமுகர்களாகவும் உள்ளனர். இத்தகையோர் மீது பாரதூரமாக நடவடிக்கை எடுத்தால் கட்சியே கலகலத்துப் போய் விடும் என்று கட்சித் தலைமை அஞ்சுகிறது. எனவேதான், குறிப்பிட்ட வரம்புக்கு மேல் நடவடிக்கை எடுக்க முடியாமல் கட்சித் தலைமை தடுமாறுகிறது.

மே.வங்கம் சிங்கூர் - நந்திகிராமத்தில் மக்கள் மீதே பயங்கரவாத வெறியாட்டம்; சமூக விரோதிகளே கட்சியின் பிரமுகர்கள்; முதலாளிகளும் ஊழல் பெருச்சாளிகளுமே உள்ளூர் தலைவர்கள் என்று சீரழிவில் புதிய பரிமாணத்தை எட்டி மே.வங்க சி.பி.எம். கட்சி 'புரட்சி' செய்து கொண்டிருக்கிறது. அதையும் விஞ்சும் வகையில் நாலு கால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது, தமிழக சி.பி.எம். கட்சி.

• தனபால்



# அமெரிக்காவின் போர்க் குற்றங்கள்

**கொரிய தீபகற்பத்தில் 'ஜனநாயக'த்தைத் திணிப்பதற்காக அமெரிக்கா செய்த மனிதப் படுகொலைகள் அம்பலமாகி வருகின்றன.**

மனித குல விரோதி இட்லரையே விஞ்சும் வகையில், இரண்டாம் உலகப் போர் முடிந்த அடுத்த சில ஆண்டுகளிலேயே இலட்சக்கணக்கான மக்களைப் படுகொலை செய்த மிகக் கொடிய பயங்கரவாத மிருகம் தான் அமெரிக்க ஏகாதிபத்தியம். முதலாளித்துவ வரலாற்றாளர்களால் மூடி மறைக்கப்பட்ட இந்த உண்மையை, தென்கொரியாவில் தோண்டத் தோண்ட வெளிவரும் படுகொலைக் குழிகளின் எலும்புக் கூடுகளே நிரூபித்துக் காட்டுகின்றன.

இரண்டாம் உலகப் போரில் பாசிச முகம் வீழ்த்தப்பட்டு, ஜப்பானிய ஏகாதிபத்தியம் தோல்வியுற்று சரணடைந்ததும், அதன் காலனியாக இருந்த தென்கிழக்காசிய நாடுகளைக் கைப்பற்றி தனது காலனியாதிக்கத்தை நிறுவ அமெரிக்க ஏகாதிபத்தியம் துடித்தது. அதற்கு முன் வியட்நாம், இந்தோனேசியா, மலேயா, கொரியா ஆகிய தென்கிழக்காசிய நாடுகளில் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்றாளர்களும் இணைந்து, காலனியாதிக்கத்துக்கு எதிரான தேச விடுதலைப் போரில் முன்னேறி, புதிய சுதந்திர அரசுகளை நிறுவி அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவற்றுக்கெதிராக ஆங்கிலேய - அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து கம்யூனிஸ்டுகளையும் நாட்டுப்பற்றாளர்களையும் படுகொலை செய்து தமது பொம்மையாட்சிகளை நிறுவி புதிய காலனியாதிக்கத்தை நிலைநாட்டினர்.

கொரியாவின் வடபகுதியில் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப் பற்றாளர்களும் இணைந்து ஆயுதமேந்திப் போராடி ஜப்பானிய காலனியாதிக்கவாதிகளை விரட்டியடித்து, அப்பிராந்தியத்தை விடுதலை செய்திருந்தனர். தென்பகுதியில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் வந்திறங்குமுன்னர், கொரியாவின் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் கம்யூனிஸ்டுகளும் கூடி தேச விடுதலை முன்னணியின் தலைவரான லியூ-வூன்-கியாங் என்பவர் தலைமையிலான கொரிய மக்கள் குடியரசைப் பிரகடனம் செய்தனர். ஆனால், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களோ தென் கொரியாவைக் கைப்பற்றிக் கொண்டு, தேச விடுதலை முன்னணியை ஒடுக்கி, லியூ-வூன்-கியாங்கையும் இதர தலைவர்களையும் படுகொலை செய்து, சைங்மான் ரீ என்ற சர்வாதிகாரி தலைமையில் அமெரிக்க ஆதரவு பொம்மையாட்சியை நிறுவினர்.

ஏற்கெனவே கொரியாவின் வடபகுதியை விடுதலை செய்து சுதந்திர அரசை நிறுவியிருந்த கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்றாளர்களும், தென்பகுதியைக் கைப்பற்றிய அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போர் தொடுத்து கொரியாவை ஐக்கியப்படுத்த முயன்றனர். கொரிய மக்களின் நீதியான இப்போரை அன்றைய சோவியத் ரஷ்யாவும் சீனாவும் ஆதரித்து ஆயுத உதவியோடு படைகளையும் அனுப்பின. மறுபுறம் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள், கொரியாவின் தென் பகுதியில் தமது பொம்மையாட்சியை நிறுவி, வடபகுதியின் மீது போர் தொடுத்தனர். 1950 ஜூன் 25-ஆம் தேதியிலிருந்து 1953 ஜூன் 27-ஆம் தேதி வரை நீடித்த இப்போர், இரண்டாம் உலகப் போருக்குப் பின் நடந்த மிகக் கொடிய போர் என்று சித்தரிக்கப்படுகிறது. அதன்பிறகு, சமாதான ஒப்பந்தம் உருவாகி கம்யூனிஸ்டுகள் தலைமையிலான வடகொரியா, அமெரிக்கக் கைக்கூலிகளின் தலைமையிலான தென்கொரியா என கொரிய நாடு பிளவுபட்டது.

மூன்றாண்டுகளுக்கு நீடித்த கொரியாவின் தேச விடுதலைப் போரின் போது, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாத



படிப்பகம்

www.padippakam.com



பெருங்குழிகளில் கொரிய மக்களைத் தள்ளி அமெரிக்க இராணுவம் சுட்டுக் கொல்லும் கொடூரம்: கொரிய ஆக்கிரமிப்புப் போரின் போது அமெரிக்கச் சிப்பாய்களால் எடுக்கப்பட்ட புகைப்படம்.

மும் படுகொலைகளும் பாசிச இட்லருக்கே பாடம் சொல்லித் தருவதாக இருந்தன. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் வடகொரியாவின் மீது போர் தொடுத்து பேரழிவுகளை நடத்தியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தமது பொம்மையாட்சியின் கீழுள்ள தென்கொரியாவில் கம்யூனிஸ்டுகளையும் நாட்டுப்பற்றாளர்களையும் தொழிற்சங்க - விவசாய இயக்கத்தினரையும் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்தனர். கம்யூனிஸ்டு ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலட்சக்கணக்கில் அப்பாவி மக்களைப் படுகொலை செய்து அவர்களைப் பெருங்குழிகளில் போட்டுப் புதைத்தனர். போரில் வடகொரியப் படைகள் பின்வாங்கியபோது, கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிராமங்களுக்குள் நுழைந்த அமெரிக்கப் படைகள், அங்கிருந்த அப்பாவி மக்களை விசாரணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்று சுட்டுக் கொன்று பெரும் குழிகளைத் தோண்டிப் புதைத்துள்ளன.

சர்வாதிகாரி சைங்மான் ரீ தலைமையிலான அமெரிக்க பொம்மையாட்சி, கம்யூனிசத்தை ஆதரித்த 3 இலட்சம் விவசாயிகளை அரசின் ''தேசிய வழிகாட்டுதல் கூட்டமைப்பில்'' கட்டாயமாகச் சேர்த்து, அவர்களுக்கு கம்யூனிசத்துக்கு எதிரான கல்வி அளித்தது. பின்னர் அத்தனை பேரையும் சுட்டுக் கொன்று பெரிய குழிகளை வெட்டி ஆயிரக்கணக்கில் பிணங்களைப் போட்டுப் புதைத்தது. இதுதவிர பயனற்ற பல பழைய சுரங்கங்களிலும் பிணங்களைப் போட்டு மூடியது.

ஒருவரல்ல; இருவரல்ல. இலட்சக்கணக்கான கொரிய மக்களை இனப்படுகொலை செய்த அமெரிக்க வெறியாட்டத்தைப் பற்றி ஆலன் வின்னிங்டன் என்ற பிரிட்டிஷ் செய்தியாளர், அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் நாளேடான ''டெய்லி ஒர்க்கர்''-இல் அப்போதே எழுதினார். ஆனால், இது கம்யூனிஸ்டுகளின் அவதூறு பிரச்சாரம் என்று அமெரிக்கா கூசாமல் புளுகியது. மறுபுறம், வடகொரியா மற்றும் சீனாவும் தான் அப்பாவி கொரிய மக்களைக் கொன்றதாக இன்று வரை பொய்ப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது.

கேட்ட மாத்திரத்திலேயே அதிர்ச்சியைத் தோற்றுவிக்கும் இக்கோரமான படுகொலைகளில் தமது உற்றார்-உறவினர்களை இழந்தவர்கள், 1990 வரை தென்கொரியாவில் நீடித்த அமெரிக்க ஆதரவு பெற்ற பாசிச சர்வாதிகார ஆட்சிகளால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டனர். அவர்களது குழந்தைகள் கூட 'இடதுசாரிகள்' என்று முத்திரைக் குத்தப்பட்டுப் பள்ளிகளில் ஒதுக்கப்பட்டனர். அவர்களைப் போலீசு எந்நேரமும் கண்காணித்ததோடு, விசாரணை என்ற பெயரில் அடிக்கடி கைது செய்த வதைத்தது இதனால் பயபீதியில் உறைந்து போன இவர்கள் இப்படு கொலைகள் பற்றி வாய் திறக்கவே முடியவில்லை.

கடும் வேதனையைச் சுமந்து கொண்டு காலங்கள் உருண்டோடின.

**டேஜியான் எனுமிடத்தில் 1950-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அழித்தொழிப்பில் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட தங்களது உறவினர்களின் எலும்புகளைத் தோண்டியெடுக்கும் தென்கொரியர்கள்.**



2002-ஆம் ஆண்டில் தென்கொரியாவில் வீசிய கடும் புயல் - பெருமழையால், பல்லாயிரக்கணக்கானோரைக் கொன்று புதைத்த மிகப் பெரிய மரணக் குழி ஒன்றிலிருந்து எலும்புக் கூடுகள் வெளியே தெரியத் தொடங்கிய பின்னரே, அமெரிக்காவின் இனப்படுகொலை பற்றிய உண்மைகள் மெதுவாகக் கசியத் தொடங்கின.

இப்படுகொலைகள் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தென்கொரிய மக்கள் தொடர்ந்து போராடியதால், போராட்ட நிர்பந்தம் காரணமாக தென்கொரிய அரசு கடந்த 2006-ஆம் ஆண்டில் ''அமைதி மற்றும் சமாதானத்துக்கான ஆணையம்'' அமைத்து விசாரணையைத் தொடங்கியது. அச்சத்தையும் தயக்கத்தையும் உதறிவிட்டு ஏராளமான மக்கள் இந்த ஆணையத்திடம் சாட்சியமளித்தனர். அதனடிப்படையில் புதைகுழிகளைத் தோண்டத் தொடங்கியதும், குவியல் குவியலாக எலும்புக் கூடுகள் வெளிவரத் தொடங்கின. தென்கொரியாவின் வடக்கே, வடகொரியாவை ஒட்டிய எல்லைப்புற பகுதியில் மட்டும் 160-க்கும் மேற்பட்ட இடங்களில் இதுபோன்ற மரணக் குழிகள் கண்டறியப்பட்டன.

டேஜியான் சிறைச்சாலையின் முன்னாள் சிறைக் காவலரான லீ ஜூன்-யங், ''கம்யூனிஸ்டுகளை ஆதரித்தார்கள் என்ற ஒரே குற்றத்துக்காக அப்பாவி மக்கள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இச்சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்'' என்றும், ''பெண்கள் - குழந்தைகள் உள்ளிட்ட இடதுசாரிகள் பல்லாயிரக்கணக்கில் தென்கொரிய பாசிச இராணுவத்தால் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டனர்'' என்றும் இந்த ஆணையத்தில் சாட்சியமளித்துள்ளார். கிம்-மான்-சிக் என்ற முன்னாள் தென்கொரிய இராணுவ அதிகாரி, அரசியல் கைதிகளை வரிசையாக நிற்க வைத்து அவர்களின் கைகளை பின்புறமாக மடித்து இரும்புக் கம்பியால் அனைவரையும் பிணைத்து சுட்டுக் கொன்ற கொடூரத்தை, தற்போது மனசாட்சிக்குப் பயந்து சாட்சியம் கூறியிருக்கிறார்.




படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க இராணுவமும், அதன் தலைமையின் கீழ் கட்டிய மைக்கப்பட்ட தென்கொரிய பாசிச இராணுவமும், வடகொரிய இரா ணுவத்தினரைப் போல உடைய ணிந்து கொண்டு கவச வண்டிகளில் செங்கொடியுடன் கிராமம் கிராம மாகச் செல்வார்கள்; செம்படை யினர் வருவதாகக் கருதி வரவேற்க ஓடிவரும் மக்களை அங்கேயே சுட்டுக் கொல்வார்கள் என்று ஆணையத்தின் முன் பலர் சாட்சிய மளித்துள்ளனர்.

தென்கொரியாவை ஆக்கிரமித் திருந்த அமெரிக்கப் படைகளுக்கு அன்று தளபதியாக இருந்தவர், டக்ளஸ் மெக்ஆர்தர். கம்யூனிஸ்டு களையும் நாட்டுப்பற்றாளர்களை யும் உழைக்கும் மக்களையும் ஈவி ரக்கமின்றிக் கொன்றொழிக்கும் அவரது இப்பயங்கரவாத உத்தியே மெக்கார்திசம் என்று குறிப்பிடப் படுகிறது. போரில் சிக்கி வடகொரி யாவிலிருந்து தென்கொரியாவுக்கு அகதிகளாக ஓடி வந்தவர்களைக் கூட சுட்டுக் கொல்லும் அளவுக்கு மெக்கார்திசம் வெறியாட்டம் போட்டது.

''அப்பாவி மக்களைக் கண்மூடித்த னமாக கொன்றொழிப்பதையே அமெ ரிக்கா தனது கொள்கையாகக் கொண் டுள்ளது'' என்று 1950-களில் தென் கொரியாவுக்கான அமெரிக்கத் தூதர், அன்றைய அமெரிக்க வெளியுறவுச் செயலர் டேன்ரஸ்க்குக்கு எழுதியுள்ள கடிதமே இதனை நிரூபித்துக் காட்டுகி றது. இதுதவிர, அன்றைய அமெரிக்க சிப்பாய்களால் படம் பிடிக்கப் பட்ட போர்க்கள காட்சிகள் கடந்த ஆண்டில் சில அமெ ரிக்கப் பத்திரிகைகளில் வெளி யாயின. கைகள் கட்டப்பட்ட நிலையில் வெள்ளுடை அணி விக்கப்பட்ட அரசியல் கைதி கள் பெருங்குழிகளின் அரு கில் வரிசையாக நிறுத்தப் பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டு குழிகளில் வீசப்படும் காட்சிப் படங்களும் அவற்றில் இருந் தன. மேலும் அமெரிக்க விமா னப் படையில் பணியாற்றி ஓய்வுப் பெற்ற உளவுத்துறை அதிகாரியான டொனால்டு நிக்கோலஸ், தனது நினைவுக் குறிப்பு நூலில் தென்கொரியா வின் சுவோன் பகுதியில் 1800 பேர் அமெரிக்க இரா ணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டதைப் பார்த்ததாகக் குறிப்பிட் டுள்ளார்.



டேஜியான் நகர முன்னாள் சிறைக் காவலர் லீஜுஉன்-யங், 1950-ஆம் ஆண்டு அரசியல் கைதிகள் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதை ஒரு நேர்காணலின் பொழுது நடித்துக் காட்டுகிறார்.

இவ்வாறு தென்கொரியாவின் பல பகுதிகளில் அமெரிக்க ஆக்கிரமிப் பாளர்கள் நடத்திய இனப்படு கொலைகள் பற்றி இந்த ஆணையத்தில் 215 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

தனது விசுவாச பொம்மையாட்சி நிறுவப்பட்டிருந்த போதிலும், தென் கொரிய மக்களை இலட்சக்கணக் கில் படுகொலை செய்த அமெரிக்க ஏகாதிபத்தியம், வடகொரியா மீது எத்தகைய அட்டூழியங்களை ஏவியி ருக்கும்? வடகொரியா மீதான ஆக் கிரமிப்புப் போரில்தான் முதன்முத லாக ''நாபாம்'' வகை குண்டு களைக் கொண்டு அமெரிக்கா தாக் கியது. நெருப்பு மழை பொழியும் இந்த வகை குண்டுகள் வீசப்பட்டு வடகொரியாவின் பல்லாயிரம் கிரா மங்களும் நகரங்களும் புல்-பூண்டு கூட இல்லாமல் தீக்கிரையாக்கப்பட் டன. வடகொரிய மக்கள் தொகை யில் ஏறத்தாழ 20 சதவீதத்தினர் படு காயமடைந்ததோடு, உணவின்றிப் பட்டினி கிடக்க வேண்டிய நிலைக்கு ஆளாயினர். தென் கொரியா, வடகொரியாவைச் சேர்த்து ஏறத்தாழ 20 இலட்சம் கொரிய மக்கள் இந்த அமெரிக்க ஆக்கிரமிப்புப் போரில் கொல்லப் பட்டனர்.

மூன்றாண்டுகள் நீடித்த இந்த கொரிய ஆக்கிரமிப்புப் போர், பின் னாளில் அமெரிக்கா நடத்திய மிகப் பெரிய ஆக்கிரமிப்புப் போர்களுக் கெல்லாம் ஓர் ஒத்திகையாக அமைந் துள்ளது. வியட்நாம், சோமாலியா, ஆப்கானிஸ்தான், ஈராக் - என அமெ ரிக்க இராணுவம் எங்கெல்லாம் காலடி எடுத்து வைத்ததோ, அங்கெல்லாம் முதுகெலும்பையே சில்லிட வைக்கும் அளவுக்கு காட்டுமிராண்டித்தனமான படுகொலைகள் நடத்தப்பட்டன; நடத் தப்படுகின்றன.

அமெரிக்கப் பயங்கரவாதி கள் நடத்திய படுகொலைகள் பற்றி விசாரணை, தென்கொரி யாவில் தொடர்கிறது. அமெ ரிக்க விசுவாச தென்கொரிய அரசு இப்படுகொலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக் கும் என்று நம்புவதற்கு அடிப் படையே இல்லை. ஆனால், தென்கொரிய மரணக் குழி களில் புதைக்கப்பட்ட உண் மைகள் பூதமாகக் கிளம்பவே செய்யும். அனைத்துலக உழைக்கும் மக்களின் ஏகாதி பத்திய எதிர்ப்புப் போராட் டப் பெருநெருப்பு மூண்டு, அது உலக மக்களின் கொடிய எதிரியான அமெரிக்க ஏகாதி பத்தியத்தைச் சுட்டெரிக்கவே செய்யும்.

• அழகு

**கம்யூனிஸ்டுகளை ஆதரித்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் டேஜியான் சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.**

www.padippakam.com

# ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைகள்:

# ஊதிய உயர்வு விடுதலை தருமா?

**மை**ய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை உயர்த்துவதற்காக நியமிக்கப்பட்ட ஆறாவது ஊதியக் குழு, தனது பரிந்துரைகளை மைய அரசிடம் அளித்திருக்கிறது. அரசு ஊழியர் சங்கங்கள் ஊதியக் குழுவின் அறிக்கையை, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குச் சாதகமான, ஒருதலைப்பட்சமான அறிக்கை எனக் குற்றஞ்சுமத்தியுள்ளன.

ஊழியர்களின் குற்றச்சாட்டில் உண்மையுண்டு. ஐ.ஏ.எஸ் தகுதி கொண்ட அரசுச் செயலர்களின் மாதச் சம்பளம் தற்பொழுது ரூ. 28,000/- தான். இதனை, ரூ. 80,000/- ஆக அதிகரிக்க வேண்டுமென ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது. இதோடு இந்த அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய இதரப் படிகளையும் சேர்த்தால், அவர்களின் மொத்தச் சம்பளம் ரூ. 96,000/- ஆக எகிறிவிடும்.

முப்படைத் தளபதிகளின் சம்பளத்தை ரூ. 90,000/- ஆகவும்; தற்பொழுது ரூ. 8,250/- சம்பளம் பெறும் இளம் லெப்டினென்ட் அதிகாரிகளின் சம்பளத்தை ரூ. 25,760/- ஆகவும்; துணை இராணுவப் படைகளின் தலைமை அதிகாரியின் சம்பளத்தை ரூ. 80,000/- ஆகவும் உயர்த்த வேண்டும் என அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவத்தைச் சேர்ந்த இடைநிலை அதிகாரிகளுக்கு ஊதியக் குழுவின் பரிந்துரையால் 60 சதவீத சம்பள உயர்வு கிடைக்கும்.

அதேசமயம், தற்பொழுது படிகளையும் சேர்த்து ரூ. 5,115/- சம்பளம் பெறும் கடைநிலை ஊழியர்களுக்கு இனி ரூ. 6,790/- சம்பளம் வழங்க ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது. இந்த உயர்வு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு வழங்கப்படும் போக்குவரத்துப் படியை (ரூ. 7,000/-) விடக் குறைவானதாகும். கீழ் மட்ட ஊழியர்களின் சம்பளத்தை 18 முதல் 24 சதவீதம் வரை அதிகரித்துக் கொடுக்கப் பரிந்துரைத்துள்ள ஊதியக் குழு, மேல் மட்டத்தில் 60 முதல் 200 சதவீதம் வரை சம்பள உயர்வு வழங்க அறிவுறுத்தியிருக்கிறது.

சம்பள உயர்வு குறித்த ஊதியக் குழுவின் பரிந்துரைகள் யாருக்கும் திருப்தியளிக்கவில்லை. கடைநிலை ஊழியர்கள் தங்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 10,000/- என நிர்ணயிக்கப்பட வேண்டும் எனக் கோரியிருந்ததை ஊதியக்குழு நிராகரித்திருப்பதோடு, தங்களின் பணிச் சுமையை அதிகரிக்கவும், பல சலுகைகளை நிறுத்தவும் பரிந்துரை செய்திருப்பதாகக் குமுறிக் கொண்டுள்ளனர்.

இந்தியாவில் ஏறத்தாழ 84 கோடி மக்கள் நாளொன்றுக்கு வெறும் இருபது ரூபாய் (மாத வருமானம் ரூ. 600/-) வருமானத்தில்தான் வாழ்க்கையை ஓட்டுவதாக அர்ஜுன் சென் குப்தா கமிட்டி கூறியுள்ளது. இப்படிப்பட்ட நிலையில், தங்களுக்கு அளிக்கப்பட்ட சம்பள உயர்வு பத்தாது எனக் கூறுவதற்குக் கொஞ்சம் கல்மனதுதான் வேண்டும். விலைவாசி உயர்வுக்கு ஏற்ற சம்பள உயர்வில்லை என்கிறார்கள் அரசு ஊழியர்கள். அப்படியே இருந்தாலும், விலைவாசி உயர்வு மாதச் சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்களைவிட, அன்றாடக் கூலிகளையல்லவா அதிகம் பதம் பார்க்கிறது?

அரசு ஊழியர்களின் மனசாட்சியை உலுக்கும் இவை போன்ற கேள்விகளைக் கேட்டால், அரசு ஊழியர்களும், மற்ற பிற உழைக்கும் மக்களும் சகோதரர்கள்; தங்களுக்குள் சகோதரச் சண்டையைத் தூண்டிவிடச் சதி நடக்கிறது என்ற பல்லவியைப் பாடித் தப்பித்துக் கொள்ள முயலுகிறார்கள். அரசு ஊழியர்கள் இப்படி வாய் இனிக்கப் பேசினாலும்,



ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை எதிர்த்து மைய அரசு எழுத்தர் சங்கத்தினர் நாடாளுமன்றத்தின் முன் நடத்தும் உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம்.

அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஒரு பெரும் இடைவெளி இருப்பதை மறைத்துவிட முடியாது.

இலஞ்சம் வாங்கும் அரசு ஊழியர்களைச் சங்கத்தில் இருந்து நீக்கி விடுவோம் என முடிவெடுத்து நடைமுறைப் படுத்தினால், பல ஊழியர் சங்கங்களின் கூடாரமே காலியாகி விடாதா? பேருந்து, ரயில் கட்டணங்களை அரசு மறைமுகமாக ஏற்றியிருப்பதை எதிர்த்து, பொது மக்களிடம் இருந்து பழைய கட்டணத்தைத்தான் வாங்குவோம் என ஊழியர் சங்கங்கள் ஒரு மணி நேரமாவது போராடியதுண்டா? சங்கமாக இணைந்துள்ள அரசு ஊழியர்களின் பலம், தங்களின் சம்பள உயர்வு, போனசு போன்ற சுயநல கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளத்தான் பயன்படுகிறதேயொழிய,



படிப்பகம்

www.padippakam.com

அதனைத் தாண்டி பொதுமக்களின் நலனுக்காகப் போராடுவது அபூர்வமாகி விட்டது.

"உலகமயம் எனும் ஆளும் வர்க்கங்களின் போதை ஆறாவது ஊதியக் குழுவிற்கும் ஏறிவிட்டதால்தான், அதனின் பரிந்துரைகள் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச பலன்களைக் கூட அளிக்கவில்லை" என சி.பி.எம்.இன் தீக்கதிர் நாளேடு புலம்பி இருக்கிறது. ஊழியர்களுக்கு அவர்கள் கேட்ட சம்பளம் கொடுக்கப்பட்டால், இப்போதை இறங்கிவிடுமா என்பதுதான் கேள்வி. சம்பள உயர்வினால், விலைவாசி உயர்வை வேண்டுமானால் அரசு ஊழியர்கள் சமாளித்துக் கொள்ளலாமேயொழிய, உலகமயத் தாக்குதல்களில் இருந்து முற்றிலுமாகத் தப்பிவிட முடியாது.

உலகமயத்தை எதிர்த்துப் போராடுவதென்பது அரசியல் போராட்டம். அரசு ஊழியர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்றால், சம்பள உயர்வு, போனசு என்ற குறுகிய தொழிற்சங்கவாதத்தில் இருந்து வெளியே வரவேண்டும். அதற்குத் தடையாக இருக்கும் தொழிற்சங்கத் தலைமையைத் தூக்கியெறிய வேண்டும். உலகமயத்தை எதிர்த்துப் போராடும் பல்வேறு மக்கட் பிரிவுகளோடு ஐக்கியப்பட வேண்டும்.

இந்த ஐக்கியம் இல்லையென்றால் உலகமயச் சூழலில், சம்பள உயர்வு, வேலை பாதுகாப்பு போன்ற பொருளாதாரக் கோரிக்கைகளைக்கூட அரசு ஊழியர்கள் பெற்று விட முடியாது; இந்த ஐக்கியம் இல்லையென்றால், 9.7 இலட்சம் கடைநிலை ஊழியர்களின் பதவிகளை ஒழித்துக் கட்டுமாறு ஆலோசனை கூறியுள்ள ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரையைத் தோற்கடிக்க முடியாது; இந்த ஐக்கியம் இல்லையென்றால், சம்பள உயர்வுக்காக மட்டும் போராடும் அரசு ஊழியர்களைப் பொதுமக்கள் வில்லன்களைப் போலப் பார்ப்பதை மாற்றிவிட முடியாது.

பாசிச ஜெயாவின் ஆட்சியின் பொழுது தமிழக அரசு ஊழியர்களின் போராட்டம் தோற்றுப் போனதை, அரசு ஊழியர்கள் மன்னிப்புக் கடிதம் கொடுத்து வேலைக்குத் திரும்பியதை நினைவில் கொள்ளுங்கள்.

உலகமயத்துக்கு எதிரான ஐக்கியப்பட்ட அரசியல் போராட்டத்தின் அவசியம் மூளையில் உறைக்கும்!

● குப்பன்

# தமிழக போலீசின் பிரித்தாளும் சூழ்ச்சி


**சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு எதிரான போராட்டத்தை ஒடுக்க, சாதிக் கலவரத்தைத் தூண்டிவிட முயலுகிறது, தமிழகப் போலீசு.**

மக்கள் போராட்டங்கள் மீது மிருகத்தனமான அடக்குமுறையை ஏவுவதும், முன்னணியாளர்களைப் பழிவாங்குவதும் மக்கள் விரோத ஆட்சியாளர்களின் வாடிக்கை. அதிலும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராகப் போராடும் மக்கள் மீதான அடக்குமுறையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஒரிசா, சட்டிஸ்கர் மாநிலங்களே இதற்கு இரத்த சாட்சியங்களாக உள்ளன. உழைக்கும் மக்களின் போராட்ட நிர்ப்பந்தத்தால், தற்காலிகமாக சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்துவதை ஆட்சியாளர்கள் நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்படும்போது, போராடிய மக்களை எப்படியெல்லாம் பழிவாங்கி ஒடுக்குவார்கள், போராட்ட ஒற்றுமையை எப்படியெல்லாம் சீர்குலைப்பார்கள் என்பதற்கு தமிழகம் புதிய சாட்சியமாக விளங்குகிறது. கடந்த மே மாதத்தில், மதுரை மாவட்டம் வலையங்குளம் - எலியார் பத்தி முதலான கிராமங்களில் போலீசும் அதிகார வர்க்கமும் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலே இதை நிரூபித்துக் காட்டுகிறது.


மதுரை - தூத்துக்குடி நெடுஞ்சாலையில் விமான நிலையம் அருகில் உள்ள வலையங்குளம், எலியார்பத்தி, பாறைப்பத்தி, சோளங்குருணி ஆகிய கிராமங்களில் நிலங்களைக் கையகப்படுத்தி சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவ கடந்த ஒன்றரை ஆண்டுகளாக தமிழக அரசு முயற்சித்து வருகிறது. ஒப்பீட்டு ரீதியில் பின்தங்கிய பகுதியாக இக்கிராமங்கள் நீடித்த போதிலும், இக்கிராமங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான சிறு விவசாயிகளுக்கு விவசாயமே வாழ்வுக்கான ஆதாரமாக உள்ளது. நிலக்கடலை, வாழை, காய்கறிகள், தென்னை, சப்போட்டா, நெல்லி முதலானவற்றோடு மல்லிகை இங்கு பெருமளவில் பயிரிடப்பட்டு வருகிறது.

இந்த விளைநிலங்களை தரிசு நிலங்கள் என்று அறிவித்துள்ள தமிழக அரசு, தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) மூலம் நிலங்களைக்

**"வாய்த் தகராறுதான் நடந்தது: சாதிக் கலவரம் ஏதும் நடக்கவில்லை"**
**- எலியார்பத்தி பஞ்சாயத்துத் தலைவர் பெருமாள்.**



**"வீடு வீடாகப் புகுந்து போலீசார் கொடூரமாகத் தாக்கினார்கள்**
**- எலியார்பத்தியைச் சேர்ந்த ஒன்றியக் கவுன்சிலர் மொக்கை.**




படிப்பகம்

www.padippakam.com

கையகப்படுத்தி சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவத் துடிக்கிறது. நிலங்கள் பறிக்கப்பட்டால் தமது எதிர்கால வாழ்வே இருண்டு விடும் என்பதை உணர்ந்த இவ்வட்டார சிறு விவசாயிகள் சங்கமாக அணிதிரண்டு போராடத் தொடங்கினர். விவசாயிகளின் போராட்டத்தைத் துச்சமாக மதித்த அரசு, விளைநிலங்களைக் கையகப்படுத்துவதற்கான குறிப்பாணைகளை விவசாயிகளுக்கு அனுப்ப ஆரம்பித்தது. வெகுண்டெழுந்த விவசாயிகள் சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப் படுத்தினர்.



**சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவ வரைபடத்துடன் விளைநிலங்களை ஆக்கிரமிக்கக் கிளம்பியுள்ள அதிகார வர்க்கம்.**

கடந்த ஆறு மாதங்களாக, நிலங்களைக் கையகப் படுத்தத் துடிக்கும் அரசின் முயற்சிகளுக்கு நீதிமன்றத்தின் மூலம் தடையாணை பெறவும், அன்றாடம் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், சாலைமறியல் முதலான போராட்டங்களில் ஈடுபட்டும், பல்வேறு அமைப்புகள் - இயக்கங்களிடம் ஆதரவு திரட்டியும் இக்கிராமங்களின் விவசாயிகள் ஒற்றுமையை வலுப் படுத்தி தொடர்ந்து போராடினர்.

விவசாயிகளின் போராட்ட உறுதியைக் கண்ட மாவட்ட ஆட்சியர், வேறு வழியின்றி 2.5.08 அன்று பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். விவசாய சங்கப் பிரதிநிதிகளோடு மனித உரிமை பாதுகாப்பு மையம், குடியுரிமை பாதுகாப்பு நடுவம் ஆகிய அமைப்புகளின் முன்னணியாளர்களும் இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர். விவசாயிகளின் கோரிக்கைகளை அரசுக்குப் பரிந்துரைப்பதாகக் கூறிய மாவட்ட ஆட்சியரான எஸ்.எஸ்.ஜவகர், போராட்டங்களைக் கைவிட்டு அமைதி காக்க வேண்டும் என்று விவசாயிகளை எச்சரித்தார். இக்கிராமங்களில் நிலங்களைக் கையகப் படுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாகவும் அரசு அறிவித்தது.

விவசாயிகளின் ஒன்றுபட்ட போராட்டத்தால் கிடைத்த இந்த முதற்கட்ட வெற்றியின் மகிழ்ச்சியை இக்கிராம மக்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதற்குள்ளாகவே, இடியென இறங்கியது போலீசு அடக்குமுறை. 6.5.08 முதலாக இக்கிராமங்களில் சாதிக் கலவரம் மூண்டு வன்முறை பெருகியதாகவும், அதைத் தடுக்கச் சென்ற போலீசாரை கிராம மக்கள் தாக்கி போலீஸ் ஜீப், மோட்டார் சைக்கிள்களைத் தீயிட்டுக் கொளுத்தியதாகவும், பல போலீசார் படுகாயமடைந்ததாகவும் நாளேடுகள் செய்திகள் வெளியிட்டன.

அதைத் தொடர்ந்து ஏறத்தாழ ஒரு வார காலத்துக்கு இக்கிராமங்களைச் சுற்றி வளைத்து போலீசார் வெறியாட்டம் போட்டனர். ஆளுயர தடியுடன் வந்திறங்கிய கூடுதல் போலீசுப்படை வீடுவீடாகப் புகுந்து தாக்கத் தொடங்கியது. பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் கூட கண்மூடித்தனமாகத் தாக்கப் பட்டனர். பள்ளி-கல்லூரிகளில் படிக்கும் பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்த்துப் போராடிய விவசாய சங்கத் தலைவர்களைக் குறிவைத்து போலீசுப் படை வீடு வீடாகத் தேட ஆரம்பித்ததால் அவர்கள் தலைமறைவாகித் தப்பியோடினர். அவர்களை ஒப்படைக்கும்படி குடும்பத்தாரை போலீசு வதைத்தது. இரவு நேரங்களில் திடீரென கிராமங்களில் புகுந்து தாக்கி அச்சுறுத்திய போலீசு, கிராம மக்களின் உடைமைகளை நாசப்படுத்தி வெறியாட்டம் போட்டது. உண்மை நிலைமை அறிய இக்கிராமங்களுக்கு சென்ற மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் செயல் வீரர்களை ஊருக்குள் நுழைய விடாமல் விரட்டியடித்தது.

**சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடிய மக்களைப் பழிவாங்கவே, சிறு வாய்த் தகராறை சாதிக்கலவரமாக ஊதிப்பெருக்கி, தாக்குதலை நடத்தியது போலீசு.**

சாதி வேறுபாடுகளைக் கடந்து சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராக ஒன்று பட்டுப் போராடிய இக்கிராமங்களில் சாதிக் கலவரம் ஏன்? ஏற்கெனவே இக்கிராமங்களில்


படிப்பகம்

www.padippakam.com

சாதியப் பங்கைமையும் மோதல்களும் நடந்துள்ளனவா? இல்லை. இது சாதிக் கலவரமில்லை; சிறு வாய்த் தகராறையே ஊதிப் பெருக்கி சாதிக் கலவரமாகச் சித்தரித்து, போலீசும் அதிகார வர்க்கமும் சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடிய மக்களைப் பழிவாங்கவே திட்டமிட்டு இக்கொடிய தாக்குதலை நடத்தியுள்ளன. மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் (HRPC) உண்மையறியும் குழுவினர் இக்கிராமங்களுக்கு நேரில் சென்று நடத்திய விசாரணையின் மூலம் இது நிருபணமாகியுள்ளது.

எலியார்பத்தி கிராமத்தில் கடந்த 4.5.08 அன்று டீக்கடை ஒன்றில் போதையில் இருந்த இரண்டு பேருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தகராறு, அவ்வூர் பெரியவர்களால் சமரசம் செய்து தீர்க்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் சிறுபான்மையாகத் தாழ்த்தப்பட்டோரும் பெரும்பான்மையாக வலையர்கள் எனப்படும் பெரும்பிடுகு முத்தரையர் சாதியினரும் உள்ளனர். சாதிய இழிவு நீடித்தபோதிலும், இருதரப்புக்குமிடையே தகராறுகளோ மோதலோ நடந்ததில்லை. டீக்கடையில் குடிபோதையில் ஏற்பட்ட தகராறு தீர்க்கப்பட்ட போதிலும், முத்தரையர் சாதி சங்கத் தலைவர் இராசு தலைமையில் சில இளைஞர்கள் தலித் குடியிருப்புக்குள் புகுந்து அங்கிருந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கொடிக் கம்பத்தை சேதப்படுத்தினர். அவர்கள் மீது சிறுத்தைகள் கட்சியினர் கூடக்கோவில் போலீசு நிலையத்தில் புகார் கொடுக்க, அதனடிப்படையில் முத்தரையர் சாதியைச் சேர்ந்த 19 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதுபோன்ற ஆதிக்க சாதிவெறியர்களின் அடாவடிகளும் போலீசு நிலையத்தில் வழக்கு பதிவு செய்தலும் தமிழகமெங்கும் தொடர்கின்றன. ஆனால் போலீசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. வழக்குத்துக்கு மாறாக, எலியார் பத்தியில் அன்றிரவே பெருமளவில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

மறுநாள் காலை, எலியார்பத்தி கிராம நெடுஞ்சாலையில் வைக்கப்பட்டிருந்த பெரும்பிடுகு முத்தரையர் உருவம் பொறித்த போர்டுக்கு செருப்பு மாலை போடப்பட்டிருந்தது. இதைக்



தடியடியில் நசுங்கிப் போன குடம்: போலீசின் கண்மூடித்தனமான தாக்குதலுக்குச் சாட்சியம்.

கண்டித்து எலியார் பத்தியிலும் அதைச் சுற்றியுள்ள பாறைப்பத்தி, சோளங்குருணி, நெடுமதுரை, வலையப்பட்டி, வலையங்குளம் கிராமங்களிலும் முத்தரையர்கள் சாலை மறியல் செய்தனர். உடனே மதுரை மாவட்ட போலீசுத் துறை கண்காணிப்பாளர், தென்மண்டல போலீசுத் துறை இயக்குனர், துணை கண்காணிப்பாளர்கள் என போலீசு உயரதிகாரிகளும் பெரும் போலீசுப் படையும் குவிந்தன. முன்னணியாளர்களுடன் அதிகாரிகள் சமரச பேச்சுவார்த்தை நாடகமாடிக் கொண்டிருந்த போது, மக்களைச் சுற்றி வளைத்துக் கொண்ட போலீசு, காட்டுமிராண்டித்தனமாக தடியடியில் இறங்கியது. தப்பியோடியவர்களை துரத்திச் சென்று தாக்கியதோடு, வீடு புகுந்து பெண்கள் - குழந்தைகளையும் அடித்து நொறுக்கியது.

முத்தரையர் போர்டுக்கு செருப்பு மாலை போட்டவர்கள் யார்? இந்த போர்டுக்கு முன்பாக சிந்துப்பட்டி போலீசு ஆய்வாளர் தலைமையில் பெரும் படையாக போலீசார் இரவு முழுவதும் காவல் இருந்துள்ளனர். போலீசுக் காவலை மீறி போர்டுக்கு எப்படி செருப்பு மாலை போட்டு அவமதிக்க முடியும்? அப்படியே போட்டாலும் போலீசு ஏன் அவர்களைக் கைது செய்யவில்லை?

உண்மையில், போலீசு கும்பல்தான் செருப்பு மாலை போட்டு முத்தரையர்களை ஆத்திரமூட்டி, அதைச் சாக்காக வைத்து ஒடுக்கவும், சாதிக் கலவரமாகச் சித்தரித்து அடக்குமுறைக்கு நியாயம் கற்பிக்கவும் செய்துள்ளது. இதன்படியே, வலையங்குளம் கிராமத்தில் வீடுகள் - கடைகள் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களுக்கு நள்ளிரவில் போலீசே தீ வைத்துக் கொளுத்தி விட்டு, கலவரத் தீ பரவுவதாக பீதியூட்டி, மேலும் பெரும்படையைக் குவித்து, வீடுவீடாகப் புகுந்து தாக்கியுள்ளது. பின்னர், "போலீசாரைத் தாக்கினர்; போலீசு ஜீப்புக்கு தீ வைக்க முயன்ற கலவரக்காரர்களை துப்பாக்கியால் சுட்டு ஒரு போலீசு ஆய்வாளர் விரட்டினார்; வன்முறை பரவுவதைத் தடுக்க போலீசு தீவிர கண்காணிப்பு; வீடு வீடாக சோதனை; பலர் கைது" என்று போலீசு கும்பலே கதை எழுதி செய்தியாக வெளியிட்டது. அவற்றுக்கு மசாலா சேர்த்து 'நடுநிலை' நாளேடுகள் பரபரப்பாக செய்தி வெளியிட்டு தமது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டன.

மே.வங்கம் நந்திகிராமத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராகப் போராடிய விவசாயிகள் மீது கட்சிக் குண்டர்களை ஏவி ஒடுக்கியது போலி கம்யூனிஸ்ட் சி.பி.எம். அரசு. சட்டிஸ்கரில் சர்வகட்சி ஆதரவுடன் அரசே "சல்வாஜூடும்" எனும் ஆயுதமேந்திய குண்டர் படையைக் கட்டியமைத்து, போராடும் மக்கள் மீது பயங்கரவாதத்தை ஏவி ஒடுக்கி வருகிறது. இந்த உத்திகள் நாடெங்கும் அம்பலப்பட்டுப் போயுள்ள நிலையில், செயற்கையாக சாதிக் கலவரம் என பீதியூட்டி, போராடிய விவசாயிகளைப் பழிவாங்கி, போராட்ட ஒற்றுமையைச் சீர்குலைத்து அடக்குமுறையை ஏவும் புதிய உத்தியுடன் புறப்பட்டுள்ளது, கருணாநிதி அரசு. அதை விழிப்புடனிருந்து அம்பலப்படுத்தி முறியடிக்காமல், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதையே எலியார்பத்தி - வலையங்குளம் கிராமங்களில் நடந்துள்ள அடக்குமுறை, புதிய படிப்பினையாக உணர்த்துகிறது.

**தகவல்களும் படங்களும்:**
**மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC), மதுரை கிளை.**


படிப்பகம்

www.padippakam.com

# அறியப்படாத அமெரிக்கா

## அமெரிக்காவின் 'செல்வச் செழிப்பின்' பின்னே, அதனின் வறுமையும், அழுகலும் மறைக்கப்படுகின்றன.

ஒரே மாதத்தில் ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலை இழப்பு! குபேரபுரியாகச் சித்தரிக்கப்படும் உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவில், கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும் ஏறத்தாழ ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்து வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர். உற்பத்தித் தேக்கம், ஆலை மூடல், ஆட்குறைப்பு ஆகியவற்றால் கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் மேலும் 50,000 பேர் வேலையிழந்துள்ளனர். கடந்த மூன்று மாதங்களாக பல ஆலைகளில் லே-ஆஃப் காரணமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றிப் பரிதவிக்கின்றனர்.

சொர்க்கபுரி; குப்பை கூட்டும் தொழிலாளி கூட காரில் வந்திறங்கிப் பணியாற்றுவார்; எந்தக் கவலையுமின்றி சுகமாக வாழும் மக்கள்; பொருளாதார வளமும் ஜனநாயக மாண்புகளையும் கொண்ட நாடு; குடி, கூத்து, கும்மாளம் என ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்கும் மக்கள் - என அமெரிக்க வல்லரசின் செல்வச் செழிப்பைப் பற்றி முதலாளித்துவ எழுத்தாளர்கள் பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், அதே அமெரிக்காவில்தான் வறுமை, வேலையின்மை; வேலையிழந்து வாழ்விழந்து உழைக்கும் மக்கள் பிச்சை எடுக்கும் அவலம்; தற்கொலைகள், போதை மருந்து, கொலை-கொள்ளைகள் என சமூகம் அழுகி நாறிக் கொண்டிருக்கிறது. மறுபுறம், மீளமுடியாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, அந்நாடு விழிபிதுங்கி நிற்கிறது.

கடந்த மார்ச் மாதத்தில் அமெரிக்காவின் ஐந்து பெரும் கடன் முதலீட்டு வங்கிகளுள் ஒன்றான பேயர் ஸ்டேர்ன்ஸ் என்ற வங்கி, ஒரே நாளில் குப்புற விழுந்து திவாலாகியது. அதை மீட்டெடுத்து முட்டுக் கொடுக்க அமெரிக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்து விட்டன. அமெரிக்காவின் பணவீக்கம், கடந்த ஆண்டைவிட 4.3% அதிகரித்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் - எரிவாயுவின் விலை விண்ணை முட்டுகிறது.



கடுங்குளிரிலிருந்து தப்பிக்க பெரிய அட்டைப் பெட்டிக்குள் புகுந்து படுத்துறங்கும் வீடற்ற அமெரிக்க ஏழை.

அமெரிக்காவின் 3.7 கோடிமக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வதாகவும், இது மொத்த மக்கள் தொகையில் 12.7% என்றும், ஆண்டுக்கு 50 லட்சம் பேர் வீதம் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அமெரிக்க அரசே ஒப்புக் கொள்கிறது.

ஒருபுறம், டாலரின் மதிப்புச் சரிவு; மறுபுறம், உற்பத்தித் தேக்கம், பணவீக்கம். இதுவும் போதாதென ''சப்-பிரைம் லோன்'' எனும் தரமற்றவர்களுக்குத் தரப்படும் கடன் கொள்கையால் அமெரிக்காவின் வீட்டுமனைக்கடன் வியாபாரத் தொழில் மிகப் பெரிய நிதி நெருக்கடியலில் சிக்கி, அந்நாட்டின் பொருளாதாரத்தையே ஆட்டங்காண வைத்துவிட்டது.

இன்னொருபுறம், வர்த்தகப் பற்றாக்குறை. அதை ஈடுகட்ட வழிதெரியாமல் செயற்கையாக 75,000 கோடிக்கும் மேலான அமெரிக்க டாலர்களைப் புழக்கத்தில் விட்டுள்ளது அந்நாடு. அமெரிக்

ஒரு துண்டு ரொட்டியும் ஒரு குவளை ''சூப்''பும் பெறுவதற்காக கஞ்சித் தொட்டி அருகே வரிசையில் காத்திருக்கும் வேலையிழந்த அமெரிக்கத் தொழிலாளர்கள்.




படிப்பகம்

www.padippakam.com



**வேலையிழந்து வாழ்விழந்து பிச்சையெடுக்கும் அவலத்தில் தள்ளப்பட்ட அமெரிக்கத் தொழிலாளி.**

காவின் உற்பத்தியின் மதிப்பை விட பலமடங்கு மிதமிஞ்சிய அளவில் காகிதப் பணத்தை அச்சிட்டு தள்ளி புழக்கத்தில் விட்டு, டாலரின் மதிப்பை செயற்கையாக ஊதிப் பெருக்க வைத்துக் கொண்டிருக்கிறது. வரம்பை மீறிய இத்தகைய அராஜக - சூதாட்டங்களால் டாலரின் மதிப்பு சரியத் தொடங்கி, அந்நாட்டின் பொருளாதாரமே மீளமுடியாத நெருக்கடியில் சிக்கித் தத்தளிக்கிறது.

1930-களில் ஏற்பட்ட உலகின் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை விஞ்சும் வகையில், இதுவரை கண்டிராத மிகப்பெரிய நெருக்கடியில் நாம் சிக்கிக் கொண்டுள்ளோம்'' என்று அலறுகிறார், பிரபல நிதி முதலீட்டாளரும், உலகின் மிகப்பெரிய கோடீசுவரர்களில் ஒருவருமான ஜார்ஜ் சோரஸ்.

இந்த நெருக்கடியின் சுமைகள் அனைத்தையும் ஏழை நாடுகளின் மீது திணித்து தப்பித்து வந்த ஏகாதிபத்தியவாதிகள், சந்தைப் பொருளாதாரத்தின் அராஜகத்தாலும் ஊகவணிகச் சூதாட்டத்தாலும் உள்நாட்டிலேயே பொருளாதார முறைகுலைவுகள் ஏற்படத் தொடங்கியதும், அந்நெருக்கடியின் சுமைகளை சொந்த நாட்டு உழைக்கும் மக்களின் மீது சுமத்துகின்றனர். ஆலை மூடல், ஆட்குறைப்பு, ஊதிய வெட்டுகளால் பாதிக்கப்படும் தொழிலாளர்களின் போராட்டங்கள் அமெரிக்காவில் அடுத்தடுத்து பரவத் தொடங்கியுள்ளன.

நமது நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது, அன்று வெள்ளைக்காரன் ஆங்காங்கே கஞ்சித் தொட்டி வைத்து, பட்டினியால் செத்துக் கொண்டிருந்த மக்களுக்கு ஒருவேளை கஞ்சி ஊற்றி மனிதாபிமான நாடகமாடினான். அதைப் போலவே, அமெரிக்காவில் வேலையிழந்து வாழ்விழந்த தொழிலாளர்களுக்கு அரசாங்கமே ஒருவேளை கஞ்சி ஊற்றுகிறது. மேலை நாடுகளில் இதனை ''பிரட் லைன்'', ''சூப்லைன்'' என்று குறிப்பிடுவார்கள். குபேரபுரி அமெரிக்காவின் நியூயார்க் நகரில் மட்டும் இத்தகைய கஞ்சித் தொட்டிகளில் ஒரு துண்டு ரொட்டியும் ஒரு குவளை சூப்பும் பெறுவதற்காக பல்லாயிரக்கணக்கானோர் தினமும் வரிசையில் காத்திருக்கின்றனர்.

1970-களில் 3.9 சதவீதமாக இருந்த அமெரிக்காவின் வேலையற்றோரின் எண்ணிக்கை, 1980-களில் 11 சதவீதமாக உயர்ந்து, இன்று 16% அளவுக்கு அதிகரித்து விட்டது. முழுமையாக வேலையற்றவர்களோடு, வேலையிழந்து வேறிடத்தில் பகுதி நேரமாக வேலை பார்ப்பவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால், இது ஏறத்தாழ 20%-க்கும் மேலாக இருக்கும் என்று அமெரிக்கப் பத்திரிகைகளே குறிப்பிடுகின்றன.

அமெரிக்கக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் வேலை தர வேண்டியது அரசின் கடமை. வேலை கொடுக்க இயலாத நிலையில், வேலையற்றோருக்கு அரசு உதவித் தொகை அளிக்க வேண்டும். ஆனால், பல்வேறு மோசடிகள் மூலம் வேலையில்லாத இளைஞர்களில் ஏறத்தாழ 40% பேருக்கு மட்டுமே அமெரிக்க அரசு உதவித் தொகை வழங்குகிறது. ஈராக்கை ஆக்கிரமித்து அந்நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்காக அமெரிக்க இராணுவத்துக்கு நாளொன்றுக்கு 70 கோடி டாலர்களை (ஏறத்தாழ ரூ. 3000 கோடி) வாரியிறைக்கும் புஷ் அரசு, வேலையற்றோருக்கான உதவித் தொகையை அனாவசியச் செலவு என்று கூறி, அதைப் பெருமளவு குறைத்து விட்டது. இதனால், வாழவழியின்றி வேலையற்றவர்கள் பலர் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகைய உழைக்கும் மக்கள், ரயில் நிலையங்கள், சுரங்கப் பாதைகள், பூங்காக்கள், டெலிபோன் 'பூத்'துகள் - என பொது இடங்களில்தான் வாழ்கின்றனர். கடுங்குளிர் நிறைந்த அமெரிக்காவில் இவர்களால் எப்படி வாழ முடியும்? பெரிய அட்டைப் பெட்டிகளில் புகுந்து கொண்டு படுத்துறங்குவது, குப்பைத் தொட்டிகளிலிருந்து கிழிந்த கம்பளி ஆடைகளை எடுத்துப் போர்த்திக் கொள்வது முதலானவற்றால் எப்படியோ பலர் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**நியூயார்க் நகரில், வேலை நீக்கம் செய்யப்பட்ட அமெரிக்கத் தொழிலாளர்களின் சாலைமறியல் போராட்டம்.**



www.padippakam.com

உறை பனிக்கும் கீழான கடுங்குளிரில் விறைத்து மீண்டு போனவர்கள் ஏராளம்.

அரசின் புள்ளிவிவரப் படியே, குபேர நாடான அமெரிக்காவில் வீடிழந்து தெருவில் வாழும் உழைக்கும் மக்களின் எண்ணிக்கை 20 லட்சம் பேர். நியூயார்க் நகரில் மட்டும் இத்தகையோரின் எண்ணிக்கை 70,000 பேருக்கும் மேலாகும் என்று அம்மாநகர ஆளுநரின் அறிக்கை குறிப்பிடுகிறது. லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் ஏறத்தாழ 80,000 பேர் வீடற்றவர்களாக, வேலையற்றவர்களாக உழல்கின்றனர். இவர்களில் கருப்பின மக்களே மிக அதிகமாக உள்ளனர். அமெரிக்காவின் ஒட்டுமொத்த கருப்பின மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் வறுமையில் சிக்கித் தவிப்பதாக புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்கா மட்டுமல்ல; மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இதே நிலைமைதான் நீடிக்கிறது. கடந்த பத்தாண்டுகளில், வேலையற்றோரின் எண்ணிக்கை 10.9 சதவீதமாக ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்துள்ளது. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் ஏறத்தாழ 11%-க்கும் மேலான மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வதாக ஐரோப்பிய பொருளாதாரக் குழுமத்தின் ஆண்டறிக்கை குறிப்பிடுகிறது.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு ''கம்யூனிசம் தோற்றுவிட்டது; உலக முதலாளித்துவம் வெற்றிக் கொடி நாட்டிவிட்டது'' என்று எக்காளமிட்ட ஏகாதிபத்திய உலகம், சந்தைப் பொருளாதாரத்தின் படுதோல்வியாலும் பொருளாதார வீழ்ச்சியாலும் தடுமாறித் தத்தளிக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளில் வளம் கொழிக்கவில்லை; வறுமை தாண்டவமாடத் தொடங்கி விட்டது. ஒருபுறம், உலகைச் சூறையாடும் ஏகாதிபத்திய நிதியாதிக்கக் கும்பலின் செல்வம் கோடானுகோடிகளாகப் பெருத்துக் கொண்டே போகிறது. மறுபுறம், வறுமையும் வேலையின்மையும் கொள்ளை நோய் போலப் பரவி வருகிறது. மலைக்கும் மடுவுக்குமான இந்த இடைவெளி, இன்று அமெரிக்காவின் நிதி நெருக்கடியால் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியைத் தொடர்ந்து தீவிரமாகிக் கொண்ட வருகிறது. மரணப் படுக்கையில் வீழ்ந்துவிட்ட ஏகாதிபத்தியத்தின் தலையைச் சீவி, இனி அதன் உயிரைப் பறிப்பதுதான் இன்றைய உடனடித் தேவையாகியுள்ளது.

● குமார்

# பாரக் ஒபாமா:
# அமெரிக்காவின் மாயாவதி!

**பாரக் ஒபாமாவின் தேர்தல் வாக்குறுதிகள், புதிய மொந்தை-பழைய கள்ளு என்பது தவிர வேறில்லை.**

அமெரிக்காவின் அதிபர் பதவிக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தல், உலகெங்கிலும் மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாகி இருக்கிறது. தற்போதைய அதிபர் ஜார்ஜ் புஷ் நடத்தி வரும் ஈராக் போருக்கு எதிரான அமெரிக்க மக்களின் கருத்தை இத்தேர்தல் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு, அமெரிக்காவின் வரலாற்றில் முதன் முறையாக அமெரிக்கக் கருப்பினத்தைச் சேர்ந்த பாரக் ஒபாமா என்பவர், ஜனநாயகக் கட்சியின் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்படவிருப்பதும், அதிபர் தேர்தலின் முக்கியத்துவத்தை அதிகரித்திருக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈராக், ஆப்கான் மீது நடத்திவரும் ஆக்கிரமிப்புப் போரினாலும்; உள்நாட்டில் நிலவிவரும் பொருளாதார மந்தத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்க மக்கள், ஒரு மாற்றத்தை விரும்புவதாகவும்; அம்மாற்றத்தைப் பிரதிபலிப்பவராக ஒபாமா இருப்பதாகவும் பெரும்பாலான முதலாளித்துவப் பத்திரிகைகள் கணிப்புகளை வெளியிட்டு வருகின்றன. மேலும், அமெரிக்காவில் வெள்ளை இனவெறி முன்னைப்போல கோலோச்சவில்லை என்பதற்கு பாரக் ஒபாமாவின் தேர்வு எடுப்பான சான்று என்றும் கூறப்படுகிறது.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ள பாரக் ஒபாமாவை எதிர்த்து, ஜான் மெக்கெய்ன் என்ற வெள்ளை இன கிழட்டு நரியைக் குடியரசுக் கட்சி களத்தில் இறக்கிவிட்டுள்ளது. நவம்பரில் நடைபெறவுள்ள அதிபர் தேல்தலில், ஒபாமா தோற்று, ஜான் மெக்கெய்ன் வெற்றி பெற்றால், அது ஜார்ஜ் புஷ் மூன்றாம் முறையாக பதவியேற்பதற்குச் சமமானதாகும். ஏனென்றால், உலகெங்கிலும் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை விரிவுபடுத்த, ஜார்ஜ் புஷ் எட்டடி பாய்ந்தால், ஜான் மெக்கெய்னோ பதினாறு அடி பாயக் கூடியவர்.

கிழடு தட்டிப்போன, போர்வெறி பிடித்த, ஊழல் பேர்வழியான ஜான் மெக்கெய்னோடு ஒப்பிடும் பொழுது, இளமையான, வசீகரமாகப் பேசத் தெரிந்த, ஊழல் கறையேதும் படியாத பாரக் ஒபாமாவின் தேர்வு இன்னும் முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது.

●●●

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கு நடந்த முதல் கட்டத் தேல்தல்களில் பாரக் ஒபாமாவும்; முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் மனைவி ஹிலாரி கிளிண்டனும் அக்கட்சியினுள் போட்டியிட்டனர். ஹிலாரி, இத்தேர்தல்களின் தொடக்கக் கட்டத்தில், அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தேவையான தகுதியும், அனுபவமும் தனக்கே இருப்பதாகப் பிரச்சாரம் செய்து, ஒபாமாவைத் தோற்கடிக்க முயன்றார். ஆனால், ஹிலாரியின் இந்தப் பிரச்சாரம் ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் எடுபடாமல் போகவே, ஹிலாரியின் ஆதரவாளர்கள் ஒபாமாவுக்கு எதிராக வெள்ளை இனப் பெருமையைக் கையில் எடுத்துக் கொண்டனர்.

தெற்கு கரோலினா மாநிலத்தில் நடந்த முதல் கட்டத் தேல்தலில் ஒபாமா வெற்றி பெற்ற பொழுது,ஹிலாரியின் கணவர் பில்கிளிண்டன், ''தெற்கு கரோலினா கருப்பர்கள் நிறைந்த மாநிலம்'' எனக் கூறி, ஒபாமாவின் தோலின் நிறத்தை மறைமுகமாகச் சுட்டிக் காட்டினார். இதன் பொருள்,வெள்ளையர்கள் நிறைந்த பகுதிகளில் ஒபாமா வெற்றி பெற முடியாது என்பதாகும்.

பில் கிளிண்டன் மறைமுகமாகச் சொன்னதை, பென்சில்வேனியா தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது, ''இங்கிருக்கும் சில வெள்ளையர்கள், ஒபாமா கருப்பர் என்பதால், அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள்'' என அம்மாநில கவர்னர் எட்ரெண்டல் பச்சையாகப்

www.padippakam.com

பேசினார். பில்கிளிண்டன் வெள்ளையர்கள் நிறைந்த கூட்டங்களில், ''ஒபாமா உங்களின் பிரதிநிதி அல்ல'' என நிறவெறியைக் கக்கிப் பிரச்சாரம் செய்தார்.

வடக்கு கரோலினா மாநிலத்தில் நடந்த தேர்தலில் தோற்றுப் போன ஹிலாரி, இந்தியானா மாநிலத்தில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதன் பிறகு நடந்த பத்திரிக்கையாளர் கூட்டத்தில் பேசிய ஹிலாரி கிளிண்டன், ''உழைக்கும், கடினமாக உழைக்கும் அமெரிக்கர்களின், வெள்ளை இன அமெரிக்கர்களின் ஆதரவை ஒபாமா பெற முடியாது'' என வெள்ளை இனத் திமிரைக் கக்கினார்.

''அந்நியப் பெயரைக் கொண்ட ஒரு கருப்பு மனிதனை நம்பி, இந்த நாட்டின் பாதுகாப்பை ஒப்படைக்க முடியுமா?'' என ஹிலாரியின் ஆதரவாளர்கள் விளம்பரம் செய்தனர்.

ஒபாமா, கிறித்துவின் ஐக்கிய தேவாலயம் என்ற கிறித்துவ மதப் பிரிவைச் சேர்ந்தவர். இப்பிரிவின் மத குருவான ரைட், அமெரிக்கா, கருப்பின மக்களுக்கு இழைத்த கொடுமைகளைக் குறிப்பிட்டு, ''இறைவன் அமெரிக்காவை ஆசிர்வதிக்கத் தேவையில்லை; சபிக்கட்டும்'' எனப் பல ஆராதனைக் கூட்டங்களில் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார். ஹிலாரியின் ஆதரவாளர்கள் இப்பேச்சுக்களைத் தோண்டியெடுத்து வெளியிட்டு, அதன் மூலம், ஒபாமாவை அமெரிக்காவிற்கு எதிரானவராக - தேச பக்தி அற்றவராகச் சித்தரித்தனர்.

இத்துணை அவதூறுகளுக்குப் பிறகும், ஒபாமாவின் வெற்றியை ஹிலாரியால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ''அமெரிக்க மக்கள் மாற்றத்தை விரும்புகின்ற வேளையில், ஹிலாரி 'தகுதி', 'திறமை' என்ற பழைய பஞ்சாயத்தைப் பாடிக் கொண்டிருந்தது அமெரிக்க மக்களிடம் எடுபடவில்லை; ஒபாமா, கருப்பின மக்களை மட்டுமின்றி, முதன்முதலாக ஓட்டுப் போடப் போகும் இளைஞர்களையும் தன் பக்கம் கவர்ந்து இழுத்து விட்டார்'' என ஒபாமாவின் வெற்றிக்குக் காரணங்கள் கூறப்படுகின்றன.



ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ள பாரக் ஒபாமா.

•••

ஜார்ஜ் புஷ், ஹிலாரி கிளிண்டன் போல ஒபாமா பெரும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த கென்ய நாட்டைச் சேர்ந்த கருப்பருக்கும், அமெரிக்காவைச் சேர்ந்த வெள்ளை இனப் பெண்மணிக்கும் மகனாகப் பிறந்தவர் ஒபாமா. அவர் சிறுவனாக இருந்த பொழுதே, தாயும், தந்தையும் பிரிந்துவிட்டனர். பிறகு, ஒபாமாவின் தாய் இந்தோனேஷியாவைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்து கொண்ட போதும், ஒபாமாவை அவர்தான் வளர்த்தார். ஒபாமா, தனது ஆரம்பக் கல்வியை ஏழை நாடான இந்தோனேஷியாவில் தான் முடித்தார். ஒபாமா திறமையான வழக்குரைஞர் என்ற போதும், தனது கல்வித் தகுதியைப் பயன்படுத்திக் கொண்டு, உயர் பதவிகளைப் பிடிக்க அலையவில்லை. மாறாக, கருப்பர் இன மக்கள் மத்தியில் தன்னார்வத் தொண்டராகப் பணியாற்றினார்.

**''தீண்டாமைக்கும் இந்து மதத்திற்கும் தொடர்பில்லை'' என ஆர்.எஸ்.எஸ். கூறுவதைப் போல, ''நிறவெறிக்கும், வெள்ளையருக்கும் தொடர்பில்லை'' என்கிறார் ஒபாமா.**

அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் கொள்கைகள் அமெரிக்க மக்கள் மத்தியில் எதிர்காலம் பற்றிய பீதியை உருவாக்கி இருக்கிறது; ஒபாமாவோ, ''இதனை நம்மால் மாற்ற முடியும்'' என்ற நம்பிக்கையை அமெரிக்க மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமாகச் செயல்படுகிறார். எனவே, இப்படிப்பட்ட பின்னணி கொண்ட பாரக் ஒபாமா அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டால், அமெரிக்காவில் ஒரு மாற்றம் ஏற்படும் என்றவாறு எதிர்பார்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.

ஒபாமாவின் ஆளுமை குறித்து உருவாக்கப்படும் இந்த ஒளிவட்டங்கள், நம்பிக்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அவரின் சமூக-அரசியல் கருத்துக்களைக் கீறிப் பார்ப்போம். அமெரிக்காவைச் சேர்ந்த, நோபல் பரிசு பெற்ற டோனி மோரிசன் என்ற கருப்பினப் பெண் எழுத்தாளர், ''அமெரிக்கக் கருப்பின மக்களின் பிரதிநிதியாகத் தன்னைக் காட்டிக் கொள்ளாமல், வெள்ளை நிற அமெரிக்கர்கள், ஒரு ஆதர்சனக் கருப்பின அதிபர் எப்படி இருக்க வேண்டும் என விரும்புகிறார்களோ, அந்த விருப்பத்தை ஈடுசெய்யும் வண்ணம் இருக்கும் கருப்பு அமெரிக்கனை, அமெரிக்கா அதிபராகத் தேர்வு செய்யக்கூடும்'' எனக் குறிப்பிட்டுள்ளார். ஒபாமா, அப்படிப்பட்ட ஆதர்சனக் கருப்பின அதிபராக இருப்பேன் எனக் காட்டிக் கொள்வதில் மும்முரமாக இருக்கிறார்.

ஒபாமைவைப் பொறுத்தவரை, இனப்பாகுபாடு அரசியல் பிரச்சினையல்ல; வெறும் பொருளாதாரப் பிரச்சினை. ''கருப்பின மக்களுக்கு கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய

www.padippakam.com

சேவைகள் கிடைக்கவில்லை; தொழில், வேலைவாய்ப்பு போன்ற அவர்களின் ஜீவாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை; கருப்பினக் குடியிருப்புகளில் குழந்தைகள் விளையாட பூங்காக்கள் இல்லை; அப்பகுதியில் இருந்து குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கு முறையான ஏற்பாடுகள் இல்லை. இவை போன்ற பற்றாக்குறைகள்தான் வன்முறை உருவாக உதவுகின்றன. கருப்பின மக்கள் இரண்டாம்தர குடிமக்களாக நடத்தப்படுவதற்கு இவைதான் காரணங்கள்'' என்கிறார் ஒபாமா. தீண்டாமைக்கும் இந்து மதத்திற்கும் தொடர்பில்லை என் ஆர்.எஸ்.எஸ். பித்தலாட்டம் செய்வது போல, நிறவெறிக்கும் வெள்ளையர்க்கும் தொடர்பில்லை எனக் காட்ட முயலுகிறார், ஒபாமா.

கிறித்தவ மதகுரு ரைட், ''கடவுள் அமெரிக்காவைச் சபிக்கட்டும்'' எனப் பேசி வருவதை, மனசாட்சியுள்ள எந்தவொரு கருப்பின அமெரிக்கனும் ஆதரிக்கவே செய்வான். ஆனால், ஒபாமாவோ வெள்ளை நிறக் கனவான்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்ற சுயநலத்திற்காக, அம்மதகுருவின் பேச்சுக்களை இப்பொழுது கண்டித்துள்ளார். தீண்டாமைக்காக இந்து மதத்தை வெறுக்கக் கூடாது என்பது போல, வெள்ளை நிறவெறிக்காக அமெரிக்காவைக் குற்றம் சொல்லக் கூடாது என்கிறார்,ஒபாமா.

இந்தியாவில் இட ஒதுக்கீடு வழங்கப்படுவது போல, அமெரிக்க அரசு, கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கருப்பின மக்களுக்குச் சட்டபூர்வ சலுகைகளை வழங்கி வருகிறது. வெள்ளை நிறவெறியர்கள் இச்சலுகைகளை அடியோடு ரத்து செய்ய வேண்டும் எனக் கோருகிறார்கள். ஒபாமா இப்பிரச்சினையில் கழுவுற மீனில் நழுவுற மீனாக நடந்து கொள்கிறார். இது போன்ற சலுகையை பல்கலைக் கழகங்கள் வழங்கும் பொழுது, இன அடிப்படையை விட, பொருளாதார வரையறையை அளவு கோலாகக் கொள்ளலாம் என ஆலோசனை கூறுகிறார். இப்படிபட்ட ஒபாமாவை, வெள்ளைக்காரர்களுக்கு மட்டுமல்ல, நம்நாட்டுப் பார்ப்பனர்களுக்கும் பிடிக்கும்.


முதல் கட்டத் தேர்தல்களில் பாரக் ஒபாமாவை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஹிலாரி கிளிண்டன்.



கருப்பின ஒபாமாவின் இந்தச் சறுக்கல்களுக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, அவரது நடுத்தர வர்க்கத்துப் பின்னணி. ஒபாமாவின் தந்தை கருப்பராக இருந்தாலும்கூட, வெள்ளை நிறத் தாயும், பாட்டியும்தான் அவரை வளர்த்தனர். ஒபாமா, தனது ஆரம்பக் கல்வியை இந்தோனேஷியாவில் உள்ள மேட்டுக்குடி பள்ளிக்கூடத்திலும்; சட்டப்படிப்பை அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக் கழகத்திலும் முடித்தார். இருபது வருடத்திற்கு மேலாகத் தவறாது தேவாலயத்திற்குச் சென்று பிரார்த்தனை செய்யும் வழக்கமுடையவர். கிறித்தவ மதக் கோட்பாட்டிற்கு ஏற்ப மனைவி, இரண்டு பெண் குழந்தைகள் என்ற கட்டுக்கோப்பான குடும்ப வாழ்க்கையை நடத்தி வருபவர். அவரது நடை, உடை, பாவனை, ரசனை, பேச்சு, பொழுதுபோக்கு என்ற அனைத்தும் கனவான்களுக்கேயுரிய கண்ணியமிக்கது. அரசியலில் பெரிய பதவியை அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே பொது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர், ஒபாமா.

**"கியூபாவின் சுதந்திரத்திற்காகப் போராடுவேன்" என வாக்குறுதி அளித்து, தனது கம்யூனிச எதிர்ப்பையும் பதிவு செய்து விட்டார், பாரக் ஒபாமா.**

வடக்கு கரோலினாவைச் சேர்ந்த ஸ்டீவ் ரெஹ்மர் என்ற வெள்ளை இன சிறு வியாபாரி, ஒபாமா தன்னை அச்சமூட்டுவதாகக் கூறுகிறார். இது, நடுத்தர வர்க்கத்து வெள்ளை இனத்தவரின் மனோபாவத்தைப் பிரதிபலிக்கும் கருத்து. எனினும், ஜார்ஜ் புஷ்ஷின் ஆட்சியில் அதிருப்தியடைந்துள்ள ஸ்டீவ் ரெஹ்மர் போன்ற கட்சிசாராத வெள்ளையர்களின் வாக்குகளைப் பெற்றால்தான், ஒபாமாவால் அதிபர் தேர்தலில் வெற்றி அடைய முடியும். அதனால், வெள்ளையர்களைக் கோபமடையச் செய்யும் எந்தவொரு சர்ச்சைக்குள்ளும் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்வதில் ஒபாமா குறியாக இருக்கிறார். பெரும்பான்மையான வெள்ளை இனத்தவரின் வாக்குகளைக் கவர வேண்டும் என்பதற்காகவே, தன்னை நிறப் பாகுபாடுகளைக் கடந்தவராகக் காட்டிக் கொள்ள முயலுகிறார், ஒபாமா.



குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள மேலாதிக்கப் போர் வெறியன் ஜான் மெக்கெய்ன்.

•••

ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை, ஒபாமா அப்போரின் தொடக்கத்தில் இருந்தே எதிர்த்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், ஒபாமவை அதிபர் வேட்பாளராக அறிகவிக்கவுள்ள ஜனநாயகக் கட்சியோ, அமெரிக்க நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருந்த பொழுதும், ஈராக் போருக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அதிபர் ஜார்ஜ் புஷ் அமெரிக்க நாடாளுமன்றத்தில் வைத்த பொழுது, அதனை எதிர்த்து வாக்களிக்க மறுத்துவிட்டது. இக்கட்சியைச் சேர்ந்த பில் கிளிண்டன் அமெரிக்க அதிபராக இருந்த பொழுது, ஈராக் மீது ஒரு தாழ்நிலை ஆக்கிரமிப்புப் போரை நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒபாமாவை, தவறான கட்சியில் இருக்கும் சரியான நபராகப் பார்க்க முடியுமா?


படிப்பகம்

www.padippakam.com

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுவது மட்டும் பிரச்சினையல்ல. மேற்காசியாவில் அமெரிக்காவின் மேலாதிக்கமும், இசுரேலின் அடாவடித்தனங்களும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் முரணற்ற ஜனநாயகக் கோரிக்கையாகும். ஆனால், ஒபாமாவோ, அமெரிக்காவிலுள்ள யூதவெறியர்களிடம், அமெரிக்காவுக்கும், இசுரேலுக்கும் இடையேயுள்ள தனிச்சிறப்பான உறவு தொடரும்; பிற அரபு நாடுகளுடன் இசுரேல் கொண்டுள்ள உறவிலும், இசுரேலின் ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும் பகுதிகளிலும், இசுரேலுக்குச் சாதகமாகவே நடந்து கொள்வதாகவும் வாக்குறுதி அளித்து, வாக்குக் கேட்டுள்ளார்.



மின்னசோடாவில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் பாரக் ஒபாமாவும்; மாற்றத்தை விரும்பும் அவரது ஆதரவாளர்களும்...

மேலும், பாகிஸ்தானில் உள்ள முசுலீம் தீவிரவாதிகளின் முகாம்களை பாக். அதிபர் முஷாரப் தாக்கத் தயங்கினால், நாம் குண்டு போட்டுத் தாக்குவோம்; ஆப்கானிஸ்தானுக்குக் கூடுதலாகப் படைப் பிரிவுகளை அனுப்ப வேண்டும் என்றும் கூறி, அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குத் தான் தடையாக இருக்க மாட்டேன் என ஒபாமா உறுதியளித்து வருகிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அமெரிக்காவால் பாதுகாக்கப்படும் கியூபா நாட்டு அகதிகளிடம் வாக்குச் சேகரிக்கும் பொழுது, கியூபாவில் சுதந்திரத்தைக் கொண்டு வருவதற்காக, கியூப -அமெரிக்க தேசிய அமைப்போடு கைகோர்த்துக் கொள்வேன் எனக் கூறி, தனது கம்யூனிச எதிர்ப்பையும் பதிவு செய்துவிட்டார், ஒபாமா.

கியூபா, ஆப்கான், அரபு நாடுகளின் இறையாண்மைக்கு எதிரான ஒபாமாவின் பேச்சுக்களை, வாக்குகளைப் பெறுவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட சமரசம் என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அமெரிக்கா நடத்தி வரும் தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்பது, ஜார்ஜ் புஷ் என்ற முட்டாள் அதிபரின் சொந்த விருப்பம் அல்ல. அது, நாடாளுமன்றம் என்ற திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு, அமெரிக்காவை ஆண்டு வரும் நிதி ஆதிக்கக் கும்பல்களின் விருப்பம்; அமெரிக்காவின் தேசங் கடந்த எண்ணெய் கழகங்களின், ஆயுதத் தளவாட நிறுவனங்களின் விருப்பம்; கிறித்தவ மத வெறியர்கள், யூத மதவெறியர்களின் விருப்பம். இந்த விருப்பத்திற்கு எதிரான யாரும், அவர் வெள்ளையராக இருந்தாலும் கூட அமெரிக்க அதிபராகிவிட முடியாது.

அமெரிக்க போலீசின் இனவெறிப் படுகொலைகளை எதிர்த்துப் போராடும் கருப்பு அமெரிக்கர்கள்.




அமெரிக்காவின் இந்த ஏகாதிபத்தியக் கொள்கைதான், கருப்பின மக்களை இரண்டாம் தர குடிமக்களாக நடத்துகிறது; எதிர்காலம் பற்றிய பீதியை அமெரிக்க மக்களிடம் உருவாக்கி இருக்கிறது. முதலாளித்துவ நாடாளுமன்றத்திற்கு நடத்தப்படும் தேர்தல்கள் மூலம், அடிப்படையான எந்த மாற்றத்தையும் கொண்டுவந்துவிட முடியாது என்பதற்கு பல நாடுகளின் அனுபவங்கள் சான்றாக உள்ளன. அமெரிக்க ஜனநாயகம் பற்றிய வீண்பெருமையில் மூழ்கிக் கிடக்கும் அமெரிக்க மக்களுக்கு இந்த அனுபவங்கள் கண்ணில் படாது. அமெரிக்க மக்கள் பட்டுத்தான் புரிந்து கொள்ள வேண்டும்; அதற்கு வேண்டுமானால், பாரக் ஒபாமாவின் தேர்வு பயன்படக்கூடும்.

• ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

# உத்தப்புரம்:
# சாதிவெறியர்களுக்குச் சாமரம் வீசிய ஓட்டுக் கட்சிகள்

## தீண்டாமைச் சுவரை இடிப்பதில், பிள்ளைவாள்களின் மனம் கோணாதபடி நடந்து கொண்டன, ஓட்டுக் கட்சிகள்.

மதுரை மாவட்டம் பேரையூரை அடுத்துள்ள உத்தப்புரத்தில் கொடிக்கால் பிள்ளை எனும் சிறுபான்மை ஆதிக்க சாதியினர், ஊருக்குள் தாழ்த்தப்பட்ட சாதியினர் நுழைந்து விடக் கூடாது என்பதற்காகக் கட்டி இருந்த சுவர், கடந்த 18 ஆண்டுகளாக ஆதிக்க சாதித் திமிரின் அடையாளமாய் இருந்து வந்தது.

தலித் விடுதலையை முன்னிறுத்தி டஜன் கணக்கில் கட்சிகளும் இயக்கங்களும் இயங்கி வந்தபோதும், அச்சுவரினை இடித்துத் தள்ள எவரும் முன்கை எடுக்கவில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரின் இளைய தலைமுறையினர், இந்த அவமானச் சுவரை வீழ்த்தியே தீருவது என்பதில் உறுதியாய் நின்றனர். இப்பிரச்சினையைக் கையில் எடுத்த சி.பி.எம். கட்சி ''தீண்டாமைச் சுவரை இடிப்போம்'' எனும் முழக்கத்தின் கீழ் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத்தை உத்தப்புரத்திற்கு வரவழைத்தது. இதனால் பிரச்சினையின் தீவிரம் ஊடகங்கள் வழியே இந்தியா முழுவதும் பேசும் பொருளாகி விட்டதால், அரசு தலையிட்டு, 300 அடி சுவற்றில் வெறும் 15 அடிக்கு மட்டும் இடித்தது. உத்தப்புரத்தை உத்தமபுரமாக்கி விட்டதாக அரசு அறிவித்தும் விட்டது. சி.பி.எம். கட்சியும் இதனை மாபெரும் சாதனை என்றும், தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினையில் தங்களுக்குத்தான் பெரிதும் அக்கறை உள்ளதென்றும் பிரச்சாரம் செய்து வருகிறது.

இப்பிரச்சினை மனித உரிமைக் கமிசன் வரை சென்றுவிட்டதால்தான் அரசு சுவரை இடிக்க முன் வந்தது. இதே அரசுதான் தீண்டாமையின் சாட்சியமாக இன்னமும் நீடித்து வரும் இரட்டைக் குவளைகளை அடித்து நொறுக்கிய பெரியார் தி.க.வினரைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

தாழ்த்தப்பட்டோர் கடவுளான கருப்பசாமியை வழிபடக் கரகம் எடுக்கும் முன், அவர்களின் முன்னோர்கள் நட்டுவைத்த அரச மரத்தை வணங்கி வருவது உத்தப்புரத்தில் நீண்ட நெடுங்காலமாய் இருந்து வந்த மரபு. கொடிக்கால் பிள்ளை சாதியினரின் குல தெய்வமான முத்தாலம்மன் கோயிலுக்கு நேர் எதிரில் இருக்கும் இந்த அரச மரத்தை வணங்க வரும் தாழ்த்தப்பட்டோரால் தங்கள் சாமியே தீட்டுப்பட்டு விடுகிறது என்று 1989-ஆம் ஆண்டில் இவ்வழக்கத்தை எதிர்த்து சாதிவெறியர்கள் தகராறை ஆரம்பித்தனர். இதுதரப்பிலும் மாறி மாறி நடந்த தகராறு, கட்டைப் பஞ்சாயத்து மூலம் தீர்க்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோரை மிரட்டி போலீசுத் துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் முன்னிலையில் சுமார் 23 பேர்கள் சாட்சியாக ஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அரச மரம் இருக்கும் பகுதிக்குள் தாழ்த்தப்பட்டோர் வரவே கூடாது என்றும் மரத்தைச் சுற்றி தடுப்புச் சுவர் கட்டுவதென்றும், இன்னும் சாதி ஆதிக்கத்தை நிலைநாட்டும் பல அம்சங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் தாழ்த்தப்பட்டோர் மூவரை மிரட்டிக் கையெழுத்து வாங்கினர். அதே 1989-ஆம் ஆண்டில்தான் தீண்டாமைக்கெதிராக வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் தீண்டாமையை ஆதரிக்கும் ஒப்பந்தத்தினை உருவாக்கிய அதிகாரிகள் அத்தனை பேரையும் கம்பி எண்ண வைத்திருக்க முடியும். ஆனால், ஒப்பந்தத்தின் மூலப்பிரதியே போலீசு நிலையத்தில்தான் வைக்கப்பட்டிருந்தது!

அதே ஆண்டு பேருந்து விட்டு இறங்கிய தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர், தனது தெருவுக்குச் செல்ல அரச மரம் இருக்கும் பிள்ளைமார் தெருவழியாக நடந்து சென்ற போது, பிள்ளைமார் சாதி வெறியர்களால் கல்லால் அடித்து விரட்டப்பட்டார். அதுவரை அடிவாங்கியே அடங்கிக் கிடந்த ஒடுக்கப்பட்ட மக்கள் இம்முறை திருப்பித் தாக்கினர். இருதரப்பிலும் அடுத்தடுத்து கொலைகள் விழுந்தன. போலீசோ தாழ்த்தப்பட்டோர் மீது மட்டும் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் இருவர் உயிரிழந்தனர். இருப்பினும், தங்கள் உயிருக்குப் பாதுகாப்பில்லை என்று கூறிக் கொண்ட பிள்ளைமார் சாதியினர் மாவட்ட கலெக்டர், தாசில்தார், ஆர்டிஓ அனுமதியின் பேரில் தங்கள் குடியிருக்கும் தெருக்குள் தாழ்த்தப்பட்டோர் நுழையக்கூடாது என்று சுவர் எழுப்பி பொதுப் பாதையை மறித்தனர். அதில் அண்மையில் மின்சார வேலியையும் அமைத்தனர்.



தீண்டாமைச் சுவரில் ஒரு சிறு பகுதியை மட்டும் இடித்துவிட்டு (உள்படம்) அமைக்கப்பட்ட சாலை.

''இந்து'' பத்திரிக்கையில் மின்வேலி அமைக்கப்பட்ட செய்தி வெளியானவுடன், சட்டசபையில் சி.பி.எம். கட்சி


படிப்பகம்

www.padippakam.com

உரிமைப் பிரச்சினையை எழுப்பியது. உடனே அமைச்சர் ''மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது'' என்று பதில ளித்து, ஏதோ இது மின்சாரத் திருட்டு விவகாரம் போலப் பூசி மெழுகினார். கருணாநிதியோ ''பாதையும் விடுகிறோம். பாதுகாப்பும் தருகிறோம்'' என்று இருதரப்பினரின் ஓட்டுக்க ளையும் கணக்குப் போட்டபடி பேசினார்.

சட்ட வரம்புக்கு உட்பட்டு அரசு நிலத்தில் அமைந்திருக் கும் 15 அடி சுவரை மட்டும் இடித்து விடுவதென அரசு முடி வெடுத்து இருதரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்தியது. பிள்ளைமாரோ, தீண்டாமைச் சுவரை இடித்தால் தங்களது ரேசன் கார்டுகளை கலெக்டரிடம் கொடுத்துவிட்டு மலைப்ப குதிக்குக் குடியேறி விடுவோம் என்று மிரட்டினர். இவ்வாறு சாதித் திமிரோடு பேசியவர்களைத் தண்டிக்க வேண்டிய அரசு, அவர்களிடம் கெஞ்சியது.

சுவரை இடித்தவுடன், குடும்பத்துடன் சுற்றுலா செல்வது போல உத்தப்புரத்தில் இருந்து 6 கி.மீ தொலைவிலுள்ள தாழையூத்து மலைக்குச் சென்று பிள்ளைமார் சாதியினர் தங் கிக் கொண்டனர். உத்தப்புரத்து ஒடுக்கப்பட்ட மக்கள் அப்ப குதியில் காடு திருத்தி. உருவாக்கியிருந்த தோட்டம்-துரவு களை அழித்தனர். அவர்களின் ஆடு-கோழிகளைத் திருடித் தின்றனர். பத்திரிக்கைகளோ, பிள்ளைமார்களின் குழந்தை கள் குளிரில் வாடுவதாக்வும், காய்ச்சல் கண்டு அவதியுறுவ தாகவும் 'நெஞ்சை உருக்கும்' செய்திகளை வெளியிட்டன. பிற்படுத்தப்பட்ட சகல ஆதிக்க சாதியினரும் பிள்ளைமா ருக்கு ஆதரவாகத் திரண்டனர். மதுப்புட்டி, கறி விருந்துடன் நடந்த இக்கேளிக்கைக்கு டாக்டர். சேதுராமனின் 'அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழகம்' அரிசி, விறகு போன் றவற்றை அன்பளிப்பாக அளித்தது. மதுரை, தேனி மாவட் டங்களில் இருக்கும் 'மகாஜன' சங்கங்கள் பணம் வசூலித்து, உத்தப்புரத்திலிருந்து கோபித்துக் கொண்டு போன காட்டு மிராண்டிகளுக்கு கிட்டத்தட்ட 20 லட்சம் ரூபாய் வரை ''மொய்'' எழுதின. தி.மு.க., காங்கிரசு முதல் நேற்று முளைத்த விஜயகாந்த் கட்சி வரை அனைத்து ஓட்டு கட்சிகளும் ரகசிய மாய் பிள்ளைமார்கள் சங்கத்துக்குத் தூது விட்டன.

சுவர் இடிக்கப்பட்டவுடன் உத்தப்புரத்தைச் சுற்றி இருக் கும் ஊர்களைச் சேர்ந்த பிற ஆதிக்க சாதியினருக்குப் பொறுக் கவில்லை. திட்டமிட்டு அவர்களே தேவர் சிலையை அவ மதித்துக் கலவரத்தைத் தூண்ட முயன்றனர். கோடங்கி நாயக் கன்பட்டியில் தேவர் சிலையில் சாணியைக் கரைத்து ஊற்றிய

**உத்தப்புரத் தீண்டாமைக் குற்றத்திற்காக ஒரு ஆதிக்க சாதிவெறியனைக் கூட கைது செய்யாமல் விட்டதன் மூலம், தனது ஆதிக்க சாதி விசுவாசத்தைப் பறைசாற்றிக் கொண்டுள்ளது தமிழக அரசு.**

வர்களே சாலைமறியல் செய்து தாழ்த்தப்பட்டோரைக் கைது செய்யக் கோரினர். மோப்ப நாய் வருகிறது என்ற செய்தி அறிந்ததும் அவசர அவசரமாக சிலையைக் கழுவி விட்டுப் பூசை நடத்தத் தொடங்கிவிட்டனர்.

ஆண்டிபட்டி அருகில் உள்ள குமணன் தொழு கிராமத் தில் தேவர் உருவப்படம் அவமரியாதை செய்யப்பட்டு விட்டதென்று குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி சாலை மறியல் செய்தார்கள். அதிகாரிகள் வந்து சாமாதானம் செய்ய முயன்றபோது தேவர் சாதி வெறியர்கள், 'பொதுச் சுடுகாட் டில் தாழ்த்தப்பட்டோரின் பிணத்தை எரிக்க அனுமதிக்கக் கூடாது', 'அவர்களுக்குத் தனியாகச் சுடுகாடு ஏற்படுத்த வேண்டும்' என்றும் 'திருவிழா, திருமணங்களில் தாழ்த்தப் பட்டோர் வெடி வெடிக்கக் கூடாது' என்றும் புதிய கோரிக்கை களை வைத்தார்கள். தீண்டாமையை ஆதரிக்கும் இக்கோரிக் கைகளுக்கு அதிகாரிகளும் ஆவன செய்வதாக உறுதி அளித் துள்ளார்கள்.

அரசுதான் இப்படியென்றால், ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளி டாக்டர் கிருஷ்ணசாமியோ 'தென் தமிழகத்தில் சாதி மோதல்களை உருவாக்கவும் அதில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பலிகடா ஆக்கவும் தொடர்ந்து சாதியச் சகதிக்குள் சிக்க வைக்கவும், அதன் மூலம் நிரந்தரமாக அவர்களைத் தனி மைப்படுத்தவும் சில சுயநல அரசியல் சக்திகள் செய்யும் சதி யாகும்' என்று அறிக்கைவிட்டார். அதே கிருஷ்ணசாமியின் மகளுக்கு நடைபெற்ற திருமணத்தில் முக்குலத்தோர் சாதிப் பிரமுகர்களாக அறியப்படும் நடிகர் கார்த்திக் கும், (சசிகலா) நடராசனும் கலந்து கொண்டு, உ.பி. பாணியில் அனைத்து சாதிக் கூட்டணி அமைத்து ஆட் சியைப் பிடிக்கும் கனவில் மிதந்து கொண்டிருந்தனர். பதவிக் கணக்கில் மிதக்கும் கிருஷ்ணசாமியின் 'சாதி இழிவை ஒழிக்கும் போராட்டப்பாதை' இதுதான்.

பாரதத்தின் அவமானச் சின்னம் என்று சொல்லி பாபர் மசூதியை இடித்த இந்துமதவெறிக் கட்சிகளின் கண்ணில், உத்தப்புரத்துச் சுவர் உறுத்தவே இல்லை. இந்துக்களின் ஒற்றுமை பேசும் இல.கணேசனோ, ராம.கோபாலனோ இதனைக் கண்டித்து வாயைத் திறக்கவேயில்லை.

உத்தப்புரத்தில் சட்டவிரோத ஒப்பந்தத்தை 1989-இல் உருவாக்கியவர்களை 'பெரிய மனிதர்கள்' என்று சொல்லி புளகாங்கிதம் அடையும் வலது கம்யூ னிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டி யன், பழைய செய்தித்தாள்களை எல்லாம் ஒன்றுவிடா

**தீண்டாமைச் சுவரில் சில செங்கற்களைப் பெயர்த்து எடுத்ததைக் கண்டித்து, ஊரைக் காலி செய்துவிட்டு மலையடிவாரத்துக்குப் போய்த் தங்கிக் கொண்ட கொடிக்கால் பிள்ளை சாதியினர்.**





படிப்பகம்

www.padippakam.com

மல் தேடி, எங்குமே தீண்டாமை பற்றி எழுதப்படவே இல்லை என்று சொல்லி இருக்கிறார். ''ஏன் சி.பி.ஐ. இந்த விசயத்தில் போராடவில்லை?'' எனக் கேட்பவர்களுக்கு ''நான் அசைவன் எனக் காட்டிக் கொள்ள எலும்புகளைத் தொகுத்து மாலை போட்டு ஆட வேண்டிய தேவையில்லை'' எனத் தெனாவட்டாகக் கட்டுரை எழுதுகிறார். மேலும் அவ்வூரில் உண்மையைக் கண்டறியக் குழு அமைத்து, அங்கு நிலவுவது 'ஆன்மீகப் பிரச்சினை' என்ற மாபெரும் கண்டுபிடிப்பை அறிவித்திருக்கிறார். 'அமைதி'யாக இருந்த ஊரில் அதே அமைதி தொடர வேண்டும் என்பதற்காக உத்தப்புரத்திற்கு ஒருமுறை பயணமும் செய்தார்.



உத்தப்புரத்தில் எஞ்சி நிற்கும் தீண்டாமைச் சுவரைப் பார்வையிடும் சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலர் பிரகாஷ் காரத்.

தா.பாண்டியன் விரும்பும் அதே அமைதியைத்தான் பிள்ளைமார் சங்கத் தலைவர் முருகேசனும் விரும்புகிறார். ''பல அப்பாவி தலித்துகள் இருக்கிறார்கள். அவர்கள் எங்களுடன் சகோதர சகோதரர்களாகத்தான் வாழ விரும்புகிறார்கள். சில சமூக விரோதிகள்தான் தலித்துகளைத் தூண்டி விடுகின்றனர்'' என்று கூறும் முருகேசனின் விருப்பமெல்லாம் என்றென்றைக்கும் தலித்துகள் அப்பாவிகளாகவே இருக்க வேண்டும் என்பதே. அவர்கள் அப்பாவிகளாக இருக்கும் வரை 'அமைதி' இருக்கும். இந்த அமைதியைத்தான் வலது கம்யூனிஸ்டு தா.பாண்டியனும் விரும்புகிறார்.

சாதி ஒழிப்பிற்காகவே இயக்கம் கண்ட திராவிடர் கழகம், சாதித்திமிர் பிடித்த பிள்ளைமார்களைச் செல்லமாகக் கண்டித்து தலையங்கம் எழுதியது. அச்சுவர் தீண்டாமைச் சுவர்தான் என்பதைக் கூட ஏற்றுக் கொள்ளாத தி.க., ''சுவரை ஏதோ கோபத்தில் எழுப்பி இருக்கக் கூடும்'' என விளக்கம் கொடுத்தது. ரேசன் கார்டுகளை ஒப்படைத்துவிட்ட பிள்ளைமார்களுக்கு புத்திமதி சொல்லித் திருத்த ''பிள்ளைமார் சமூகத்தில் படித்தவர்கள், அதிகாரிகள், முற்போக்குச் சிந்தனையாளர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள் கடமையினைச் செய்ய முன்வரவேண்டும்'' என்று கொக்கு தலையில் வெண்ணெய் வைக்கும் உத்தியைச் செயல்படுத்த பிள்ளைமாரில் முற்போக்காளர்களைத் தேடி அலைந்து அலுத்துப்போனது.

சி.பி.எம். மட்டும் இந்தப் பிரச்சினையில் கறாராக இருக்கிறதா?

சட்டமன்ற உறுப்பினர் நன்மாறன், மலைக்குப் போன சாதிவெறியர்களுக்கு முதுகில் மயிலிறகால் வருடி விட்டபடி ''அரசின் முடிவு புத்திசாலித்தனமானது. அதை சாதி இந்துக்கள் வரவேற்கணும். இப்போதைக்கு மனக் கிலேசம் இருந்தாலும் நாளடைவில் அது சரியாகிவிடும். அவர்கள் திரும்பி வர வேண்டும். சமுக வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும்'' என அன்பு கட்டளை இட்டு இரண்டு பேருக்கும் நல்லபிள்ளையாகப் பேர் எடுக்க முயன்றார். உத்தப்புரத்தில் தலித்துகளுக்கு ஆதரவாகக் கடப்பாரையைக் கையில் எடுத்த அன்னாரின் தலைமையோ, பசும்பொன்னில் தேவர் சமாதியில் வைக்க மலர்வளையத்தைக் கையில் எடுத்தது. மதுரையில் தேவர் நூற்றாண்டு விழாவில் பா.ஜ.க.வின் திருநாவுக்கரசருடன் சி.பி.எம்.இன் 'முற்போக்கு' எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி மேடை ஏறினார். இவர்களின் இந்தப் பித்தலாட்டத்தை உத்தப்புரம் பிள்ளைமார்களே ''இரட்டை டம்ளர் முறையை தென்னாடு முழுக்கக் கடைப்பிடிக்கும் முக்குலத்தோருக்கு எதிராக சி.பி.எம். கட்சி இயக்கம் எடுக்க முடியுமா?'' எனக் கேட்டுத் தோலுரிக்கின்றனர்.


தடி நோகாமல் பாம்படிக்கும் வித்தையை சி.பி.எம். மிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் நிலவும் தீண்டாமைக் கொடூரத்துக்கு இன்னுமொரு சாட்சியம்தான் உத்தப்புரம். அது அம்பலத்திற்கு வந்த பின்னரும் இத்தீண்டாமைக் குற்றத்திற்காக ஒரு ஆதிக்க சாதி வெறியனைக் கூட கைது செய்யாமல், கைகட்டி நின்று கெஞ்சிக் கூத்தாடிக் கொண்டு தனது ஆதிக்க சாதி விசுவாசத்தைப் பறைசாற்றிக் கொண்டுள்ளது தமிழக அரசு. தீண்டாமைக்கெதிராக சவடால் அடிக்கும் ஓட்டுக் கட்சிகளோ வெளிப்படையாகவே ஆதிக்க சாதிவெறியர்களுடன் கைகோர்த்துக் கொள்கின்றன; மவுனம் சாதிக்கின்றன; அல்லது பாதிக் கிணறு தாண்டிவிட்டு பதுங்கிக் கொள்கின்றன.

இத்தகைய பிழைப்பவாத ஓட்டுக் கட்சிகளையும் ஆதிக்க சாதிவெறியர்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்ளும் அரசையும் அம்பலப்படுத்தி வீழ்த்தாமல், தீண்டாமைக்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவே முடியாது என்பதை தமிழகத்துக்கு உணர்த்திக் கொண்டு நிற்கிறது, உத்தப்புரம் தீண்டாமைச் சுவர்.

• சம்புகன்

புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி மகளின் திருமணத்தில் கலந்து கொண்ட முக்குலத்தோர் சாதி பிரமுகர்களான நடிகர் கார்த்திக் மற்றும் சசிகலா நடராசன்



Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



ராஜேந்திரனின் தியாகத்தைப் போற்றிப் புரட்சிகர அமைப்புகளின் பங்கேற்புடன் நடந்த இறுதி ஊர்வலம். (இடது) சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து இறுதி ஊர்வலத்துக்குத் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தும் உழைக்கும் மக்கள்.

போன்ற ஆயுதங்களுடன் ஏழுமலையைக் குறி வைத்து தாக்க வந்துள்ளனர். இதனைத் தடுக்கச் சென்ற ஊர் மக்களில் ஒருவர்தான் தே.மு.தி.க.வைச் சேர்ந்த ராஜேந்திரன். சி.பி.எம். குண்டர்கள் அவரது மண்டையை உடைத்து உடலெங்கும் அரிவாளால் வெட்டியதால், சரிந்து விழுந்த அவரை உடனடியாக விழுப்புரம் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று, மருத்துவர் ஆலோசனைப்படி தீவிர சிகிச்சைக்காக சென்னைக்கு கொண்டு வரும்போது அவர் மரணமடைந்துள்ளார். இத்தாக்குதலின் போது வி.வி.மு. ஆதரவாளர்களின் வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. வீட்டில் இருந்த நகைகள், பணம் ஆகியவற்றை களவாடிச் சென்றுள்ளனர்.

முன்னுதாரணமிக்க இக்கிராமத்தின் நற்பெயரைக் காக்கவும், சமூக விரோத சி.பி.எம். குண்டர்களின் கொலைவெறித் தாக்குதலிலிருந்து வி.வி.மு. தோழர்களைக் காக்கவும் துணிவுடன் போரிட்டு தன் இன்னுயிரை ஈந்துள்ளார், ராஜேந்திரன். அவரது அளப்பரிய தியாகத்தைப் போற்றி சென்னை மற்றும் கடலூர் - விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் செஞ்சட்டையுடன் பெருமளவில் திரண்டு, இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

காரப்பட்டு கிராமத்தில் சி.பி.எம். குண்டர்கள் நடத்திய வெறியாட்டம்.



காரப்பட்டு கிராமத்தில் மக்களின் பொது ஒழுக்கக் கட்டுப்பாட்டின் காரணமாக, கட்டப்பஞ்சாயத்து, கள்ளச் சாராய விற்பனை ஆகியவற்றின் மூலம் போலீசுக்கு வரும் ''மாமூல்'' தடைபட்டுள்ளது. இதனால் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் சி.பி.எம். கட்சிக்கு போலீசு மறைமுகமாக ஆதரவு கொடுத்து வருகிறது.

எனவேதான் 20.06.08 அன்று நடந்த கொலைச் சம்பவத்திற்கான உண்மையான காரணத்தை ஆய்வு செய்யாமல், வி.வி.மு. தீவிரவாத அமைப்பு என்ற அவதூறைப் பரப்ப முயற்சிக்கின்றனர். கொலைவெறியாட்டம் போட்ட கும்பலை மக்கள் அடையாளம் காட்டினாலும், அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்யாமல் உள்ளனர். வீடுகள் சூறையாடப்பட்டு பொருட்களைப் பறி கொடுத்தவர்கள் கூறும் புகாரை பதிவு செய்யாமல் உள்ளனர். அடிபட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சிறுவனைக் கூட, குற்றவாளி எனக் கூறி கைது செய்ய முயற்சித்தனர். மக்கள் போராட்டத்தின் மூலம் இம்முயற்சி முறியடிக்கப்பட்டது. பொதுச் சொத்துக்களை நாசம் செய்ததாகப் பொய் வழக்குப் போட்டு, பாதிக்கப்பட்டவர்களைக் கைது செய்ய முயற்சித்து வருகிறது திருவெண்ணை நல்லூர் போலீசு.

கொலைகார குண்டர்களையே அணிகளாகக் கொண்டுள்ள சி.பி.எம். கட்சியின் யோக்கியதை, வி.வி.மு.வினர் உடனடியாக மேற்கொண்ட சுவரொட்டி-துண்டுப் பிரசுர பிரச்சார இயக்கத்தால் கடலூர்-விழுப்புரம் மாவட்டம் முழுவதும் நாறிப் போயுள்ளது. கொலைகாரர்களைக் கைது செய்து தண்டிக்கக் கோரி நடந்த இப்பிரச்சார இயக்கத்தைத் தொடர்ந்து சி.பி.எம். கட்சியின் கொலைகாரத் தளபதியான வெங்கடேசன் கைது செய்யப்பட்டுள்ளான். தலைமறைவாகியுள்ள இதர சி.பி.எம். குண்டர்களைக் கைது செய்யக் கோரியும், வி.வி.மு.வினர் மீது பொய் வழக்கு சோடிக்கத் துடிக்கும் போலீசின் சதிகளை அம்பலப்படுத்தியும், வி.வி.மு. தலைமையில், விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் பிற கட்சிகளும் அமைப்புகளும் இணைந்து 25.6.08 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டமும், மாலையில் பொதுக் கூட்டமும் நடத்தின. நீதி விசாரணை கோரியும் குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரியும் காரப்பட்டு மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இப்போராட்டம், சமூக விரோதிகளின் பாசறையாகிவிட்ட சி.பி.எம். கட்சியை இவ்வட்டாரத்திலிருந்தே விரட்டியடிக்கும் போராட்டமாக மாறி, காரப்பட்டு கிராமம் என்றும் முன்னுதாரணமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

— பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# உரத் தட்டுப்பாடு: அரசு – பதுக்கல் வியாபாரிகளின் கள்ளக் கூட்டணி!

பா.ஜ.க.வைச் சேர்ந்த எடியூரப்பா கர்நாடகா மாநில முதலமைச்சராகப் பதவியேற்ற பொழுது, கடவுளின் பெயரால் மட்டுமின்றி, விவசாயிகளின் பெயராலும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார். விவசாயிகளின் நண்பன் என்ற இந்த வேடம், அக்கட்சி பதவிக்கு வந்த பத்து நாட்களிலேயே அம்பலமாகிவிட்டது.

கூட்டுறவு சங்கங்கள் மூலம், நியாயமான விலையில் உரம் வழங்கக் கோரி, ஹாவேரி என்ற ஊரில் விவசாயிகள் ஜூன் 10 அன்று நடத்திய போராட்டத்தை ஒடுக்க கர்நாடகா மாநில போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சித்தலிங்கப்பா என்ற விவசாயி மாண்டு போனார்; அத்துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 12 பேரில், மூன்று விவசாயிகளின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது. ஹூப்ளி, தாவண்கெரே, சாம்ராஜ் நகர் மாவட்டங்கள் உள்ளிட்டு, உரம் வழங்கக் கோரி போராட்டம் நடந்த இடங்களில் எல்லாம் போலீசாரின் தடியடியை விவசாயிகள் எதிர்கொண்டனர்.

கர்நாடகாவில் மட்டுமின்றி, காங்கிரசு கூட்டணி ஆளும் மகாராஷ்டிராவில், அமராவதி, லட்டூர், நாந்தேட், ஹிங்கோலி ஆகிய பகுதிகளிலும் உரத் தட்டுப்பாட்டுக்கு எதிராக விவசாயிகளின் போராட்டங்கள் நடந்துள்ளன. ஆந்திராவில் மேடக், ரங்காரெட்டி உள்ளிட்டு பல்வேறு மாவட்டங்களில் சாலை மறியலும், அதிகாரிகளை ''கெரோ'' செய்யும் போராட்டங்களும் நடந்துள்ளன. தமிழகத்தின் காவிரிப் பாசனப் பகுதியில் நெல் விவசாயிகள் நாற்று பாவிவிட்டு, உரத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறார்கள்.

இந்த உரத்தட்டுப்பாடு எதிர்பாராத விதமாகத் திடீரென ஏற்பட்டதல்ல; விவசாயிகளின் மீது செயற்கையாகத் திணிக்கப்படுகிறது. அதனால்தான் ரூ. 490/- விலையுள்ள ஒரு மூட்டை டி.ஏ.பி. உரம், கள்ளச் சந்தையில் ரூ. 600/-க்கு ''பற்றாக்குறையின்றி''க் கிடைக்கிறது.



போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியான விவசாயி சித்தலிங்கப்பா (உள்படம்); அவரின் படுகொலையைக் கண்டித்து ஹாவேரி நகரில் நடந்த விவசாயிகளின் போராட்டத்தில் தீக்கிரையான அரசு பேருந்து.

பொதுத்துறை வங்கிகள், விவசாயிகளுக்குப் புதிய பயிர்க்கடன் தர மறுத்து வருவதால், விவசாயிகள் கடன் பெற கந்துவட்டிக் கும்பலைத் தவிர வேறு போக்கிடமே இல்லை என்ற நிலைமை உருவாகி விட்டது. கந்துவட்டிக் கும்பலே, உரக்கடையும் நடத்துவதால் அவர்கள் காட்டில் இரட்டிப்பு மழை!

''உப்பு விற்கப் போனால் மழை பெய்கிறது; மாவு விற்கப் போனால் காற்றடிக்கிறது'' என இந்த உரத் தட்டுப்பாட்டைச் சகித்துக் கொண்டு போக விவசாயிகள் தயாராக இல்லை.

உரத் தட்டுப்பாட்டுக்கு எதிரான விவசாயிகளின் போராட்டம், இந்திய விவசாயத்தை நாசப்படுத்தி வரும் தாராளமயத்திற்கு எதிராகத் திரும்பும் நாளும் வெகு தொலைவில் இல்லை! •

ஹாவேரி நகரில் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த விவசாயிகள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும் கோரம்.



மகாராஷ்டிரா மாநிலம் – வாஷிம் பகுதியில் விவசாயிகள் நடத்திய போராட்டத்தின் பின், போலீசு நிலையத்தில் இருந்து உரம் விநியோகிக்கப்படுகிறது.



படிப்பகம்